திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஆகஸ்ட் 2020 விலை ரூ.5/-



கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே

— நம்மாழ்வார்

**கோகுலாஷ்டமி**
**12-08-2020**



# திருமலையப்ப ஸ்வாமி
# வருடாந்திர பிரம்மோத்ஸவம்
# 2020 செப்டம்பர் 19 முதல் 27 வரை

**19-09-2020**
சனிக்கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**20-09-2020**
ஞாயிற்றுக்கிழமை
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ச வாகனம்

**21-09-2020**
திங்கட்கிழமை
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**22-09-2020**
செவ்வாய்க்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**23-09-2020**
புதன் கிழமை
பகல் : மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**24-09-2020**
வியாழக்கிழமை
பகல் : அனுமத் வாகனம்
இரவு : யானை வாகனம்


**25-09-2020**
வெள்ளிக்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**26-09-2020**
சனிக்கிழமை
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**27-09-2020**
ஞாயிற்றுக்கிழமை
பகல் : சக்கரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்




*மாணிக்கம்கட்டி வயிரம் இடைகட்டி*
*ஆணிப்பொன்னால் செய்த வண்ணச்*
*சிறுத்தொட்டில்*
*பேணி உனக்குப் பிரமன்விடுதந்தான்*
*மாணிக்குறளனே! தாலேலோ*
*வையமளந்தானே! தாலேலோ*



நவரத்தினங்களில் தலைசிறந்த மாணிக்கத்தைக் கட்டியும், இடையிடையே வைரக்கற்களைப் பதித்தும், மாற்றுக் குறையாத சுத்தமானப் பொன்னால் செய்யப்பட்ட, அழகிய சிறிய தொட்டில் நான்முகக் கடவுள் பிரம்மா, விரும்பி உனக்கு அனுப்பி இருக்கிறான். முன்னொரு சமயம், அந்தணச் சிறுவனாக வாமன அவதாரம் எடுத்தவனே உனக்குத் தாலாட்டு. ஓங்கி உலகளந்த உத்தமனாய் திரிவிக்கிரம அவதாரம் எடுத்தவனே உனக்குத் தாலாட்டு.

*- பெரியாழ்வார் திரு.1:3:1*



*தத: சங்கா$_2$ச்ச பே$_4$ர்யச்ச*
*பணவாநககே$_3$ாமுக$_2$ா: |*
*ஸஹஸைவாப்$_4$யஹந்யந்த*
*ஸ சப்$_3$த$_3$ஸ்துமுலோऽப$_4$வத் ||*

இதற்குப் பிறகு சங்குகளும் பேரிகைகளும் தம்பட்டம், பறை, கொம்பு முதலிய வாத்தியங்களும் ஒருங்கே முழங்கின. அந்த ஒலி மிகவும் பயங்கரமாக இருந்தது.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–13*



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை"

*"மானிட சேவையே மாதவன் சேவை" எனும் பெரும் நோக்கத்துடன் தி.தி.தேவஸ்தானம் பல்வேறு சமூக நலச் செயல்களை நிர்வகிக்கின்றது. இதில் ஒரு பகுதியாக ஆதரவற்ற சிறார்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கத்துடன் 1943–ஆம் ஆண்டு ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் (திருப்பதி) அறக்கட்டளையை தி.தி.தே. நிறுவியது. இந்த ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் அறக்கட்டளையோடு ஸ்ரீவேங்கடேஸ்வரா ஜலநிதி திட்டம், கல்யாண மஸ்து திட்டம், ஸ்ரீவேங்கடேஸ்வரா தகவல் தொழில் நுட்ப அறக்கட்டளை போன்றவற்றை இணைத்து "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை" யாக வடிவமைக்கப்பட்டுள்ளது.*

**திட்டத்தின் நோக்கங்கள் :**

1) ஆதரவற்ற சிறார்கள், முதியோர், ஆதரவற்றோர் பாக்கியமற்றோர், ஏழ்மையில் வாடும் தாழ்த்தப் பட்ட வகுப்பினர் போன்றோரின் வளர்ச்சி, பாதுகாப்பு நலனுக்காக தர்மசாலைகள், தங்கும் வசதி, இல்லங்கள் ஏற்படுத்துதல். பொருளாதாரத் தில் பின் தங்கிய மாணவ மாணவியர்க்கு பண உதவி அளித்தல்.

2) மாற்றுத் திறனாளிகளுக்கும், மனவளம் குன்றிய நோயாளிகளுக்கும் தகுந்த மருத்துவ உதவிகள் உண்டு பண்ணி அவர்களின் வாழ்வினை மேம் படுத்துவது. குலம், மதம், ஜாதி, வர்க்கம், வர் ணம் போன்ற வேறுபாடுகள் கடைப்பிடிக்காமல் அனைவரையும் சமமாகப் பார்ப்பது.

3) வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங் களின் போதும், தீப்பிடித்தல் போன்ற எதிர்பாராத சம்பவங்கள் நிகழும்போதும் விரைவான உதவி களை மேற்கொள்ளுதல்.

4) காது கேளாத, வாய் பேசாத குழந்தைகளுக்கும் மேற்படி குறைபாடுகளோடு பிறக்கும் சிசுக்களுக் கும் மறுவாழ்வு மையங்களை ஏற்பாடு செய்தல்.

5) மேற்குறிப்பிட்ட குறைபாடுகளோடு கிராமங்களில் உள்ள சிறுவர் சிறுமியர்களுக்குத் தேவையான கருவிகளை அளித்தலோடு, அவர்களுக்குக் கல்வி போதித்தல்.

6) மக்களுக்கு மிகவும் தேவையான குடிநீர் வச தியை ஏற்படுத்தித்தருதல், திருமலை பஞ்சா யத்து, திருப்பதி மாநகராட்சிக்குத் தேவையான நீர் வள ஏற்பாட்டிற்காக தடுப்பணைகளை ஏற்பாடு செய்வது, நீர் சேகரிப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7) புத்தகங்களுடன் இணைய தளம் முதலான அதி நவீன தொழில் நுட்ப உதவிகளோடு நம் நாட்டு வரலாறு மற்றும் பண்பாட்டு கலாச்சார பாரம் பரியத்தை அடுத்தத் தலைமுறைக்கு அளிப்பது.

8) சமுதாய ஒழுக்கம், அற நெறிமுறைகளை வளர்த்து இளைஞர்களிடையே ஆன்ம நேய நம்பிக்கையை உண்டு பண்ணுதல்.

9) உதவிகரமான திருமண நிகழ்வுகள் மூலம் மண மக்களை கௌரவ அபிமானத்துடன், உயர் குடும்ப வாழ்க்கையை வாழும்படி செய்தல்.

10) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கு ஊக்கமளித்திட தனி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் உதவி அளிப்பது.

11) மேலே விவரித்த இலட்சிய சாதனங்களில் இலா பம் ஈட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் பார்ப்பது.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை நன்கொடையாளர்களுக்கு :**

1) இத்திட்டத்திற்கு குறைந்தபட்ச நன்கொடை ரூ.1,000/-

2) ரூ.1,000/-க்கு குறைவாக நன்கொடையளித்தால் எவ்விதத் தகவலும் இன்றி ஸ்ரீவாரி உண்டிக்கணக்கில் செலுத்தப் படும். பெறப்படும் நன்கொடைகளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருப்பு வைத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியை இத்திட்டத்திற்கு உபயோகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நன்கொடையை வழங்குபவர்கள் – "செயலாட்சித் தலைவர், ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயரில் காசோலை / வங்கி கேட்பு வரைவோலையை "பிரதான கணக்காளர், தி.தி.தேவஸ்தானம், திருப்பதி – 517 507" எனும் முகவரிக்கு அனுப்பவும்.




மலர் 51 இதழ் 03

# உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| பரிமுகன் பெருமை - திரு. ஆர். கண்ணன், பெங்களூர். | 7 |
| ஸ்ரீவேதாந்த தேசிகர் போற்றும் ஸ்ரீவராக அவதாரத்தின் மேன்மை திரு. டி.ஆர். ராமஸ்வாமி, சென்னை. | 10 |
| அருளிச்செயல்களில் வாமன அவதாரம் - திருமதி பட்டம்மாள் ஜெகன்நாதன், அம்பத்தூர். | 12 |
| பிரணவ நாயகர் - செல்வி. பி. ஹரிணிப்பிரியா, பரமகுடி. | 15 |
| செம்பொற்கழலடிச் செல்வன் - திருமதி மைதிலி சம்பத், செகந்திராபாத். | 17 |
| ஸ்ரீகுருவாயூரப்பன் மகிமை - திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி. | 20 |
| ஆளவந்தார் அருளிய ஸ்தோத்திர ரத்னம் - ஸ்ரீ உ.வே. கிடாம்பி நாராயணன் ஸ்வாமி, சென்னை. | 23 |
| தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன் - திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி. | 25 |
| இடையன் எங்கள் இறைவன் - அருட்செல்வர். வெ.சுந்தரம் ஐயர், பரமகுடி. | 31 |
| 108 திவ்வியதேச வைபவம் – திருக்குளந்தை - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 35 |
| திருத்தணிகையில் ஆடித்தெப்போத்ஸவம் - திரு. வீ. சீதாராமன், சென்னை. | 38 |
| அன்னமய்யா வாழ்க்கை வரலாறு - திருமதி ராதாராமநாதன், திருப்பதி. | 40 |
| அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின் அருளிச்செயல் : மணமேடையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? - பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 42 |
| ஸ்ரீமத்பாகவத கதை சாகரம் – பிரகலாதனின் உபதேசம் - டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர். | 44 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் - உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 46 |
| ஸம்ஸ்க்ருதம் அறிவோம் - திரு. உ.வே. பி.டி. சேஷாத்திரி, சென்னை. | 48 |
| பகவத் கீதை–இளைய சமுதாயம் – செய்பவரை பொறுத்தே செயல்கள் - திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா. | 50 |
| ஆயுர்வேதம்–வன்னி மரம் -முனைவர் பா. தனஞ்செழியன், சென்னை. | 52 |
| இராசிபலன்– ஆகஸ்ட் 2020 -திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர். | 54 |


## அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : ஸ்ரீநவநீதகிருஷ்ணன் (உற்சவர், திருமலை).

பின்னட்டை : திருவேங்கடவன் திருவடியில் ஸ்ரீவிகனசாசார்யர்.

சிறப்பு ஆசிரியர் :
**திரு. அனில்குமார் சிங்ஹால்,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
பிரதான ஆசிரியர் :
**பேராசிரியர் K. ராஜகோபாலன்,** பி.எச்டி.,
ஆசிரியர் : Dr. V.G.**சொக்கலிங்கம்,**
எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,
தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**

**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri_helpdesk@tirumala.org**


| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்.-பிரதான ஆசிரியர்

# ஸ்ரீவராக சரம சுலோகம்

அவதாரம் என்றாலே மேலிருந்து கீழே இறங்கி வருதல் எனப்பொருள்படும். அதாவது எம்பெருமானான ஸ்ரீமகா விஷ்னு, தான் வீற்றிருக்கும் பரமபதத்தை விடுத்து லீலா வீபூதியான இப்புவிக்கு வருவதையே அவதாரம் என்பர். இதனை நம்மாழ்வாரும் *"ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்து இங்கு பிறந்த"* (3:5:5) என்று பாசுரமிடுகிறார். 'எப்பொழுதெல்லாம் அதர்மம் ஓங்குகிறதோ அப்பொழுதெல்லாம் சாதுக்களைக் காக்கவும், துஷ்டர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டவும் நான் யுகங்கள் தோறும் அவதரிப்பேன்" என்று ஸ்ரீகிருஷ்ண பகவான் கீதையில் கூறுகின்றார். திருமங்கையாழ்வாரும் *"மீனோடாமை கேழலரி குறளாய் முன்னுமிராமனாய்த் தானாய் பின்னுமிராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியும்"* (8:8:10) என்று மகாவிஷ்னுவின் 10 அவதாரங்களைக் குறிப்பிடுகிறார். இப்பத்து அவதாரங்களேயன்றி மகாவிஷ்னு ஸ்ரீஹயக்ரீவர், மோகினி, தன்வந்தரி... என மொத்தம் 24 அவதாரங்கள் எடுத்ததாக பாகவதம் பகர்கின்றது.

இவ்வாறாக, பல அவதாரங்கள் எடுத்த மகாவிஷ்னுவின் அவதாரங்களில் ஸ்ரீராம, ஸ்ரீகிருஷ்ண அவதாரங்களை பூரண அவதாரம் என்று கூறுவர். இவ்விரு அவதாரங்களோடு சேர்த்து ஸ்ரீவராக அவதாரத்தையும் பூரண அவதாரம் என்றே கூற வேண்டும். ஸ்ரீவராக அவதாரமே மிகப்பெரிய அவதாரமும் மிகச் சிறந்த அவதாரமுமாகும். ஸ்ரீவராக மூர்த்தியையே ஞானத்தை அருளக்கூடிய ஞானப்பிரான் என்றும் போற்றுவர்.

ஆண்டாள் அவதாரத்திற்கு மூலக்காரணமாய் அமைந்ததும் ஸ்ரீவராக அவதாரமே என்று பூர்வாசார்யர்களும் கூறுவர். பூமிதேவியே மீண்டும் ஆண்டாளாக அவதரித்து ஸ்ரீவராக சரம சுலோகத்தை "திருப்பாவை"யாக அருளியதாகவும் கூறுவர். திரிவிக்ரம அவதாரத்திலும் கூட எம்பெருமான் பூமி மீது காலூன்றிதான் நிற்பார். ஆனால் ஸ்ரீவராக அவதாரத்திலோ பூமியையே தன் கோரை பற்களால் தாங்கி நிற்பார்.

ஸ்ரீவைஷ்ணவ சாம்பிரதாயத்தில் திருமந்திரம், துவயம், சரம சுலோகத்தை இரகசிய த்ரயம் என்பர். இதில் திருமந்திரமானது பதரிகாசரமத்தில் பகவான் தானே ஆசிரியனாகவும் சீடனாகவும் இருந்த அதாவது நரநாராயணனாக இருந்து வெளியிடப்பட்டது. துவயமானது ஸ்ரீவைகுண்டத்தில் பெரிய பிராட்டிக்கு பகவானால் அருளப்பட்டது.

மூன்றாவதான சரம சுலோகம் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா அர்ஜீனனுக்கு உபதேசித்தது. இதுவே ஸ்ரீகிருஷ்ண சரம சுலோகமாகும். மேலும், இராமாயணத்தில் விபீஷணனுக்கு ஸ்ரீராமபிரான் உபதேசித்தது ஸ்ரீராம சரம சுலோகமாகும். இவ்விரு சரம சுலோகங்களுக்கும் முன்னோடியாகத் திகழ்வதுதான் ஸ்ரீவராக சரம சுலோகமாகும்.

மானிடர் தம்மை அடையும் வழியை கூறும்படி பூமிபிராட்டி ஸ்ரீவராகரை கேட்க, அப்பொழுது ஸ்ரீவராக பெருமான் அருளியதே ஸ்ரீவராக சரம சுலோகமாகும். "எந்த ஒரு பக்தன் பித்தம், வாதம், கபம் என்னும் இம்மூன்று நாடிகள் நன்றாக பணி செய்கின்ற போது தினமும் என்னை பக்தியுடன் நினைக்கின்றானோ, அத்தகைய பக்தன் மரண படுக்கையில் என்னைத் தொழ, நினைக்க இயலா நிலையில், அவனை யார் கைவிடினும் நான் அவனை ஒருபோதும் கைவிடமாட்டேன்" என்று ஸ்ரீவராகர் கூறுகின்றார்.

இதனையே, பெரியாழ்வார் தமது பாடலில் *"எய்ப்பு என்னை வந்து நலியும்போது அங்கு ஏதும் நான் உன்னை நினைக்கமாட்டேன் அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்"* (4:10:1) என்று பாசுரமிடுகிறார். அதாவது, "நோயால் அவதிப்படும் காலத்தில் உன்னை நான் நினைக்க சக்தியற்றவனாகி விடுவேன். ஆதலால், இப்போதே உன் திருநாமத்தைச் சொல்லி வைத்து விட்டேன்" என்கிறார். நாமும் உடல் நலமாக உள்ளபோதே பகவானின் திருநாமங்களை மனம் விட்டு உச்சரிப்போம். மீண்டும் மீண்டும் பிறவா பெரும் பேற்றினைப் பெறுவோம்.

# பரிமுகன் பெருமை

பரி என்றால் குதிரை என்று பொருள். குதிரை முக முடைய எம்பெருமான் பரிமுகன். அவரை ஹயக்ரீவர் என்று அனைவரும் போற்றுகின்றனர். கல்விக் கடவுள் என்று அவருக்கு பூஜை செய்கிறார்கள்.

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், சநாதன தர்மத் திற்கு வாட்டம் ஏற்படும்போதெல்லாம் யுகம் தோறும் பூமியில் அவதரித்து, சாதுக்களை ரக்ஷித்து, அதற்கு இடையூறு செய்யும் துஷ்டர்களை அழித்து, தர்மத்தை நிலைநாட்டுகிறான். அதனை ஒட்டியே எம்பெருமான் ஹயக்ரீவ அவதாரம் செய்தார்.

ஒரு சமயம் மது மற்றும் கைடபர் என்னும் இரு அசுரர்கள், சதுர்முக பிரம்மாவிடமிருந்து, நான்கு வேதங்களையும் அபகரித்துச் சென்று விட்டனர். வேதத்தை இழந்த பிரம்மாவால் ஜகத் ஸ்ருஷ்டி கார்யத்தைச் செய்ய முடியவில்லை. உடனே அவர் எம்பெருமானாகிற ஸ்ரீமந்நாராயணனைச் சரணம் அடைந்து, வேதங்களை மீட்டுத் தரு மாறு பிரார்த்தித்தார். எம்பெருமான் அவரு டைய சரணாகதியை ஏற்றுக் கொண்டு, குதிரை முகம் உருக்கொண்டு, அவ்விரு அசுரர்களுடன் போர் புரிந்து, அவர் களை அழித்து, அவர்கள் கவர்ந்துச் சென்ற வேதங்களை மீட்டு, அவ்வேதங்களைத் தானே பிரம்மாவுக்கு மறுபடி யும் ஓதினார். வேதங்களை பெற்ற பிரம்மா மிகவும் மகிழ்ச்சி அடைந்து ஸ்ரீமந் நாராயணனைப் போற்றிப் புகழ்ந்தார். அதன் பிறகு தன் படைப்புத் தொழிலை முன்பு போல் தொடர்ந்தார். இவ் வரலாற்றை நாம் புராணங்களில் காணலாம்.



உயர்வகை குதிரைக ளுக்கு சக்தி, வேகம், உணர்ச்சி இவைகள் அதிகம். இவை களையெல்லாம் காட்டி யன்றோ, ஸ்ரீஹயக்ரீவர் அசு ரர்களை வென்றார். ஸ்ரீஹயக் ரீவனை, ஹயவதனர், பரிமுகன் என்றும் கூறுவதுண்டு. திருமங்கை ஆழ்வார் பரிமுகன் என்றே தன் பாசுரங்களில் அருளிச் செய்துள்ளார். மஹாலக்ஷ்மியுடன் கூடிய இந்த எம்பெருமானை லக்ஷ்மி ஹயக்ரீவர் என்று நாம் ஸ்தோத் ரம் செய்கின்றோம்.

ஸ்ரீஹயக்ரீவப் பெருமாள் வேதங்களை அசுரர்களிட மிருந்து மீட்டு பிரம்மாவுக்கு உபதேசித்ததால், அவரே ஞானத்துக்கு அதாவது நல் அறிவுக்கு அதிபதி. அவரை "வாக்தேவதை" என்று வழிபடுகிறோம். இந்த எம்பெரு மானை உண்மையான பக்தியோடு வழிபட்டால் வாக்குத் திறமை அதாவது பேச்சு சாமர்த்தியம் என்பதை எளி தில் அடையலாம் என்பது நம்முடைய முன்னோர் களின் தீர்மானம், குழந் தைகள் ஹயக்ரீவரை வழிபட்டால் நல்லக் கல்வித்திறன் பெறலாம்.

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீஹயக்ரீவர் அருள் பெற்றதை சற்றே அநுபவிப்போம்.

காஞ்சிபுரம் தூப்புல் என்ற விடத்தில் திருவேங்கடமுடையான் திருமணி அம்சமாக அவதரித்த ஸ்வாமி, ஒரு சமயம் கடலூ ருக்கு அருகிலுள்ள திருவ ஹீந்திரபுரம் என்னும் திவ்ய தேசத்துக்கு எழுந்தருளினார். அங்குள்ள ஔஷதகிரியில், தன்னுடைய மாமாவும் ஆசார்ய ருமான ஸ்ரீஅப்புள்ளார் அநுகிர ஹித்த கருட மந்திரத்தை ஜபித்துக் கொண்டிருக்கும்போது, எம்பெரு மான் திருவடி என்று போற்றப் பெறும் ஸ்ரீகருடாழ்வார் அவர் முன்னே தோன்றி, ஸ்வாமிக்கு

திரு. ஆர். கண்ணன்,
பெங்களூரு,
9343583416



ஸ்ரீஹயக்ரீவ மந்திரத்தை உபதேசித்து, அதனை இடைவிடாமல் ஜபம் செய்து வருமாறு உபதேசித்தருளினார். ஸ்வாமி அவ்வண்ணமே ஜபம் செய்து வருகையில், ஸ்ரீஹயக்ரீவப் பெருமாள் அவர் முன்னே தோன்றி அவரைக் கண்குளிரக் கடாக்ஷித்தார். ஸ்வாமியின் ஞானம் பெருக்கெடுத்து ஓடலாயிற்று. ஸ்வாமியின் திருமுகத்தினின்றும் ஸ்ரீஹயக்ரீவ ஸ்தோத்ரம் வெளிப்பட்டது. இதுவே ஸ்வாமி பின்னால் இயற்றிய நூற்றுக் கணக்கான நூல்களுக்கும் முன்னோடி. ஸ்வாமி ஸ்ரீஹயக்ரீவ மந்திரத்தை ஜபித்த இடத்தில் பக்தர்கள் கட்டிய மண்டபத்தை, ஸ்ரீஹயக்ரீவர் சன்னிதியின் அருகில் காணலாம்.

ஸ்வாமி தேசிகன் பெற்ற ஞானமும் இயற்றிய நூல்களெல்லாம் ஸ்ரீஹயக்ரீவர் அருளாலே என்று தன்னுடைய ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய சாரத்தின் முடிவிலே அருளிச் செய்துள்ளார்.

*"வெள்ளைப் பரிமுக தேசிகராய் விரகால் அடியோம்*
*உள்ளத்து எழுதியதை ஓலையில் இட்டனம்"*

வெள்ளைக்குதிரை போன்ற முகமுடைய ஸ்ரீஹயக்ரீவர் ஆசார்யராக இருந்து, தன் க்ருபையால் அடியேனின் உள்ளத்தில் தோற்றுவித்த விஷயங்களையே, நான் ஏட்டில் (ஓலைச் சுவடியில்) எழுதினேன். ஆதலால் என் நூல்களுக்கு எந்தவித தோஷமும் இல்லை என்கிறார் ஸ்வாமி. ஸ்வாமி தேசிகன் தன்னுடைய ஸ்ரீஹயக்ரீவ ஸ்தோத்ரத்தை அத்புதமாகத் தொடங்குகிறார்.

*"ஜ்ஞானானந்தமயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம்।*
*ஆதாரம் ஸர்வ வித்யாநாம் ஹயக்ரீவம் உபாஸ்மஹே ॥"*

ஸ்ரீஹயக்ரீவர் எல்லாக் கலைகளுக்கும் உறைவிடம். ஞானம் (நல்அறிவு) மற்றும் ஆனந்தம் (துன்பமே கலக்காத மகிழ்ச்சி) இவற்றின் உருவானவர். தூய்மையான பளிங்குக் கற்களின் வெண்மை நிறத்துடன் கூடிய திருமேனி உடையவர். இப்பேற்பட்ட எம்பெருமானை



## ஸ்ரீமத் பாகவதம் வினாக்கள்


திருமதி என். ஹேமா,
திருப்பதி.
77020 15076


1. யசோதா தேவிக்குப் பிறந்த பெண் சிசுவின் பெயர் என்ன?
2. கம்சன் பெண் சிசுவை கொல்ல முயற்சித்த போது என்ன நடந்தது?
3. ஸ்ரீஹரி இராமாவதாரத்தில் பால காண்டத்தில் யாரை சம்ஹாரம் செய்யதார்?
4. இராமாவதாரத்தில் த்ரிவக்ரே மந்தரே பாகவதத்தில் யாராக இருந்தாள்?
5. வசுதேவன் யமுனை நதியில் கிருஷ்ணனை கொண்டு செல்லும் போது குடையாக வந்தவர் யார்?
6. ஸ்ரீஹரிக்கு விருப்பமான விரதம் எது?
7. சுதாமா கிருஷ்ணருக்கு எதை கொடுத்தான்?
8. இந்திரனின் அவதாரம் யார்?
9. பிரகஸ்பதியின் அவதாரம் யார்?
10. ருக்மிணி யாருடைய அவதாரம்?

விடைகளுக்கு 37ம் பக்கம் பார்க்க...

நாம் வழிபடுவோம் என்கிறார் ஸ்வாமி. (ஆகவே ஞானம், ஆநந்தம் மற்றும் கலைகளில் தேர்ச்சிப் பெற விரும்பினால் ஸ்ரீஹயக்ரீவரை வழிபட வேண்டும் என்றபடி) ஸ்ரீஹயக்ரீவரை சரண் அடைந்தால், அவர் கருணைக்குப் பாத்திரமாகி, நல்ல விசேஷ ஞானத்தைப் பெறலாம் என்று மற்றொரு சுலோகத்தாலே ஸ்வாமி அருளிச் செய்கிறார்.

இந்த ஸ்ரீஹயக்ரீவ ஸ்தோத்ரம் 33 அத்புதமான சுலோகங்களைக் கொண்டது. இதனை அநுதினமும் உள்ளன்போடு பாராயணம் செய்தால் சிறந்த கல்வித் திறனும், வாக்வன்மையும் பெறலாம். திருமங்கை ஆழ்வார் தன்னுடைய பெரிய திருமொழியில் ஸ்ரீஹயக்ரீவரை இரண்டு இடங்களில் குறிப்பிடுகிறார்.

*“வசையில் நான் மறை கெடுத்த அம்மலரயற்கு அருளி, முன் பரிமுகமாய் இசைகொள் வேத நூல் என்று இவை பயந்தவனே!”* (பெரிய.திரு.5–3–2) என்றும், *“பன்னு கலை நால் வேதப் பொருளையெல்லாம் பரிமுகமாய் அருளிய எம்பரமன்”* (பெரிய.தி.7–8–2) என்றும் அருளிச் செய்துள்ளார்.

கர்நாடக மாநிலம் மைசூரு நகரில் நிறுவப்பட்டிருக்கும் ஸ்ரீபிரம்ம தந்த்ர ஸ்வதந்த்ர பரகாலஸ்வாமி மடத்தின் ஆராத்ய தெய்வம் ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவ ஸ்வாமி தான். திருவஹீந்திரபுரம், சென்னை நங்கை நல்லூர், வில்லிவாக்கம் மணிமண்டபம், செட்டிபுண்யம் மற்றும் பல நகரங்களில் ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவ ஸ்வாமி அருள் பாலித்து வருகிறார்.

நாம் எல்லோரும் குறிப்பாக குழந்தைகள் அவசியம் ஸ்ரீஹயக்ரீவரை சேவிக்க வேணும். அவர் ஸ்தோத்ரத்தை மனதில் நிலை நிறுத்த வேணும். அவர் அருளால் சிறந்த ஞானம் மற்றும் ஆனந்தம் கிட்டும் என்பது திண்ணம்.

## கண்ணனின் அற்புதங்கள்

### பூமி தேவியின் முறையீடு :

கட்டுக்கடங்காத அசுரசக்திகளின் பெருக்கத்தினாலும் ஆதிக்கத்தினாலும் பூமா தேவி அல்லலுற்று பசுவின் வடிவையேந்தி பிரம்ம தேவனிடம் சென்று பூமி பாரத்தைத் தாங்க முடியவில்லை என்று கூறி கண்ணீர் விட்டு அழுதாள். பிரம்மதேவன், பூமாதேவி, சிவபெருமான் மூவரும் பாற்கடலில் துயிலும் பரந்தாமனிடம் சென்று முறையிட்டனர். அப்போது திருமால் பூமியின் பாரத்தைப் போக்க நான் யாதவ குலத்தில் வசுதேவருக்கும் தேவகிக்கும் மகனாகப் பிறக்கப் போகிறேன். தன் அம்சமான ஆதிசேஷன் பலராமனா கவும், விஷ்ணு மாயையும் அவதாரம் செய்யப் போவதாக தெரிவித்தார்.



### ஒருத்தி மகனாய் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் வளர்ந்தவன் :

காலக்கிரமத்தில் தேவகிக்குப் பிறந்த ஆறு குழந்தைகளையும் (மக்கள் அறுவரைக்) கல்லிடை மோதிக் கொன்றான். முரளிதரனின் ஆணைப்படி மாயையைப் பெண் குழந்தையாய் யசோதை வயிற்றில் பிறக்கும்படி செய்தார்.

அந்த நள்ளிரவில் அனைவரையும் மயங்கச் செய்து சிறையிலிருந்து வெளிவந்து வசுதேவன் கையில் ஏறி ஆயர்பாடி சென்று அடைந்தார். முன்பே நந்தகோபருக்கு பெண்ணாகப் பிறந்திருந்த காளியை, அந்த இரவிலேயே தேவகி பெற்றதாக கூறுமாறு செய்தார். இவ்வாறு ஒருத்தி மகனாய் பிறந்து ஒருத்தி மகனாய் ஒளிந்து வளர்ந்தவன் கண்ணன்.



கண்ணனின் அற்புதங்கள் எனும் தலைப்பில் கட்டுரை வடிவில் வழங்கியவர் திரு.வீ.சீனிவாசன், இறவாங்குடி, 9842812243

# ஸ்ரீவேதாந்த தேசிகர் போற்றும் ஸ்ரீவராக அவதாரத்தின் மேன்மை





– திரு. டி.ஆர். ராமஸ்வாமி, சென்னை.
98845 01863

“அன்றிவ்வுலகினை ஆக்கி அரும் பொருள் நூல் விரித்து
நின்று தன்நீள் புகழ் வேங்கட மாமலை மேவிப் பினும்
வென்றிப் புகழ் திருவேங்கட நாதன் எனும் குருவாய்
நின்று நிகழ்ந்து மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே”

ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் தலை சிறந்த ஆசார்யர்களில், ஸ்ரீமத் வேதாந்த தேசிகரும் ஒருவராவர். இவர் காஞ்சிபுரம் அருகே உள்ள, தொண்டை மண்டல திவ்ய தேசங்களில் ஒன்றான “திருதண்கா” எனும் தூப்புல் கிராமத்தில் விபவ வருடம் புரட்டாசி திருவோணத்தில் அவதரித்தார். இவரை ஸ்ரீஆதிவராஹ க்ஷேத்ரம் என்று போற்றப்படும் திருமலையில் கோயில் கொண்டுள்ள திருவேங்கடமுடையானின் திருமணி அவதாரம் (கண்டாவதாரம்) என்று பெரியவர்கள் போற்றுகின்றனர்.

வேதாந்த தேசிகன் நூறு வருஷங்களுக்கு மேல் வாழ்ந்திருந்தார். நூறு க்ரந்தங்களுக்கு மேல் ஸமஸ்க்ருதம், தமிழ் மணிப்ரவாள நடையில் அருளிச் செய்துள்ளார்.

ஸ்ரீரெங்கநாதரின் நியமனப்படி ஸ்ரீரங்கத்தில் உள்ள தசாவதார ஸந்நிதியில் கோயில் கொண்டுள்ள மூர்த்திகளை, ஸ்ரீவேதாந்த தேசிகன் தமது தசாவதார ஸ்தோத்ரத்தில் மங்களாசாஸனம் செய்துள்ளார். அதில் வராஹ அவதார வைபவம் பின்வருமாறு :

“கோபாயேத் அநிசம் ஜகந்தி குஹநா
போத்ரீ பவித்ரீக்ருத
ப்ரஹ்மாண்ட: ப்ரளயோர்மி கோஷ குருபிர்
கோணாரவைர் குர்க்குரை: ।

*யத் தம்ஷ்ட்ராங்குர கோடி காட கடநா*
*நிஷ்கம்ப நித்ய ஸ்த்திதி:*
*ப்ரஹ்ம ஸ்தம்ப மஸௌத் அஸௌ பகவதீ*
*முஸ்தேவ விச்வம்பரா ||"*

முன்னொரு காலத்தில் ப்ரளயம் ஏற்பட்ட பொழுது பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் ஆகிய மூன்று லோகங்களும் மிகவும் பாதிக்கப்பட்டு, பூமி சமுத்ரத்தின் அடியில் அமிழ்ந்தது. இதனால் ஸ்ருஷ்டி தடைபட்டு விடும் என்பதால் பிரம்மாவும், அப்போது இருந்த ஸ்வாயம்புவ மனுவும், பகவான் நாராயணனிடம் பூமியை மீட்டுத் தர பிரார்த்தித்தனர்.

பகவானும் சிறு பன்றியாக உருவெடுத்து மேலும் மேலும் பெரிதாக வளர்ந்து, தனது முகரும் சக்தியால் குர், குர் என்று கர்ஜித்தபடி ஸமுத்ர கரையை அடைந்தார். பிரம்மாதியர்கள் அவரை ஸ்ரீவராஹ மூர்த்தி என்று உணர்ந்துக் கொண்டு போற்றிப் புகழ்ந்தனர்.

வராஹ மூர்த்தியும் சமுத்ரத்தின் அடியில் சென்று, அங்கே இருந்த பூமாதேவியை தன் நீண்ட கோரைப் பற்களின் நுனியால் எடுத்து வருகிறார். பூமா தேவியும் இறுகப் பற்றிக் கொண்டாள்.



மேலே வருகையில் ஹிரண்யாக்ஷன் என்ற அசுரன் அவரை மறித்து, போருக்கு அழைத்தான். போரில் பெருமாள் அவனை வதம் செய்தார். மேலே வந்ததும் அவரது மூச்சுக் காற்றும், நீர்த்திவலைகளும் அனைவரின் மேல்பட்டு அனைவரும் தூய்மையானார்கள்.

பூமி தேவியும் அவரை வணங்கி ஸ்தோத்ரம் செய்தாள். ஸ்ரீவராஹரும் பூமியை ஏழு த்வீபங்களாக வகுத்து நீரின் மேல் நிலைக்கச் செய்தார். பிரம்மாவிடம் ஸ்ருஷ்டியை தொடருமாறு பணித்தார். இதுவே வராஹ அவதார புண்ய கதை.

இதையே ஸ்ரீவேதாந்த தேசிகன் தனது வராஹ அவதார வைபவத்தில் மிக அழகாக வர்ணித்துள்ளார்.

ஸ்ரீவராஹரது மூச்சுக் காற்றில் உண்டான குர்குர் எனும் ஒலியானது, ஊழிக்காலத்தில் ஆழிப் பேரலைகள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டது போல் இருந்ததாம். பூமியானவள் வராஹ மூர்த்தியின் கோரைப் பற்களில் ஒட்டிக் கொண்டிருந்த காட்சி, ஒரு பன்றியின் கோரைப்பல்லில் கோரைக் கிழங்கு ஒட்டியிருப்பது போல் இருந்ததாம். மேலும், ஸ்ரீவராஹ மூர்த்தியின் மூச்சுக் காற்றானது உலகைக் காத்தருளும்படி வேண்டுகிறார். மேற்கண்ட ஸ்தோத்ரத்தை நாம் தினமும் பாராயணம் செய்து, ஆதிவராஹ மூர்த்தியின் அநுக்ரஹத்தையும் திருவேங்கடமுடையானின் திருவருளையும் பெறலாமே.

திருமலை திவ்விய க்ஷேத்திரத்தில் ஸ்ரீவராஹ ஸ்வாமி திருவேங்கடமுடையானுக்கு இடம் கொடுத்ததாக புராணங்கள் கூறுகின்றன. இங்கு மஹாலக்ஷ்மி தாயாரை ஸ்ரீவராஹர் மடியில் தாங்கியிருக்கும் வடிவில் கொலுவாகியுள்ளார்.

திருமலையில் இன்றும் ஸ்ரீவராஹருக்கே முதல் பூஜை நடைபெறுகிறது. இந்த கோயிலின் முன்பு இருக்கும் புஷ்கரணி "வராஹ புஷ்கரணி" என்றும் அழைக்கப்படுகிறது. ஸ்வாமி தரிசனத்திற்கு வருபவர்கள் முதலில் ஸ்ரீவராஹரை தரிசித்தப் பின்னரே திருவேங்கடமுடையானை தரிசிப்பர்.

ஸ்ரீவராஹரின் திருநட்சத்திரத்தில் அவரை பூஜித்து நாம் நம் வாழ்வில் சகல இன்பமும் அடையலாம்.

# அருளிச் செயல்களில் வாமன அவதாரம்

திருமதி பட்டம்மாள் ஜெகன்நாதன், அம்பத்தூர்,
9952929685.




திருமாலின் தசாவதாரத்தில் ஐந்தாவது அவதாரமாக பகவான் எடுத்த அவதாரம் வாமன அவதாரம். மஹாபலி சக்ரவர்த்தியின் கர்வத்தை அழிப்பதற்காக எடுத்த முதல் மனித அவதாரம். அவனிடம் மூவடி மண் கேட்டு மூவுலகங்களையும் அளந்தவன். மகாபலியின் அட்டகாசங்களால் தேவர்கள் அவதிபட்டபோது தேவர்களின் தாய் அதிதி, பகவானிடம் வேண்டி உயர்ந்த விரதமான “பயோ விரதத்தின்” பலனாக ஆவணி திருவோண நட்சத்திரத்தில் பகவானையே மகனாகப் பெற்றாள். சிறு பிராமணச் சிறுவனாய்த் தோன்றி, மகாபலியிடம் தன் காலால் மூன்றடி மண் கேட்டு பிறகு, அவனே ஓங்கி உலகளந்த உத்தமனாய் வளர்ந்து, மூன்றாவது அடியால் மஹாபலியை பாதாள லோகத்தில் அழுத்திய அவதாரம். மஹாபலியின் வள்ளல் தன்மையை எடுத்துக்காட்டவும், அவன் ஆணவத்தை அழிக்கவும் எடுத்த அவதாரம். தன் குலகுரு சுக்ராச்சாரியர் அறிவுரையை சட்டை செய்யாது, தான் கொடுத்த வாக்கை மீறாமல் நடந்ததால் அவன் புகழ் எவ்வாறு உயர்ந்தது என்பதை திருமால், தான் பெரிய உருவத்தை எடுத்து நமக்குக் காட்டினான். திருமால் இந்த அவதாரத்தில் கர்வபங்கம் தான் செய்தான் அழிவு ஏதும் இல்லை. இனி, பாசுரத்தில் வாமன அவதாரத்தை ஆழ்வார்கள் போற்றிப் புகழ்வதை காண்போம்.

*“குறட்பிரமசாரியாய் மாவலியைக் குறும்பதக்கி அரசுவாங்கி”* (பெரியாழ்வார் திருமொழி 4–9–7) வாமன அவதாரமெடுத்து மகாபலியிடம் சென்று அவன் கர்வத்தைப் போக்கி, மூவுலகங்களையும் இந்திரனுக்குக் கொடுத்த பெருமாள் திருவரங்கத்தில் பள்ளிக் கொண்டிருக்கிறார் என்கிறார் பெரியாழ்வார்.

*“மன்னன் தன் தேவி மார் கண்டு மகிழ்வெய்த*
*முன் இவ்வுலகினை முற்றும் அளந்தவன்”*

*-பெரியாழ்வார் திருமொழி 2-5-9*

வாமன அவதாரம் எடுத்தபோது இவன் அழகு பார்ப்போரை எல்லாம் மயங்க வைத்தது. மகாபலியின் மனைவியரும் அவன் அழகில் மகிழ்ந்தனர் என போற்றுகிறார் பெரியாழ்வார்.

ஆண்டாள் தன் திருப்பாவையில் மூன்றாவது பாட்டில் *“ஓங்கி உலகளந்த உத்தமன்”* என்றும், 17ஆம் பாட்டில் *“அம்பரம் ஊடு அறுத்து ஓங்கி உலகு அளந்த உம்பர் கோமான்”* என்றும், 24 ஆம் பாட்டில் *“அன்றிவ்வுலகமளந்தாய் அடி போற்றி”* என்றும் வாமன அவதாரத்தைப் போற்றுகிறாள்.

திருமழிசையாழ்வார் தன் திருச்சந்தவிருத்தம் 74ல் வாமனனாக அவதரித்த பெருமானுடைய இரு திருவடிகளையும் உபாயமென்றும், உபமேயமென்றும் தெரிந்து கொண்டு அவற்றை வணங்கினால் ஆத்மாவை பற்றிய உண்மை அறிவோடு கூட பக்தியாகிற செல்வமும் முழுமையாக உண்டாகும் என்கிறார்.





திருமங்கையாழ்வார் தன் பெரிய திரு மொழியில் திருக் காழிச் சீராம விண் ணகர திருவிக்ர மனை பாடும்போது (3–4) திருவிக்ரமன் தன் மூன்றாம் அடியை மாவலி தலைமீது வைத்து, அவனை பாதாளமாகிற சிறையில் வைத்த பெருமானு டைய திரு வடிகளைச் சேர வேண்டி இருப்பவர்கள் காழிச்சீராம விண்ணகரம் சென்று திருவிக்ரமனையும் தாயார் மட்டவிழ் குழலியையும் வணங்கி அருள் பெறலாம் என்கிறார்.

நடுநாட்டு திருப்பதியான திருக்கோவலூர் பெரு மாள் திருவிக்ரமனை இடைச்சுழி ஆயனை பாடும்போது உலகத்தவர் இம்மைப் பயன்களைப் பெறுவதற்காக திரண்டு வந்து துதிக்க, ஒருவருக்கும் காண ஒண்ணா தவனாய் எங்கும் நிறைந்து இருப்பவர் என்று சிறப் பிக்கிறார். மேலும், காஞ்சிபுரத்தில் திருஊரகத்தில் உலகளந்த பெருமாளை பாடும்போது (திருநெடுந் தாண்டகம்–8) அடியார்கள் மனதில் வீற்றிருக்கும் எம்பெருமான் தான் திருக்கோயிலிலும் இருந்து நம்மை ரட்சிக்கிறார் என்கிறார்.

பொய்கை ஆழ்வார் தன் முதல் திருவந்தாதியில் (36) **''பொன்னாழிக் கையால் நீ மண்ணிரந்து கொண்ட வகை''** சம்சாரிகளுக்கு தன் உடலை சிறியவனாக சுருக்கிக் கொண்டு, நீ மாவலியிடம் பூமியை யாசித்த எளிமை குணத் தில் ஈடுபட்ட ஆழ்வார் “இதென்ன மாயம்” என்று மோகித்து நிற்கிறார்.

பூதத்தாழ்வார் தன் இரண் டாம் திருவந்தாதியில் இவ்வுலகை மூவடி யாலே அளந்து மூவடி நிலத்தை யாசித்தும் (5), **''கொண்ட துலகம் குறளுருவாய்''** (18) வாமன வடிவில் மாவலியிடம் சென்று யாசித்து பூமி முதலிய உலகங் களை ஆக்கிரமித்தும், **''நீ யன்று லகளந் தாய் நீண்ட திருமாலே!''** (30) உலகத்தை இரண்டடியால் அளந்ததை எண்ணி எண்ணி புகழ்கிறார்.

பேயாழ்வார் தன் மூன்றாம் திருவந் தாதியில் **''அடிவண்ணம் தாமரை அன்று லகம் தாயோன்''** (5) உலகங்களைத் தாவியளந்த பெருமானுடைய திரு வடிகள் தாமரைப்போல சிவந்திருந்த அழகை அனுபவிக்கிறார். **''மண்ண ளந்த பாதமும்''** (9) உலகளந்த திருவடிகளும் தாமரை மலரை ஒக்கும் என்கிறார். **''வாய் மொழிந்து வாமனனாய் மாவலிபால் மூவடி மண் நீயளந்து கொண்ட நெடுமாலே''** (18) வாமன னாகி மாவலியிடம் சென்று, மூவடி நிலத்தை (இரந்து பெற்று) அதை அளந்து கொண்ட உன் திருவடிகளில் எனக்கு நித்திய கைங்கர்யத்தைத் தந்தருளி உன்னு டைய அனுபவத்துக்கு இடையூறான சம்சார பயத்தை யும் மாற்றியருள வேண்டும் என்கிறார்.

நம்மாழ்வார் தன் பெரிய திருவந்தாதியில் **''சீரால் பிறந்து சிறப்பால் வளராது பேர் வாமனாகாக்கால் பேராளா''** (16) மகானுபாவனான பெருமானே சிறப்புடன் பிறந்தான், சிறப்புடன் வளர்ந்தான் என்று புகழும்படி இல்லாமல் வாமனன் என்னும் குள்ளனாக அவதரித்து பூமியை தானமிக்கு பெற்றது மாயம்! நின் மாயங்களை நான் தெரிந்து கொள்ளும்படி கூறுவாய் என பெருமாளை கேட்கிறார்.

திருவாய்மொழி 2–2–3 ல் சிவனை, பிரமனை, பெரிய பிராட்டி யையும் வேறுபாடு இன்றி அயர் வுறும் அமரர்கள் தொழும்படி தன் திருமேனியில் வைத்துள்ள வன் குள்ள உருவம் கொண்டு உலகத்தை அளந்து கொண்டு மிகப்பெரிய தெய்வத்தைக் காட் டிலும் உயர்ந்த தெய்வம் உள் ளதோ என சிறப்பித்துப் பாடு கிறார். 2–7–6 ல் திருவிக்ரமனாய்



ஸ்ரீ புஷ்பவல்லி தாயார் ஸமேத ஸ்ரீ தேஹளீச பெருமான் (ஆயனார்)
திருக்கோவலூர், விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு

வந்த பெருமாள் எல்லார் தலைகளிலும் திருவடிகளை வைத்த சுசீலனின் திருவருள் என்னைப் பற்றி அவனிடம் தள்ளியது. ஆகவே நான் எந்த நிலையிலும் திருவிக்ர மனைப் பாடுவேன் என்கிறார்.

3–8–2 ''ஞாலம் கொள்வான் குறளாகிய வஞ்சனே'' மகாபலியால் கொள்ளப்பட்ட பூமியை மீட்கக் குறுகிய வடிவம் கொண்ட பிரம்மசாரியாய் வந்து, சிறுகாலை காட்டிப் பெரிய காலாலே உலகை அளந்தவனே உன்னு டைய இப்பெருமைகளை எல்லாம் என் நாக்கு சொல் லித் துதிக்க விரும்புகிறது என்கிறார்.

4–7–2 பூவுலகை அளந்துகொண்ட வாமனனே, குற் றம் இல்லாத அனுபவிக்க அனுபவிக்க குறைவு படாத ஆனந்தக் கடலை கொடுக்கின்ற வள்ளலே! என்றென்று நள்ளிரவிலும், நல்ல பகலிலும் நான் அழைத்தால் கள்ள மாயனே! உன்னை என் கண்கள் காணும்படியாக நடந்து வந்து திருவருள் புரிய வேண்டும் என்கிறார் வைணவ குலபதி நம்மாழ்வார். இவ்வாறு ஆழ்வார்களால் அனு பவித்த வாமனனை, திருவிக்ரமனை காஞ்சிபுரத்தில் உலகளந்தப் பெருமாளாக தனது வலது கரத்தால் ஒரு விரலைக் காட்டியபடி, வலது கால் மாவலி தலைமேல் கால் வைத்த படியும், இடது காலை உயரத் தூக்கியும் சேவிக்கலாம்.

நடுநாட்டு திவ்ய தேசமான திருக்கோவலூரில் தனது வலது காலை உயரத் தூக்கியபடியும், இடது திருவடியை பூமியில் பதித்தும், வலது கரத்தில் சங்கும், இடது கரத்தில் சக்கரமும் கொண்ட பெருமாளை சேவித்து மகிழலாம். சோழ நாட்டு காழிச்சீராம விண்ண கரத்தில் சிறிய திருமேனியாய் இடது காலை தூக்கியும் வரம் தரும் வரத ஹஸ்தத்துடன் சேவித்து அருள் பெற லாம். மேலும், திருநீர் மலையில் உலகளந்த பெருமா ளாகவும் திருவரங்கத்தில் சிறிய மூர்த்தியாக வாமன வடிவில் கையில் குடையுடன் திருக்குறளப்பனாகவும் சேவித்து மகிழலாம்.

திருவோண நன்னாளில் ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி வணங்கி, அனைவரும் நீங்காத செல்வமும் நிறைந்து வாழ்வர் என்பது அசைக்க முடியாத உண்மை!

## கண்ணனின் அற்புதங்கள்

**பகைவருக்கும் அருளும்பண்பாளர் :**

**கண்ணனைக் கொல்ல பூதனை என்னும் அரக்கி அழகியப் பெண் உருவில் வந்து, மார்பகத்தில் விஷம் தடவிக் கொண்டு வந்தாள். அவளை உயிருடன் பாலையும் சேர்த்து கண்ணன் திருப்பவள வாயால் உண்டார். அந்தக் கொடியக் பாதகியின் தீயச்சிந்தனையைக் கருதாமல் அவளுக்குச் சாயுச்ச பதம் அளித்தார். பகைவருக்கும் அருளும் பண்புள்ளவர் கண்ணன்.**

**மாயச் செயல் புரிந்தவன் :**

**ஜனார்த்தனா! நீ ஆயர்களின் வீடுகளில் வெண்ணெய், நெய், பால் முதலியவற்றைத் திருடும் போது பார்த்தப் பெண்கள் உன்னை அங்கேயே கயிற்றால் கட்டிப் போட்டு விட்டு, நந்தகோபன் திருமாளிகைக்குச் சென்று யசோதை யிடம் உன்னைப் பற்றி முறையிட்டனர். அப்போது நீ அருகில் ருக்கும் தொட்டிலில் குறட்டை விட்டுக் கொண்டு தூங்கினாய். அவர்கள் உன்னைப் பார்த்து பயந்து விட்டு உன் தாய் யசோதையிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, பொறுக்க வேண்டும் மாதாவே என்று வேண்டி நிற்குமாறு மாயச் செயல்களைச் செய்த மாதவனே, உன் திருவடியே சரண்.**




# பிரணவ நாயகர்

"ஓம்" என்று சொன்ன பிறகே "கணேசாய நம:" "நாராயணாய நம:" என்கிறோம். இதில் "ஓம்" என்ற பிரணவ (பிரணவம் என்றால் என்றும் புதியது என்று பொருள்) மந்திரம் அ, உ, ம் என்ற எழுத்துக்களை இணைத்தால் வரும்.

"அ" என்பது படைப்பதையும், "உ" என்பது காப்பதையும், "ம்" என்பது அழித்தலையும் குறிக்கும். "அ" என்பது முதலெழுத்து. இது வாழ்வின் ஆரம்பத்தைக் குறிக்கும். "உ" என்பது உயிரெழுத்துக்களின் வரிசையில் ஐந்தாவதாக வருகிறது. இது பஞ்ச இந்திரியங்கள் எனப்படும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து உறுப்புக்களைக் குறிக்கிறது. இவற்றை மனிதர்கள் அடக்கி வைத்துக் கொண்டால் ஆயுள் அதிகரிக்கும். ஆயுள் கூடக் கூட ஒருவன் துவங்கிய செயல் தடையின்றி முழுமையாக நிறைவேறும். "உ" என்பது காத்தல் எழுத்து. இது இறைவன் நம்மைப் பாதுகாப்பதைக் குறிக்கும். நமது செயல்பாடுகள் அனைத்திற்கும் பாதுகாப்பு இருக்க வேண்டும். ஒரு கடிதம் எழுதத் துவங்கும்போது, அதில் எழுதப்பட்டு உள்ள விஷயம், நமக்கும் அது சென்று சேருபவருக்கும் பாதுகாப்பையும் நன்மையையும் தர வேண்டும். அது மட்டுமல்ல! ஓம் என்ற மந்திரத்தில் "அ", "ம்" என்ற மந்திரங்களுக்கு நடுவே பாதுகாப்பாக "உ" இருக்கிறது. இதைப் போலவே நாமும் கடவுளிடம் பாதுகாப்பை வேண்டி "உ" என எழுதுகிறோம்.

*''சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் ப்ரஸந் ந வதநம் த்யாயேந் ஸர்வ விக்நோபசாந்தயே''.* சுக்லாம் பரதரம் என்றால் வெள்ளை உடை உடுத்தியவர் சிவன், சரஸ்வதிக்குக் கூட வெள்ளை உடை தான். மனிதர்கள் உட்பட எல்லாருக்குமே வெள்ளை வேட்டி தான். "விஷ்ணும்" என்றால் எங்கும் பரவியிருப்பவர். எல்லா தெய்வங்களும் இப்படி எங்கும் பரவியே இருக்கிறார்கள். "சசிவர்ணம்" என்றால் பால் நிலா போன்ற நிறம். இதுவும் கூட பல தெய்வங்களுக் கும் பொருந்தும். "சதுர் புஜம்" என்றால் நான்கு கைகள். அநேக தெய்வங்கள் நான்கு கைகளுடன் இருக்கிறார்கள். "ப்ரஸந்ந வதநம்" என்றால் "ஒளிவீசும் முகம்". இதுவும் எல்லாருக்கும் பொருந்தும். ஆக, இதை எப்படி விநாயகர் மந்திரம் என சொல்ல முடியும் என்று புரியாமல் கேட்கலாம். கடைசி பதமான *''விக்நோப சாந்தயே''* என்பதற்கு தடைகளை நீக்குபவர் என்று பொருள். ஆம்... தடைகளை நீக்குபவர் விநாயகர் மட்டுமே. "த்யோயேந்" என்றால் வணங்குதல். இனிமேல் இந்த எளிய மந்திரத்தை சொல்லி விநாயகரை வணங்கிய பின் பணியைத் துவங்குங்கள் அது வெற்றிகரமாக முடியும்.

சுமுகர் – அழகான முகம் கொண்டவர். ஏகதந்தர்–ஒற்றைத் தந்தம் கொண்டவர். கபிலர் – பழுப்பு நிறமானவர். கஜகர்ணர் – யானைக் காது உடையவர். லம்போதரர் – பெரிய வயிறு கொண்டவர். விகடர் – புத்திக்கூர்மை உடையவர். விக்னராஜர்–தடைகளை அகற்றுபவர். விநாயகர் – மேலான தலைவர். தூமகேது – தூமகரன் என்னும் அசுரனை வென்றவர். கணாத்யட்சர் –பூதகணங்களின் தலைவர். பலச்சந்திரர் – பிறை நிலாவை சூடியவர். கஜானனர் – யானை முகம் கொண்டவர். வக்ரதுண்டர் – வளைந்த துதிக்கை உடையவர். சூர்ப்பகர்ணர் – முறம் போன்ற காது உடையவர். ஹேரம்பர் – ஐந்து முகம் கொண்டவர். ஸ்கந்த பூர்வஜர் – கந்தனுக்கு முன் பிறந்தவர்.




*"பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை*
*நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலஞ்செய்*
*துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்கு*
*சங்கத் தமிழ் மூன்றும் தா"*

என அவ்வை அருளிய பாடலை பாடித் தொழுவோம் பக்தியால் புத்தி பெருக சித்திகள் நிறையட்டும்.

–செல்வி. பி. ஹரிணி பிரியா, பரமகுடி.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 48

**இடமிருந்து வலம்**

1. நம்பாடுவான் என்ற ஹரிஜன பக்தனுக்காக கருடாழ்வாரும் கொடிமரமும் சற்று விலகி உள்ள தலம்......(8)
4. பூஜை இல்லாமலும், ஆறு கடல் இவற்றால் சிதிலமடைந்திருந்தாலும் அக்கோயிலை புதிதாக நிர்மாணம் செய்து கும்பாபிஷேகம் செய்வது...(7) எனப்படும்.

**வலமிருந்து இடம்**

10. அனுமன் எப்போதும் உச்சரிக்கும் மந்திரம்...(2)
15. மகாராணி என லட்சுமியை போற்றும் நூல்....(9)
17. பஞ்சபாண்டவர்களால் நிறுவப்பட்ட நான்கு விஷ்ணு சிலைகளும், சிவபெருமானுடன் சேர்ந்து உள்ள பஞ்ச மூர்த்தி கோயில் உள்ள தலம்.....(9)

**மேலிருந்து கீழ்**

2. காஞ்சி ஸ்ரீவரதன் கருட வாகனத்துடன் சோளிங்கர் தக்கான் குளத்தில் யாருக்கு தரிசனம் கொடுத்தார்....(10)
3. பீமனால் புதுப்பிக்கப்பட்டதால் பீமன் கோயில் என அழைக்கப்பட்ட தலம்.....(7)
4. சிங்கவேள் குன்றம் மலைக்கோயிலில் காட்சியளிப்பவர்..... (10)
5. தசாவதாரத்தில் 3வது அவதாரம்....(8)
6. மான் போல் சாயல் உள்ளதால் லட்சுமியை ....(3) என அழைப்பர்.
7. திருவிடந்தை வராகரின் பெயர்.....(7)
9. கோள்களின் சுழற்சி, நவக்கிரகங்களால் உண்டாகும் நன்மை தீமை குறித்து முனிவர்களுக்கு விஷ்ணு உபதேசித்த தலம்....(5)
18. அனுமனுக்கு சாற்றப்படுவது.... (4)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | 2 | ■ | ■ | 3 |
| ■ | 4 | | 5 | | | | | | ■ | ■ | |
| ■ | | ■ | | ■ | | 6 | | | | | |
| | | ■ | | ■ | | | | | | | |
| | | ■ | | 7 | | | | | | 8 | |
| | | ■ | | | 9 | | | | | | |
| | | ■ | | | | | | | | | |
| | | 18 | | | | | | | | | ■ |
| | | | | 10 | | | | | | | |
| | | | ■ | | | | 11 | 12 | | | 13 |
| | | | | | | 14 | | | | 15 | ■ |
| 16 | ■ | ■ | | | | | | | | | 17 |

தொகுப்பு :
திரு. எஸ். ராஜகுமார்,
சென்னை, 8124930259

புதிருக்கு விடை அறிய
51ம் பக்கம்
பார்க்கவும்...

**கீழிருந்து மேல்**

8. தசரதனின் மூன்று மனைவிகளுள் ஒருவர்....(3)
9. மகாபலி நடத்திய யாகத்தின் பெயர்....(5)
11. கும்பகோணம் சக்ரபடித்துறையில் உள்ள ....(8) த்தில் பிரம்மா நீராடி யாகம் செய்தார்.
12. கிருஷ்ண தேவராயர் ஆண்டாள் மீது பாடிய தெலுங்கு காவியம் ....(8)
13. பெரியாழ்வார் ஆண்டாளுக்கு இட்ட பெயர்....(2)
14. குருவாயூர் கோயில் யாரால் உருவாக்கப்பட்டது....(6)
15. நவதிருப்பதிகளில் ஒரு தலம்....(6)
16. அண்ணன் கோயில் என்று புகழ் பெற்ற பெருமாள் தலம்....(9)

# செம்பொற்கழலடிச் செல்வன்

திருமதி மைதிலி சம்பத், செகந்திராபாத், 8125616876

*"மற்றைநங்காமங்கள் மாற்றேலோர்"* என்று திருமகள் கேள்வனைக் கேட்ட ஆண்டாள் அவன் பாதங் களன்றி வேறுபாதங்களையும் புகழ்வாளோ? ஆனால், புகழ்ந்து ஏத்தியிருக்கிறாளே! புகழப்பட்டவன் கண்ண னுக்கு அண்ணன். 24வது பாசுரத்தில் *"கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி"* என்று கண்ணன் திருவடிகளைப் போற்றிய ஆண்டாள், அதற்கு முன்பேயே *"செம்பொற் கழலடிச் செல்வா"* என்று சொக்கத் தங்கத்தால் சிலம்புகள் பூண்ட பலராமனைப் பாடுகிறாள்.

இம்மாதம் ச்ராவண பௌர்ணமியன்று பலராம ஜெயந்தி வருகிறது. கண்ணனுடைய சரித்திரம் எந்த அளவு ருசிகரமோ, எந்த அளவு சிகரமோ அந்த அளவு பலராமனுடைய சரித்திரத்திலும் பல ருசிகரமான விஷயங்கள் பக்தர்கள் அறிந்து கொள்ள வேண்டி யவை. சர்க்கரை இல்லாத பாலும் பலராமனைச் சொல் லாத கண்ணன் கதையும் ருசிக்காது என்பது புராண வாக்கியம்.

அரவணைத்துயில்வோன், சேஷசாயி, நாகசய னன், பணிசயனன் என்றெல்லாம் ஸ்ரீமஹாவிஷ்ணு விற்குப் பெயர். அவனுடைய படுக்கை என்றுமே ஆதிசேஷன் தான். இராமாயணத்தில் இலக்குவனாக வும், கிருஷ்ணாவதாரத்தில் பலராமனாகவும் அவதரித் தவர் அவரே. வைணவம் தழைக்க அவதரித்த ஸ்ரீமத் இராமாநுஜரும் ஆதிசேஷன் அவதாரமே. இன்றும் நல்லமலைத் தொடர் என்ற பெயருடன் திருமால் அனைத்து வரங்களையும் பிரசாதிக்க சேவை சாதிக்கும் மலைத் தொடர் ஆதிசேஷனே. அதனால்தான் ஸ்ரீஇராமா நுஜர் அதன்மேல் கால் வைக்காமல் முழங்காலால் ஏறத் தலைப்பட்டார்.

மஹாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களில் பல ராமர் எட்டாவது அவதாரமாவார். பலராமரும் கண்ண னும் பிரிக்க முடியாத சகோதரர்கள். மதுராவை ஆண்ட கம்ஸனின் தங்கை தேவகிக்கு எட்டாவது கர்ப்பத்தில் பிறக்கவிருக்கும் மகன் தன்னைக் கொல்லப் போகிறான் என்றறிந்த கம்ஸன் தேவகியின் ஆறு சிசுக்களைக் கொன்று விடுகிறான். ஏழாம் முறை அவர் கர்ப்பமான போது, கண்ணன் தன் யோகமாயையிடம் "நீ தேவகியின் கர்ப்பத்தில் இருக்கும் குழந்தையை இழுத்து எடுத்து கொண்டு போய் நந்தன் அரண்மனையில் வசிக்கும் வசுதேவரின் மற்றொரு மனைவியான ரோஹிணியின் வயிற்றில் வைத்து விடு. இதனால் நீ உலகில் துர்கை, பத்ரகாளி, சண்டிகா, மாயா என்றெல்லாம் போற்றப்படு வாய்" என்று ஆக்ஞையிட, அவளும் அங்ஙனமே செய் தாள். தேவகியின் ஏழாவது கர்ப்பம் கரைந்து விட்ட தென்று மதுராவில் எல்லோருமே நம்பினர்.

கண்ணன் அதற்கடுத்த கர்ப்பத்தில் பிறந்ததும் நந்த கோபன் மனைவி யசோதையிடம் அந்தக் குழந்தையை வசுதேவர் கொண்டு விட்டதும், யசோதைக்குப் பிறந் திருந்த பெண் குழந்தையை தேவகியிடம் விட்டு விட்ட தையும், கம்ஸன் அதைக் கொல்ல முயற்சித்தபோது "மூடா! அந்த எட்டாவது குழந்தை கோகுலத்தில் வளர்கிறது" என்று சொல்லி மாயை அவன் கைகளி லிருந்து மறைந்ததும் அனைவரும் அறிந்த கதை.





னர். பலராமர் அசாத்ய பலம் பொருந்தியவர். ஒரு மந்தை யானை களை விட பலம் பொருந்தியவர் என்பர். இவர்களைக் கொல்வதற் காக கம்ஸன் அனுப்பிய பிரலம்பாசுரன், தேனுகாசுரன் ஆகிய அசுரர் களையும் முஷ்டிகன் எனும் மல்லனையும் பலராமரே கொன்றார்.

குசஸ்தலை அரசனான ரைவதன் தன்னுடைய அதிபுத்திசாலி மகள் ரேவதிக்குத் தகுந்த மணமகனை பிரும்மாவிடம் கேட்டுத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நிச்சயித்து மகளுடன் பிரும்ம லோகம் சென்றான்.

அங்கு இருபது நிமிடங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது.

அதன் பிறகு பிரும்மாவை சந்தித்தபோது அவர் “இங்கு இருபது நிமிடங்கள் என்பது பூலோகத்தில் இருபத்தி ஏழு யுகங்களாகும். இப்போது பலராமனும் கிருஷ்ணனுமாக விஷ்ணு அவதரித் திருக்கிறார். அவர்களில் பலராமருக்கு உன் மகள் ரேவதியை மணம் செய்து வை” என்றார். ஆனால், ரேவதியோ எட்டடி உயரமாக இருந் தாள். வேறு யுகத்தைச் சேர்ந்தவளல்லவா? அவள் மேல் தன் கலப்பை யால் பலராமர் தட்ட, அவருக்குப் பொருத்தமாக ஆனாள். திருமணம் நடந்தது.

பலராமருக்கு நிஸாதன், உலுகாந்த் என்ற இரண்டு மகன்களும், சசிரேகா என்ற மகளும் உண்டு. சசிரேகா, அர்ஜுனனை மணந்திருந்த சுபத்திரா என்ற பலராமனின் சகோதரியின் மகனான அபிமன்யுவை மணந்தாள்.

சிறுவயதிலேயே பல அசுரர்களைக் கொன்ற பலராமர் மல் யுத்தம், கதைப்போர் ஆகியவற்றை துரியோதனன், பீமன் ஆகியோ ருக்குக் கற்றுக் கொடுத்தார்.

இருவரும் அவருக்கு மிகவும் பிரியமான சீடர்கள். மஹா பாரதப் போரைத் தடுக்க முயற்சித்த அவர் முடியாமல் போகவே இரண்டு பக்கமும் போரிடாமல் தீர்த்த யாத்திரை கிளம்பிப் போய் விட்டார். என்றும் நியாயத்தின் பக்கம் நிற்கும் அவர் பீமன் துரியோதனனை கதாயுதத்தால் தொடையில் அடித்தது, விதி மீறல் என்று பீமன் மீது கோபம் கொண்டார்.

அதற்கு “துரியோதனன் திரௌபதிக்கு தன் துடையைத் தட்டிக் காண்பித்ததற்கு அது சரியான தண்டனையே” என்று கிருஷ்ணன் கூறி சமாதானப் படுத்தினார்.



இப்படி ஆதிசேஷன் அவதரித் ததற்குக் காரணம் “இராமாவதாரத்தில் நீ இளையோனாகப் பிறந்து, மிகுந்த துன் பங்களை அநுபவித்து என்னைக் காத் தாய். கிருஷ்ணாவதாரத்தில் நீ எனக்கு அண்ணனாகப் பிறந்து நான் உனக்கு சேவை செய்ய வேண்டும்” என்று திரு மால் அவாவினதே. சொன்னபடியே கோகுலத்தில் ஆநிரை காக்கும் சமயம் பலராமன் அசந்து படுத்திருக்கும் போதெல்லாம் ஸ்ரீகிருஷ்ணன் அவரு டைய கால்களையும் பிடித்து விடுகிறார்.

பலராமர் சிவந்த நிறம் கொண்டவர். நீண்ட கைகள். நீலநிற வஸ்திரமே தரித்தி ருப்பார். ஆழ்ந்த குரல் உடையவர். கலப் பையை ஆயுதமாகக் கொண்டவர். சகோத ரர்கள் இருவரும் உஜ்ஜயினி சென்று உரிய வயதில் சாந்தீபினி முனிவரிடம் குருகுலவாசம் செய்து மல்யுத்தம், கதைப்போர் இன்னும் பல போர் முறை களையும் கற்று, அவற்றுடன் எண்ணற்ற சாஸ்திரங்களையும், அறுபத்து நான்கு கலைகளையும் கற்றறிந்தனர். சகோதரர் கள் இருவரும் அனைத்தையும் கற்க அறு பத்து நான்கு பகல்களும், இரவுகளுமே தேவைப்பட்டன.

கோகுலத்தில் செல்லப்பிள்ளை களாக வளர்ந்த இருவரும் வெண்ணைத் திருடியும், பசுக்களை மேய்த்தும் களித்த


இதுபோலவே ருக்மி அவருடன் சதுரங்கம் விளையாடிய போது வஞ்சகமாக விளையாடவே போரிட்டுக் கொன்று விட்டார்.

அவருடைய ஆயுதமான கலப்பையின் சக்தி மிகப் பெரியது. ஒரு முறை யமுனா நதியை கலப்பையாலேயே ஆயிரம் கிளைகளாக வெட்டி பிருந்தாவனத்திற்கருகே வரவழைத்து விட்டார்.



கிருஷ்ணனின் மகனான சாம்பன் துரியோதனன் மகளின் மீது காதல் கொண்டு ஹஸ்தினாபுரம் சென்றான். அவனை அங்கேயே சிறை செய்து விட்டான் துரியோதனன். பலராமன் சென்று அவனை விடு விக்கக் கோரினார். துரியோதனன் மறுக்க, ஹஸ்தினாபுரத்தையே கலப்பையால் இழுத்து கங்கையருகே கொண்டு வந்து விட பயந்து போன துரியோதனன் சாம்பனை விடுவித்தான்.

அவரால் அநேக விஷயங்களில் தன் தம்பியைப் புரிந்து கொள்ள முடியாவிடினும், ஒத்துப் போய் விடுவார்.



பாரதப்போர் முடிந்து முப்பத்தி ஆறு வருடங்கள் சென்ற பின், தான் வைகுண்டத்திற்குச் செல்ல வேண் டிய சமயம் வந்து விட்டதாக உணர்ந்தார்.

ஏனெனில், ஒன்று யாதவர்க ளான தம் குலத்தவர்கள் செல்வச் செழிப்பில் பல விஷயங்களில் ஒழுங்கு தப்பி நடந்து கொண்டது. இரண்டு தன் தம்பியாக அவதரித் துள்ள ஸ்ரீமஹாவிஷ்ணு வைகுண்டம் செல்லும்முன் அங்கு போய் அவருக்கான அரவணையாக இருக்க வேண்டும். ஆகவே, கடற் கரையில் போய் தியானத்தில் அமர்ந்தார். அவர் வாயிலிருந்து ஒரு பெரிய வெள்ளை சர்ப்பம் வெளியே வந்து கடலில் கலந்தது. அந்த இடம் குஜராத்தின் சோம் நாத் அருகே என்பர்.



அவருக்கான வழி பாடு மத்திய கிழக்கு இந்தியாவில் மிகவும் அதிகம். பூரியில் ரத யாத்திரையில் பல ராமர், கிருஷ்ணர், சுபத்ரா மூவரும் தனித் தனித் தேர்களில் வலம் வருவர். அவர் கலப்பையைக் கைக் கொண்டவர்.

எனவே விவசாயிகளுக்கு அவர் தான் தெய்வம். அது விவசாயக் கருவி. அவசியமானால் போர்க் கருவியா கவும் ஆகும். அவர் தான் நித்யா னந்தா என்ற பெயரில் வந்து சைதன்ய மஹாப்பிரபுவிற்கு கிருஷ்ண சங்கீர்த்தன பக்தி முறையை உபதேசித்தவர் என்பர்.

பலராமருக்கான வேறு பெயர் கள். பலதேவா, ஹலாதரா, பலபத்ரா, சங்கர்ஷணா இன்னும் பல. கிருஷ்ணர் யுக்தி மிக்கவர். பலராமர் சக்தி மிக்கவர்.

பலராமருக்கான கோயில்கள் மதுராவில் தாவோஜிமந்திர், கேரளா வில் அலுவா, மழுவூர், நென் மின் ஆகிய இடங்களிலும், உஞ்சகாவ், அரிங்க், கல்கத்தாபை லியோ, நாரா, தல் வான், மற்றும் மணிப்பூர், நேபாள், ஹரி யானா எனும் இடங்களிலும் உள்ளன. .

பலராமருக்கான கவச ஸ்தோத்தி ரம், மூலமந்திரம், அஷ்டகம், அஷ்டோத் திரம், ஸகஸ்ரநாமம் ஆகியவை உள் ளன. இவற்றை பாராயணம் செய்து, பலராமரைத் துதித்து எண்ணிலடங்கா நன்மைகளைப் பெறுவோம்.





# "ஶ்ரீகுருவாயூரப்பன் மகிமை"

– திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி,
திருப்பதி, 9440120758.

திருப்பாற்கடலில் திருப்பள்ளி கொண்டுள்ள திருமாலவன் எண்ணற்ற திருக்கோலங்களில் பக்தர்களுக்காக பூலோகத்தில் சேவை சாதித்து அருளுகிறார். திருமலையில் திருவேங்கடவராகவும், ஶ்ரீரங்கத்தில் ஶ்ரீரங்கநாதராகவும் இப்படியாக எண்ணற்ற க்ஷேத்திரங்களில் கொலுவிருந்து அருள் பாலிக்கிறார். அப்படிப்பட்ட திருக்கோலங்களில் குருவாயூரப்பனாக, கேரளா மாநிலம், திருச்சூர் மாவட்டத்தில், குருவாயூர் திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ளார். இந்த தலத்தின் பெருமையையும் எம்பெருமானின் மகிமைகளையும் இந்த கட்டுரையில் பார்போம். இங்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கையில் பார்த்தால் நமது பாரத தேசத்தில் இதை நான்காவது கோயில் எனலாம். திருமலை, ஶ்ரீரங்கம், சபரி மலைக்கு அடுத்தபடியாக பக்தர்கள் கூடுவது குருவாயூரில் தான், இந்த கண்ணனின் தரிசனத்திற்காகத்தான்.

நாரத புராணத்தில் உள்ள குருபாலனபுர மஹாத்மியத்தில் இந்த கோயில் வரலாறு இடம் பெற்றுள்ளது. தேவ சிற்பியான விச்வகர்மாவால் இந்த கோயில் நிர்மாணிக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. இங்கே கோயில் கொண்டுள்ள மூலமூர்த்தியின் விக்ரகம் "பாதாள அஞ்சனம்" என்கிற பழமை வாய்ந்த கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. இந்த விக்ரகம் பிரம்ம தேவரிடம் இருந்ததாகவும், பின்பு கச்யப பிரஜாபதி, அதன் பின்பு வஸுதேவரிடம் சென்று, முடிவாக ஶ்ரீகிருஷ்ணனிடமே வந்து சேர்ந்ததாகவும், கிருஷ்ணாவதாரம் பூர்த்தியாகும் சமயத்தில் ஶ்ரீகிருஷ்ணர் தனது பக்தரான உத்தவ மகரிஷியிடம் இன்னும் ஏழு நாட்களில் பிரளயம் வரும். இந்த துவாரகையும் கடலில் மூழ்கும். ஆகவே, குரு பகவானின் உதவியுடன் பக்தர்கள் பின்னாளில் வணங்கும் படியாக ஒரு புண்ணிய க்ஷேத்திரத்தில் பிரதிஷ்டை செய்யும் படி உத்தரவிட்டாராம். அதன்படி வெள்ளத்தில் மிதந்து வந்த விக்ரகத்தை குருவான பிரஹஸ்பதியும், அவரது சிஷ்யரான வாயுவும் சேர்ந்து நல்ல இடத்தைத் தேட பரசுராம க்ஷேத்திரமான கேரளத்திற்கு வந்தபோது, அவரே இந்த இடத்தைக் காண்பித்தாராம். பசுமை சூழ்ந்த அந்த இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. குருவும், வாயுவும் சேர்ந்து செய்த முயற்சியின் காரணமாக இந்த இடம் "குருவாயூர்" என்று அழைக்கப்பெற்றது. இதை "தென் துவாரகை" என்றும் சொல்லுவார்கள். த்வாபரயுக ஶ்ரீகிருஷ்ணனே இக்கலியுகத்தில் அர்ச்சை வடிவில் தரிசனம் தருவதாக ஐதீகம்.

இனி, கோவிலின் அமைப்பைப் பார்ப்போம். கிழக்கு வாசல், மேற்கு வாசல் என்று இருந்தாலும் பக்தர்கள் கிழக்கு வாசல் வழியாக வந்து அப்பனை தரிசித்து விட்டு, பின்பு மேற்கு வாசல் வழியாக வெளியேறுவதே வழக்கம். ஆலயத்தின் உள்ளே நுழைந்ததும், தங்கத் தகடுகள் வேயப்பட்ட 3.35 மீ. உயரமுள்ள துவஜஸ்தம்பம். இருபுறமும் 13 அடுக்குகளுடன் 7 மீ. உயரமுள்ள தீபஸ்தம்பம் கண்களைக் கவருகிறது. இந்த வட்ட அடுக்குகளில் தீபங்கள் ஏற்றப்படும்போது அது கண் கொள்ளாக்காட்சியாக இருக்கும். கருவறையைச் சுற்றியும் வெளிச் சுவர்களில் மரச்சட்டங்கள் அடுக்கப்பட்டு சுமார் 3000 அகல் விளக்குகள் தினமும் ஏற்றப்படுகின்றன.

கொடிக்கம்பத்துக்கு வடமேற்கில் குருபகவான் மற்றும் வாயு பகவானின் பலிப்பீடங்கள் உள்ளன. தினமும் இவர்களுக்கும் நைவேத்யம் செய்யப்படுகிறது. அடுத்ததாக மூலமூர்த்தியான ஸ்ரீகுருவாயூரப்பன் நின்ற கோலத்தில் திருக்கண்களில் அன்பும், கருணையும் கொண்டு காட்சி தருகிறார். மேலிரண்டு திருக்கரங்களில் சங்கும், சக்கரமும், கீழிரண்டு திருக்கரங்களில் கதையும், தாமரையும் கொண்டு, திருமார்பில் துளசி மாலை, தவள், மகரகுண்டலம், கேயூரம், கங்கணம் பூண்டு, வலது திருமார்பில் ஸ்ரீவத்ஸம் எனும் சந்தனமும், வைஜயந்தி மாலையும் கௌஸ்துபமும் துலங்க திருக்காட்சி தருகிறார். கருவறைக்கு வடகிழக்கில் வருண பகவானால் ஏற்படுத்தப்பட்ட கிணறு அமைந்துள்ளது. இந்த நீர்தான் எம்பெருமானின் அபிஷேகத்திற்கும் ஆராதனைக்கும் பயன்படுகிறது. இது வற்றியதே இல்லையாம். இந்த கிணற்றுக்கும் பூஜை நடைபெறுவது விசேஷம். இதில் எண்ணற்ற சாளக்ராம கற்கள் உள்ளன.

இக்கோயிலின் மகாவிசேஷமே குருவாயூரப்பனை குழந்தையாகவே பாவித்து பக்தர்கள் வழிபடுவதுதான். அதுவும் அதிகாலையில் விஸ்வரூப தரிசனம் காண கூடும் பக்தர்களின் கூட்டம் சொல்லிமாளாது. குட்டி கண்ணனை எந்த வேளையில் தரிசித்தாலும் ஆனந்தந்தான். ஆயினும், இந்த அதிகாலை தரிசனம் மெய்சிலிர்க்க வைக்குமாம். இரவு மூன்றாம் யாமம் முடிந்ததும், மூன்று மணிக்கு நாதஸ்வர இன்னிசை முழங்க குருவாயூரப்பனைத் திருப்பள்ளி எழச் செய்வர். அந்த தரிசனத்திற்கு "நிர்மால்ய தரிசனம்" என்று பெயர். இந்த தரிசனத்தின்போது ஸ்ரீகிருஷ்ணருக்கு முதல் நாள் அணிவித்திருந்த சந்தனக்காப்பு, ஆடை ஆபரணங்கள், புஷ்பமாலைகள் ஆகியவற்றை ஒவ்வொன்றாகக் களைந்து, தொடர்ந்து விஸ்வரூப தரிசனம் நடைபெறும். அதன்படி "தைலாபிஷேகம்". தைலாபிஷேகத்துக்குப் பின் பகவானின் திருமேனியை "வாகைத்தூளால்" (ஒரு விதமான வாசனைப் பொடி) தேய்ப்பர். இதை "வாகை சாத்து" என்பார்கள். அடுத்து "சங்காபிஷேகம்". அப்போது வேதபாராயணம் செய்வார்கள். "புருஷ ஸுக்தம்" சொல்வார்கள். இறுதியில் தங்கக் கலசத்தில் உள்ள மங்கள நீரால் பூரண திருமஞ்சனம் செய்யப்படும். அந்த அபிஷேகத்திற்குப்பின் நிவேதனம் நடக்கும். அப்போது பெருமான் "உன்னி கிருஷ்ணனாக" (குழந்தை கண்ணன்) தரிசனம் தருகிறார்.

அதன் பின்னர் காலை பூஜை ஆரம்பமாகும். இதற்கு "உஷத் பூஜை" என்று பெயர். இந்த பூஜையின் போது நெய் பாயசமும், அன்னமும் பிரதான நைவேத்யம். இதன் பின்னர், பக்தர்களுக்காக நடை திறக்கும் போது பகவான் திருமுடியில் மயிற்பீலி, நெற்றியில் கஸ்தூரி திலகம், இடையில் பொன் அரைஞாண், திருக்கரங்களில் புல்லாங்குழல், மஞ்சள் பட்டு வஸ்திரம் தரித்து, அனைத்து ஆபரணங்களுடன் தரிசனம் தருகிறார். இத்தனை பூஜைகளும் காலை ஆறு மணிக்குள் பூர்த்தியாகி அதன் பிறகு மாலை வரை சர்வ தரிசனம்தான்.

சந்தியா காலத்தில் தீபாரதனை, ஏழடுக்கு விளக்கு, ஐந்து திரி, நாகப்படவிளக்கு, ஒற்றைத்திரி விளக்கு என்று பல வகையான தீபங்களைக் காட்டி, முடிவாக கற்பூர மங்கள ஹாரத்தி செய்கிறார்கள். மங்கள ஹாரத்தியின் போது முப்பத்து முக்கோடி தேவர்கள் வந்து குருவாயூரப்பனை வணங்குவதாக ஐதீகம்.

"பந்தரடி" என்று சொல்லப்படும் இப்பூஜையை பரம்பரை பரம்பரையாக செய்து வருகிறார்கள். இதற்கும் அன்னம், சர்க்கரை, நெய்பாயசம், அப்பம், பழ வகைகள் நிவேதனம் செய்கிறார்கள். இங்கு பூஜை செய்யும் அர்ச்சகர்கள் மேல் சார்த்தி, கீழ் சார்த்தி என்றழைக்கிறார்கள். மேல் சார்த்தி தலைமை குருக்கள், இவரைத் தவிர வேறு யாரும் எம்பெருமானைத் தொடக்கூடாது. பூஜை, அபிஷேகம், அலங்காரம் அனைத்தும் இவரே செய்வார். விடியற் காலை இரண்டரை மணிக்கு சன்னிதிக்குள் நுழைந்தால் உச்சி கால பூஜை முடியும் வரை தண்ணீர் கூட அருந்த மாட்டார்.

அத்தனை கடுமையான ஆசார விதிகள் கோயிலில் கடைப் பிடிக்கப்படுகின்றன. இவர் சேவை செய்கின்ற ஆறு மாதமும் இவர் கோயிலை விட்டு வெளியே செல்ல அனுமதி இல்லை. அவருக்கு தனி இடம் ஒதுக்கியிருப்பார்கள். ஆறுமாத காலமும் பிரம்மசரிய விரதம் அனுஷ்டிப்பார்.

கீழ் சார்த்தி என்பவர் உதவி அர்ச்சகர். விளக்கு ஏற்றவது, அபி ஷேகத்திற்கு நீர் கொண்டு தருவது, புஷ்ப மாலைகள் கொண்டு வருவது. நைவேத்யம் தயாரிப்பது இதெல்லாம் இவர் வேலை. இது பரம்பரையாக வருவது. வேதமந்திரம் கற்றவர்களைத் தந்திரி கள் என்பார்கள். மந்திரம் சொல்வது, நாள் பார்த்து முஹுர்த்தம் குறித்துக் கொடுப்பது ஆகியவை இவர்களின் பொறுப்பு.

கார்த்திகை 1–ஆம் தேதி தொடங்கி, மார்கழி 11 ஆம் தேதி வரை 41 நாட்கள் மண்டல பூஜை நடக்கும். இதில் திரளான பக்தர் கள் கலந்து கொள்வார்கள். முதல் 40 நாட்கள் பஞ்சகவ்ய அபி ஷேகம், 41ஆம் நாள் சந்தன அபிஷேகம், இந்த சந்தன அபிஷே கத்துக்காக மைசூரிலிருந்து சந்தன கட்டைகள், காஷ்மீரிலிருந்து அசல் குங்குமம், பச்சை கற்பூரம், பன்னீர், கஸ்தூரி போன்ற வாச னைப் பொருட்களைச் சேர்த்து இந்த சந்தன கலவையைத் தயாரிப்பார்கள். இதற்கான செயலை மன்னர் குடும்பமே ஏற்கும். இந்த அபிஷேகம் நடந்த மறுநாள் இதை களைந்து பக்தர்க ளுக்குப் பிரசாதமாக வழங்குவார்கள்.

இனி, குருவாயூரப்பனின் பெருமைகளைப் பார்ப்போம். வாத நோயால் பாதிக்கப்பட்டிருந்த நாராயண பட்டத்ரி என்பவர் குருவாயூரப்பன் சன்னதி முன் நின்று தினமும் 10 சுலோகங்கள் வீதம், 100 சுலோகங்களைப் பாட அவரின் வாத நோய் நீங்கி விட்டது. இதுவே "நாராயணீயம்" எனப்படும். இதை அவர் பாட, பாட, குருவாயூரப்பன் தலையை ஆட்டி ஆட்டி சந்தோஷப்பட்ட தாக சொல்கிறார்கள். இதை அனந்த ராம தீக்ஷிதர் தன் உபன்யா சத்தில் சொல்வார்.

ஆலயத்தில் உள்ள நமஸ்கார மண்டபத்தில் அமர்ந்து இந்த "நாராயணீயத்தை" எழுதினாராம் பட்டத்ரி. அவரை கௌரவிக் கும் விதமாக யாரும் அந்த மண்டபத்தில் அமர மாட்டார்கள். இதை "பாகவத அபசாரம்" என்பார்கள். குருவாயூர் கிருஷ்ணனை கருப் பொருளாகக் கொண்டு பக்தி ரசம் சொட்ட சொட்ட அதை அவர் எழுதியுள்ளார்.

இதை எழுதி முடித்ததும் பட்டத்ரி குருவாயூரப்பனிடம் உனக்கு பிடித்தமான நிவேதனம் எது என்று கேட்க, நெய் பாயசம் என்றுரைக்க, அதை சமர்ப்பிக்க எனக்கு வசதி இல்லாமல் போனால், அவலும் வெல்லமும் என்றாராம். அதுவுமில்லை யென்றால் என்று வினவ, "வெண்ணெய், பால், தயிர்" என்று அடுக்கிக் கொண்டே போக, "பகவானே! மன்னிக்க வேண்டும்,



இந்த வசதி எனக்கிருந்தால் நான் ஏன் கேட்கி றேன்" என்று பதில் சொல்ல, "துளசியும், உத்தி ரினி தீர்த்தமும்" போதும் என்றாராம் கண்ணன். அதுவுமில்லையென்றால் என்று கேட்க, அப் போது நீ கவலைப்பட்டு அழுவாயல்லவா, அந்த ஒரு சொட்டு கண்ணீர் போதும் என்று பகவான் சொல்ல, மெய் சிலிர்த்து அவரது திருவடிகளில் வீழ்ந்தாராம்.

*"பத்ரம் புஷ்பம் பலம் தோயம்*
*யோ மே பக்த்யா ப்ரயச்சதி*
*ததஹம் பக்தி உபஹ்ருதம்*
*அச்னாமி ப்ரயதாத்மன:"*

என்று எம்பெருமான் கீதையில் அருளி யதுபோல, பக்தி ஒன்றையே பிரதானமாய் கொண்டு, இலையோ, பூவோ, பழமோ அல்லது வெறும் தண்ணீரோ ஆத்மார்த்தமாக நிவேதனம் செய்தால் பகவான் அதை சந்தோ ஷமாக ஏற்றுக் கொள்கிறான் என்பதற்கு குரு வாயூரப்பன் பட்டத்ரியோடு நடத்திய உரை யாடலே நமக்குத் தெரிவிக்கிறது.

குறை தீர்க்கும் ஐயன், குவலயம் தொழும் மெய்யன், குருவாயூரப்பனைத் தரிசிக்க குருவாயூர் செல்வோம். குறையின்றி வாழ்வோம்.

# ஆளவந்தார் அருளிய ஸ்தோத்திர ரத்னம்

ஆசார்ய பெருமக்களுள், யாமுநேயர் என்று கொண்டாடப்படுபவர் ஆளவந்தார். யமுனைத் துறைவர் என்று இவருக்குச் சிறப்பு பெயர். இவர் பாடிய துதி நூல் ஸ்தோத்ர ரத்னம். ஸ்ரீவைஷ்ணவ உலகத்தில் துதி நூல்கள் அநேகம் உண்டு. ஸ்தோத்ர ரத்னத்திற்கு இணை யான நூல் எங்கும் கிடையாது என்று ஸ்ரீவைஷ்ணவ அறிஞர்கள் உறுதியாகக் கூறுகிறார்கள். எம்பெருமா னுடைய ஸ்வரூபம், ரூபம், குணங்களைக் கொண்டாடி, முதலில் துதி நூல் பாடியவர் ஆளவந்தார் ஆவார். எப்படிப்பட்ட கல் நெஞ்சம் உடையவரும், ஸ்தோத்ர ரத்நத்தில், ஒரு சுலோகத்தைப் பாடினால், மனது உருகி விடுவார். ஆளவந்தாருக்கு எம்பெருமானிடம் உள்ள பக்தி, காதலை இந்த நூலில் காணலாம். அது மட்டும் இல்லாமல், உயர்ந்த சாஸ்த்ர அர்த்தங்களையும், இந்த துதி நூலில் நாம் காண முடியும். இராமாநுசர், பராசரபட்டர், கூரத்தாழ்வான் ஆகியோர்களுக்கு, இந்த துதி நூல் வழிகாட்டியாக அமைந்தது.

இந்த துதி நூலில் அறுபத்தைந்து சுலோகங்கள் உள்ளன.





நம்மை அடைவிப்பவன் எம்பெருமான். நாம் அடைய வேண்டியவனும் எம்பெருமான். அவனை அடைவதற்குத் தடையாக உள்ளவற்றை அவனே போக்குவான். இதையே, ஆளவந்தார் இந்த துதி நூலில் அருளிச் செய்கிறார்.

முதல் 5 சுலோகங்களில், தன் ஆசார்யர்களான ஸ்ரீமந்நாதமுனிகள், பராசர பகவான், நம்மாழ்வார் ஆகி யோரை வணங்கினார். ஸ்ரீமந்நாராயணனே பரதத்வம் என்று 12ஆம் சுலோகத்தில் அருளிச் செய்கிறார்.

க:ஸ்ரீ: ச்ரிய: பரமஸத்வ ஸமாச்ரய : க:
க: புண்டரீக நயந: புருஷோத்தம: க:
கஸ்யாயுதாயுத சதைக கலாம் சகாம் சே
விச்வம் விசித்ர சிதசித் ப்ரவிபாக வ்ருத்தம்

(சு–12)

திருவுக்கும் திருவாகிய செல்வன் என்று ஸ்ரீமந் நாராயணனே போற்றப்படுகின்றான். மற்ற தெய்வங்கள் இவ்வாறு போற்றப்படுவதில்லை என்கிறார். விசித்ரமான, அறிவுள்ள, அறிவில் லாத பொருட்களை உடைய இந்த ப்ரபஞ்சம் முழுவதும் எம்பெருமான் ஸ்ரீமந்நாரா யணனுடைய திருமேனி யில் விளங்குகின்றன என் றும் அருளிச் செய்கிறார்.

ஸ்ரீமந்நாராயணனுடைய திருக்கல்யாண குணங்களை எடுத்துக் காட்டுகிறார் இப்பொழுது,

வசீ வதாந்யோ: குணவான் ருஜு: சுசி:
ம்ருதுர் தயாளுர் மதுர: ஸ்திரஸ் ஸம:
க்ருதீ க்ருதஜ்ஞஸ் த்வம் அளி ஸ்வபாவத:
ஸமஸ்த கல்யாண குணம்ருதோததி

(சு–18)

அடியார்களுக்கு வசப்பட்டவன்; தன் மேன்மை பாராமல், அனைவரோடும் கலந்து பரிமாறும் சீலகுணம் உடையவர்; மனம், மொழி, மெய் மூன்றாலும் கபடம் இல்லாதவன். சம்ஸாரிகளை பரிசுத்தம் ஆக்க வல்லவன். அடியார்களைப் பிரிந்து வாழ முடியாதவன்;

கருணை உடையவன்; இனிமையாகப் பேசுபவன்; அடியார்களை ஒரு நாளும் கைவிடாதவன்; அடியார்களைக் காப்பாற்றுவதையே தன் கார்யமாக உடையவன்; அடியார்கள் சிறிது செய்தாலும், அதை மிகவும் பெரிதாக நினைப்பவன் என்று எம்பெருமான் குணங்களைக் கொண்டாடினார். எம்பெருமானுடைய பெருமையைப் பேசிய பின்னர், அவனைத் தொழுதார் இந்த சுலோகத்தில்,

*நமோ நமோ வாங்மனஸாதிபூமயே*
*நமோ நமோ வாங்மநஸைக பூமயே*
*நமோ நமோ நந்த மஹாவிபூதயே*
*நமோ நமோ நந்த தயைக ஸிந்தவே*

*(சு–21)*

எம்பெருமான் ஒருவனே, சொல்லுக்கும் மனதிற்கும் எட்டாத பெருமைகளை உடையவன். அவர் ஒருவரே சொல்லாலும், மனதாலும் துதிக்கப்பட வேண்டியவர். மிகுந்த, எல்லையில்லாத ஐச்வர்யம் உடையவரும் அவரே. அவரே அளவு கடந்த கருணைப் பெருங்கடல். அவரையே நான் வணங்குகிறேன் என்று ஆளவந்தார் கூறுகிறார். 22ஆம் சுலோகத்தில், எம்பெருமானிடத்தில் சரணாகதி செய்கிறார்.

*ந தர்ம நிஷ்டோஸ்மி ந சாத்ம வேதீ*
*ந பக்திமாந் த்வச் சரணார விந்தே!*
*அகிஞ்சநோ நந்ய கதிச் சரண்ய!*
*த்வத் பாதமூலம் சரணம் ப்ரபத்யே!*

எம்பெருமானே! நான் கர்ம யோகத்தில் நிலை இல்லாதவன். என்னிடம் ஜ்ஞான யோகமும் இல்லை. உன்னுடைய திருவடிகளில் பக்தியும் இல்லாதவன். உன்னை அடைவதற்கு எந்த சாதனமும் இல்லாதவன். உன் திருவடிகளே எனக்கு கதி. உன்னை சரண் புகுகிறேன் என்கிறார்.

இதற்கு மேல், பல சுலோகங்களால், எம்பெருமானுடைய திவ்விய மங்கள வடிவினை அழகாக அநுபவிக்கிறார். திருத்தோள்களின் அழகை அநுபவித்து எம்பெருமானுடைய திருக்கழுத்து, திருமுகத்தில் உண்டாகும் ஸோபை; திருஆபரணங்களுடைய சேர்த்தி, பெரிய பிராட்டியாரோடு எம்பெருமான் சேர்ந்திருக்கும் அழகு, ஆதிசேஷன் மேல் எழுந்தருளியிருக்கும் அழகு, விஷ்வக்சேனருடைய தொண்டு, நித்ய சூரிகளோடு எம்பெருமான் சேர்ந்திருப்பது–இவற்றை எல்லாம் அநுபவித்து, எம்பெருமானிடத்தில் சரண் புகுந்தார்.

*அபராத ஸஹஸ்ரபாஜநம் பதிதம் பீம யவார்ண வோதரே!*
*அகதிம் சரணாகதம் ஹரே! க்ருபயா கேவலமாத்ய ஸாத்குரு!*

*(சு–48)*

துக்கங்களைப் போக்கும் எம்பெருமானே! கணக்கற்ற குற்றங்களுக்கு இருப்பிடமாக நான் இருக்கிறேன். ஸம்ஸாரமாகிய பயங்கர கடலில் நான் விழுந்து விட்டேன். உன்னைத் தவிர, எனக்கு வேறு கதி இல்லை. சரணா கதன் என்றுச் சொல்லிக் கொள்ளவும் ஆசைப்படுகிறேன். நீ தான் எனக்கு க்ருபை செய்ய வேணும். அருள் புரிய வேணும் என்றும் வேண்டினார். எம்பெருமானுக்கும், தனக்கும் உண்டான தொடர்பை 60ஆம் சுலோகத்தில் தெரிவிக்கிறார்.

*பிதாத்வம் மாதா த்வம் தயித தநய ஸ்த்வம் ப்ரியஸுஹ்ருத்*
*த்வமேவ த்வம் மித்ரம் குருரஸி கதிஸ்சாஸி ஜகதாம்*
*த்வதீயஸ் த்வத் ப்ருத்யஸ் தவ பரிஜநஸ் த்வத் கதிரவாம்*
*ப்ரபந்தச் சைவம் ஸத்யஹமபி தவைவாஸ்மி ஹி பர:*

*(சு–60)*

உலகம் எல்லாவற்றிற்கும் தகப்பன் நீ! பெற்ற தாயும் நீ! அன்பான மகனும் நீ! உயிர்த்தோழனும் நீ! ஆசிரியனும் நீயே! எனக்கு கதியும் நீயே! அடியேன் உன்னுடைய சொத்து. உனக்குத் தொண்டன். சரணாகதி பண்ணினேன். நீதானே என்னைக் காப்பாற்ற வேண்டும்? என்று மீண்டும் சரணாகதி செய்தார். 65ஆம் சுலோகத்தில், என்னை நீ அனுக்கிரகிக்க வேண்டும் என்று சொல்லி இந்த துதி நூலை முடிக்கிறார்.

*அக்ருத்ரி மத்வ ச்சரணாரவிந்த*
*ப்ரேம ப்ரகர்ஷாவதிம் ஆத்ம வந்தம்*
*பிதா மஹம் நாதமுநிம் விலோக்ய*
*ப்ரஸ்த மத்வ்ருத்தம் அசிந்தயித்வா!*

என்னுடைய நடத்தையைப் பார்க்கக் கூடாது. எனக்கும் என் பாட்டனாரான ஸ்ரீமந்நாதமுனிகளுக்கும் உண்டான தொடர்பை வைத்து, நீ எனக்கு அருள் புரிய வேண்டும் என்று சொல்லி முடிக்கிறார்.

**– ஸ்ரீ உ.வே. கிடாம்பி நாராயணன் ஸ்வாமி,**
**சென்னை, 9444918374.**

தாஸ சாகித்யம்

# தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்



## ஸ்ரீபாதராயர் சாகித்யத்தில் திருவேங்கடவன்:

கர்நாடக ஹரிதாசர்களை வணங்கும்போது *"ஸ்ரீபாதராஜாய ஸமஸ்தே வ்யாஸயோகினே நம: புரந்தர ஆர்யாய விஜயார்யதே நம:"* என்று முதலில் ஸ்ரீபாத ராயரையே துதிப்பது மரபு. ஸ்ரீமத்வாச்சார்யரின் பரம்பரையில் வந்த இவர் அன்றைய சந்திரகிரி மன்னரான சாளுவ நரசிம்ம ராயரால் பக்தி கௌரவ மரியாதைகளைப் பெற்று ஸ்ரீநிவாசனை வழிபட்டு வந்தார்.

அதன்பின் அக்கால மக்களின் அவலங்களை தம் தவ வலிமையால் தீர்த்து, பல மகிமைகளை அனுக்கிரக பூர்வமாக காண்பித்தார். "வாக்வஜ்ரம்" என்ற நூலை இயற்றினார். திராவிட மொழிகளில் ஒன்றான கன்னடத்தில் பாமர மக்களும் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் சங்கீர்த்தனைகளை இயற்றினார்.

அவருக்குப் பின் வந்த வியாச ராஜர், வாதிராஜர், புரந்தரதாசர், கனகதாசர்களுக்கு வழிகாட்டியாகவும், அவர்களால் கன்னட சங்கீர்த்தனைகளை பாட வைத்தவராகவும் இருந்த இவர் கோலார் மாவட்டம் முளபாகிலு என்ற இடத்தில் திவ்ய பிருந்தாவனமாகத் திகழ்கின்றார்.

மேலும், கன்னடத்தில் தேவதா ஸ்துதியுடன் ஸ்ரீகிருஷ்ணலீலை, வைராக்கியபாவ கீர்த்தனைகள், மத்வமத ப்ரேய கீர்த்தனைகள், வாயுதேவனின் மூன்று அவதாரங்களையும் வர்ணித்துப் பாடிய கன்னட லகு வாயு ஸ்துதியில் உள்ள மத்வநாமம், இவைகளுடன் திருப்பதி திருவேங்கடமுடையானைத் துதித்தும் கீர்த்தனைகளை இயற்றிப் பாடினார்.

இவை சங்கீதத்திற்கு முதன்மையானவை. பாமரர்களும் பக்தியுடன் பாடிக் கொண்டு அமைதியைப் பெறும் வகையில் அமைந்துள்ளன. ஸ்ரீபாதராயரின் கீர்த்தனைகள் எளிய வகையில் கன்னட சொற்களால் இனிமையாகவும், இராக தாளங்களுடன் பாடக்கூடிய வகையிலும் இருந்தன.

சிறந்த பாவனைகளுடன் அபிநயத்தைத் தரும் வகையிலும், இவர்களின் கீர்த்தனைகள் தோடி ராகத்தில் *"கங்களித்த்யாதகோ காவேரி ரங்கன னோடத"* என்பனவும், *"வந்திபெ நிநிநே கணநாதா"* என்பனவும்



*"பூஷணகே பூஷண இது பூஷண", "ரங்கநாதன நோடுவபன்னி" "வ்யர்தவல்லவே ஜன்மவ்யுர்த்த வல்லகே"* என்ற கீர்த்தனைகள் மிகவும் புகழ் பெற்றவை. பாடகர்கள் தம் பாட்டுக் கச்சேரிகளில் இப்பாடல்களுக்கு முக்கியத்துவம் தருகின்றனர். "ப்ரமரகீதம், வேணுகீதம்" ஆகியவையும் இவர் இயற்றியதே. இப்பாடல்களைப் பாடும்போது ஸ்ரீகிருஷ்ணரை நம் கண்முன் காணும் இன்பம் ஏற்படும். *"பாரோ மனெகெ கோவிந்தா"* என்ற பக்தி நிறைந்த பாடலை பாடாதவரே யாரும் இலர். சிற்பக் கவிதைகளையும் படைத்தார். முக்கியமாக ஸ்ரீபாதராயர் திருப்பதி திருவேங்கடவனைத் துதித்துப் பாடிய சில கீர்த்தனைகளைப் பார்ப்போம்.

*"ஹரே வேங்கட சைலவல்லப பொரெயபேகு என்ன*
*துரித தூர நீவணேல்லதெஜகதொளு பொரெவரனா*
*காணெ நின்னாலர்"*

ஹரே வேங்கடசைல வல்லபா! என்னைக் காப்பாற்று. நீவிர் துன்பங்களை தூரம் செய்பவர். நீவிர் தவிர இந்த உலகில் என்னைக் காப்பாற்றுபவர் வேறு யார் உள்ளார் என்று நினைத்தார். இது உண்மை.

*"இந்திரேச அரவிந்தா நயன என்ன தந்தே தாயி*
*நீநே*
*பொந்தி தவர அகவ்ரும்தவக ளெவ மந்தராத்ரி*
*தரநெ ஸ்ரீஹரியே"*

அரவிந்தநயனா எனக்கு தாய் தந்தை நீயே! உன்னை அடைந்தவரின் பாவங்களைப் போக்கும் தெய்வம் நீயே!

*"ஆறு நின்ன ஹெரதென்னஸாரெவரோ*
*நீரஜாக்ஷ ஹரியே*
*பாரமஹிம புராண புருஷ கோர துரிதகள*
*தூரமாடிசோ!"*

உன்னைத் தவிர என்னைக் காப்பாற்றுபவர் வேறு யாரும் இல்லை. அபார மகிமை பெற்றவன், புராண புருஷன், நீரஜாக்ஷன், ஜன ஹரியே என் துன்பங்களை தூரம் செய்வாயாக!

*"மங்களாங்க மஹநீய குணார்ணவ கங்கோதித*
*பாத*
*அங்க ஜபித அஹிராஜசய்ய ஸ்ரீரங்க விட்ல*
*தொரேயே ஸ்ரீஹரியே"*

துளசி செடியின் நுனியில் பிரம்மாவும், மத்தியில் விஷ்ணுவும், அடியில் சிவனும், மற்ற பகுதிகளில் முப்பத்து மூன்று கோடி தேவர்கள், பண்ணிரண்டு சூரியர்கள், எட்டு வசுக்கள், இரு அசுவினி தேவர்கள், பதினொரு ருத்ரர்கள், இருப்பதாக ஐதீகம்.


தெலுங்கு மூலம்:
**திரு. எஸ். நாகராஜாசார்யுலு**
தமிழாக்கம்:
**திரு. வி. வேங்கடரமணா**

தொடரும்...


## ஸப்தகிரி வாசகர்களுக்கு...

**ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியை முறைபடுத்துவதன் பொருட்டு 0877-2264359 தொலை பேசியில் தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) மீண்டும் ஒரு முறை தெரியப்படுத்தவும். மேலும் sapthagiri_helpdesk@tirumala.org க்கு இமெயில் அனுப்புவதன் வாயிலாகவும் தெரிவியுங்கள்.**

**ஸ்ரீஹயக்ரீவ ஜெயந்தி**
**03-08-2020**




**விசுத்த விஜ்ஞான கந ஸ்வரூபம் விஜ்ஞான விச்ராணந பத்த தீக்ஷம் |**
**தயாநிதிம் தேஹ ப்ருதாம் சரண்யம் தேவம் ஹயக்ரீவமஹம் ப்ரபத்யே ||**

ஸ்ரீஹயக்ரீவருடைய ஆத்மா பரிசுத்தமான ஞானமே வடிவானது.
விசேஷ ஞானத்தை அடியவர்களுக்கு அருள்வதையே
விரதமாகக் கொண்டவர். தன்னை அடைக்கலமாய் அடைபவர்களுக்கு
சரணாக இருப்பவர். அப்படிப்பட்ட ஸ்ரீஹயக்ரீவரை சரண் அடைகிறேன்

-வேதாந்த தேசிகர் அருளிய ஸ்ரீஹயக்ரீவ ஸ்தோத்ரம்-5

திருமலையப்ப ஸ்வாமி ஆலயத்தில் சாஸ்திர முறைப்படி
பவித்ரோத்ஸவம் நடைபெற்றது. ஶ்ரீஶ்ரீஶ்ரீ சின்னஜீயர் ஸ்வாமி,
தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி
தம்பதியினர், தி.தி.தே. செயலாட்சித்தலைவர்
திரு. அனில்குமார் சிங்ஹால் ஐ.ஏ.எஸ்., கூடுதல் செயலாட்சித்
தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி தம்பதியினர்
மற்றும் பல உயர் அதிகாரிகள் பங்குகொண்டனர்

















திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயத்தில் சாஸ்திரமுறைப்படி ஸ்ரீவரலக்ஷ்மி விரதம் நடைபெற்றது. தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு. ஒய்..வி. சுப்பாரெட்டி தம்பதியினர், தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. அனில்குமார் சிங்ஹால் ஐ.ஏ.எஸ். தம்பதியினர், இணைச்செயலாட்சித்தலைவர் திரு.பி. பசந்த் குமார், ஐ.ஏ.எஸ். தம்பதியினர் மற்றும் பல உயர் அதிகாரிகள் பங்குகொண்டனர்
















திருப்பதி ஸ்ரீகோதண்டராமஸ்வாமி ஆலயத்தில்
சாஸ்த்திர முறைப்படி நடைபெற்ற பவித்ரோத்ஸவ திருக்காட்சிகள்



ஸ்ரீவரலக்ஷ்மி விரதத்தை முன்னிட்டு
இணையதளம் வாயிலாக
டிக்கெட் பதிவு செய்த பக்தர்களுக்கு
தபால் துறை மூலமாக ஸ்ரீபத்மாவதி தாயார்
பிரசாதத்தை தி.தி.தே. அனுப்பி வைத்த போது




# இடையன் எங்கள் இறைவன்

அருட்செல்வர் வெ.சுந்தரம் ஐயர், பரமக்குடி.

**முன்னுரை :**

முப்பெரும் தேவர்களால் இவ்வுலகம் இயங்குகிறது என்பது யாவரும் அறிந்ததே! மூவராக ஒரே முதல்வர் இயங்கினாலும் முத்தொழிலுக்காக மூன்று நிலைகள் கொண்டிருப்பது அறிந்த ஒன்றே. பிரம்மா, விஷ்ணு, சிவன் என வழிபடுவது நடைமுறையாகும். காக்கும் கடவுளான விஷ்ணு பல அவதாரங்கள் எடுத்து மக்களின் மேன்மைக்கு வாழும் முறைகள் பற்றி விளக்கிய தன்மைகளில் கண்ணனாக திரு அவதாரம் எடுத்து பாலலீலை முதல் இறுதி வரை இன்பமளித்தது பற்றியே பெருமையுடன் பேசப்படுகிறது.

**இடையன் :**

பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளில் நடுநாயகனாக அமைந்த காரணத்தால் இடையன் என அழைக்கப்படுகிறான். பாமா, ருக்மணி என்ற இருவருக்கும் இடையில் நாயகனாக இருந்து, நலன்கள் நாட்ட பேருதவியாக இருந்ததால் இடையன் என்பர். யாதவர் பாலகன் பாலலீலைகள் நடத்தியதால் இடையனாவான்.

**கட்டுண்ட இடையன் :**

கண்ணனின் பால விளையாட்டுகளால் இடைச்சிமார்கள் கண்ணனின் மீது கூறிய புகார்களினால் யசோதை ஏதும் செய்ய இயலாத நிலையில் வீட்டை விட்டு வெளியேற விடாமல் தடுத்திட யோசனை செய்தாள். மாடு கன்றுகள் கட்ட வைத்திருக்கும் தாம்புக் கயிற்றை எடுத்தாள். கண்ணனின் இடுப்பில் கட்டி, மற்றொரு பாகத்தை உரலில் கட்ட முடியாதபடி கயிற்றின் நீளம் குறைந்தது. வெவ்வேறு கயிறுகள் உபயோகப்படுத்தி உரலில் கட்டி கண்ணனின் இடையில் இணைத்துக் கட்ட முடியாமல் சோர்ந்தாள். தாயின் மனம் நோகாத வகையில் உடலோடு உரலில் இணைத்துக் கட்ட உதவினான். கண்ணனின் இடையிலும், உரலின் நடுபாகத்திலும் கட்டி விட்ட மகிழ்ச்சியில் யசோதை அவ்விடம் விட்டு அகன்றாள்.

இடையில் கட்டிய தாம்பு கயிற்றுடன் உரலையும் சேர்த்து இழுத்துக் கொண்டு வாசலில் சென்றான். அங்கிருந்த இரு மரங்களுக்கு இடையே தான் சென்றான். ஆனால் மரங்கள் உருண்டு வர முடியாமல் தடுத்தன. கண்ணன் இடையில் உள்ள தாம்பினால் வேகமாக இழுக்கவே, இருமரங்களும் கீழே சாய்ந்தன. உடனே மரங்களாக இருந்த இரு கந்தர்வர்களும் சாபவிமோசனம் பெற்று கண்ணனை வணங்கிச் சென்றனர்.

கண்ணனின் இடையில் தாம்பினால் கட்டப்பட்ட காரணத்தால் இருவரது சாப விமோசனம் நடந்தது. இடையில் தாம்பு கட்டியக் காரணத்தால் இடையன் என்று கூறலாம் அல்லவா?

**பாண்டவர்களின் தோழன் இடையன் :**

பாண்டவர்கட்கு உற்ற தோழனாக விளங்கி உதவிகள் பல செய்த போதிலும், பாண்டவர்களின் நடுநாயகனாக விளங்கிய அர்ச்சுனனிடம் கூடுதலான அன்பைக் காட்டினான். ஐவரில் இடைப்பட்ட தம்பி அர்ச்சுனனுக்கு எவ்வாறு உதவி இடையனானான் எனப் பார்ப்போம்.

பாண்டவர் துரியோதனர் படைகள் மோதுகின்ற போது, அர்ச்சுனனுக்கு போரில் உதவியாக தேரோட்டியாக அமர்ந்தான். போர்க்களத்தில் படைகளின் இடையே அர்ச்சுனன் எதிரிகளோடு போரிட தேரோட்டியாக இடையே இருந்து உதவினான். இப்போது இடையன் ஆனான்.





சிவபூஜை செய்யும் பழக்கமுள்ள அர்ச்சுனன் போர்க்களத்திலிருந்து தேரை விலக்கி ஓட்டிச் சென்று தனியிடத்தில் சிவபூஜை செய்யுமாறு கூறினான். சிவலிங்கம் இல்லையே என அர்ச்சுனன் மயங்கிய போது தன்னையே சிவனாக எண்ணி வழிபடச் சொன்னான். அதனை ஏற்று காட்டு மலர்களால் அர்ச்சுனன் சிவபூஜை செய்து வழிபட்டான். இங்கு சிவனுக்கும் அர்ச்சுனனுக்கும் இடைப்பட்டு கண்ணன் விளங்கி இடையனாக விளங்கினான்.

**போர் தூது :**

போர்க்களம் ஏற்படாமல் தடுக்க பாண்டவருக்கும் துரியோதனருக்கும் இடையே தூது நடைபெற மறைமுக ஏற்பாடுகள் நடத்தி, இடைப்பட்ட பணிகள் சிறப்பாகச் செய்ததால் இடையன் ஆனான்.

**யமுனை வழிவிடல் :**



சிறையிலே பிறந்த கண்ணனை கோகுலத்தில் யசோதையிடம் சேர்ப்பித்து, அங்கிருந்த பெண் சிசுவை இடமாற்றம் செய்ய வசுதேவர் கூடையில் தூக்கி வர யமுனை வழிவிட்டதால், இருபுறமும் நீர் இருக்க இடையில் எவ்வித பாதிப்புமின்றி வர ஏதுவாக அமைந்ததால் இடையன் எனலாம் அல்லவா?

**தொண்டில் நடுநிற்றல் :**

கோபியர் கூட்டத்தின் இடையில் நின்று குழலூதி மயக்கிய காரணத்தால் இடையன். பசுக்கூட்டம்தனை பராமரிக்க நடுவில் நின்று பக்குவமாய் காத்தவன் இடையன் என அழைக்கப்பட்டான்.

அரச குலத்தோர், யது குலத்தோர் என வித்தியாசமின்றி சமமாக பாவித்து இடை நின்று உதவியதால் இடையன் எனலாம்.

ஆடையின்றி பெண்கள் நீராடல் கூடாதென அறிவூட்ட ஆடைகளை ஓரிடத்தில் கூரைமேல் மரத்தில் வைத்து ஆடைகட்கும், நீராடிய பெண்களுக்கும் இடை நின்று நல்லுபதேசம் செய்ததால் இடையன்.

**பீஷ்மருக்காக உறுதி தளர்தல் :**



தன் உறுதி தளர்ந்தாலும், பீஷ்மர் மனநிறைவு கொள்ள அவரது வேண்டுதலின்படி தனது சக்ராயுதம் பணியாற்றிட வைத்தவன். சக்ராயுதம் பணியாற்றிட, இடைப்பட்ட பணி செய்ய வைத்து இடையனானான்.

**உபதேசம் :**

இருபுறமும் பெரும்படையாயிருக்க, உற்றார் உறவுகள் எதிரில் நிற்பதைக் கண்டு மனம் பதைத்த அர்ச்சுனன் போர் செய்ய இயலவில்லை எனக் கூறிய போது, போர்க்களத்தில் இடையில் கீதையுபதேசம் பார்த்தனுக்குச் செய்தான்.

தேரின் கொடியில் இருந்த அனுமன், தேரில் போர் செய்ய அமர்ந்திருந்த அர்ச்சுனன் ஆகிய இருவருக்கும் இடையில் உபதேசித்த தன்மையால் இடையனாகினான்.

தனது விஸ்வரூப தரிசனம் பார்த்தனுக்கு காட்டியபோது, கொடியிலிருந்த அனுமனும் அனுபவித்த போது, இருவருக்கும் இடையில் விஸ்வரூப தரிசனம் அமைந்தது. எனவே இருவருக்கிடையே விஸ்வரூப தரிசன நிகழ்வு அமைத்த இடையனல்லவா?



**ஊர் காத்தல் :**

இந்திர விழாவை கோகுலத்தார் நிறுத்தியதால் கோபமுற்ற இந்திரன், மழையால் பெருவெள்ளம் ஏற்படச் செய்த போது, கோவர்த்தன கிரி மூலம் மக்களைக் காக்க இடையிருந்தான்.

**நட்பில் இடை இருப்பு :**

சுதாமர் கண்ணனைக் காணச் செல்ல சுசீலை அவல் கொண்ட துணி முடிச்சு கொடுத்தனுப்பினாள். அண்ணி தந்த அவல் பிரியமானதென எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். ருக்மணி தேவி இடை புகுந்து தனக்கென விரும்பிக் கேட்க, உண்பதை இடையில் நிறுத்தி, குசேலனை குபேரனாக்கியது இடையன் செயல் அல்லவா?



**நரன்வதம் :**

நரகாசுரன் மரணம் தாயால் தான் ஏற்படும் என்பதை மறவாத கண்ணன், நரகாசுர யுத்த கலத்தில் தான் போரிட்டுக் கொள்வது நியாயமற்றது என்பதாலும், தாயால் மரணம் நேர வேண்டும் என்ற காரணத்தாலும் அம்பு பட்டு மயங்கிய நிலைக் கொண்டான். வெகுண்ட சத்யபாமா வில்லெடுத்து நாணேற்றி அம்பெய்தி நரகாசுர வதம் நிகழ வைத்து நடுநிலை கொண்டு இடையே மயங்கிய நிலை கொண்ட இடையன்.

**பள்ளி கொண்ட பெருமாள் :**

காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடையில் திருப்பாற்கடலின் சயன நிகழ்வை மாந்தரறிய பள்ளி கொண்டு பக்தர்கட்கு அருளும் இடையன்.



**பாவை பாடல் :**

மார்கழி மாதம் கோதையருளிய திருப்பாவையில் *"மூட நெய் பெய்து முழங்கி வழி வார கூடியிருந்தே குளிர்ந்தேலோ ரெம்பாவாய்"* என்ற பகுதி கண்ணன் மீது பக்தி கொள்ள வேண்டிய நிலையும், கண்ணன் இருப்பு நிலையும் தெளிவாக்கும்.

அக்கார வடிசில் தயாரித்து முதல் நிவேதனமாக கண்ணனுக்கு அதனை சமர்ப்பிக்க வேண்டும். பிறகு தான் மற்றவர்க்குத் தர வேண்டும் என்ற உயரிய நிலையும் காட்டப்படுகிறது. நடுவில் கண்ணன், சுற்றிலும் பாவையர் இருக்க கண்ணனுக்கு அடிசில் தந்து மற்றவர்களுக்கும் அளிக்கப்பட்டது. மூட நெய் பெய்துள்ள அடிசில் கையில் வைத்ததை உண்பதாகக் கூறவில்லை. அதிலுள்ள நெய் முழங்கை வரை வழிகின்றதாம். யாரும் உண்ணவில்லை ஏன்?

நேரில் உள்ள கண்ணன் உண்ணும் அழகு கண்டு ஆனந்தமடைந்து அதன்பின் தாங்கள் உண்ணலாம் என கண்ணனை முன்னிலைப்படுத்துகிறார்கள். ஆனால் கண்ணனோ மக்கள் உண்பதைக்கண்டு களித்திட எண்ணுகிறான். எவரும் உயர்நிலை நின்று சிறக்க தான் இடை நின்று உதவும் வள்ளலாக இடையனாகின்றான்.

**மானங்காத்தல் :**

துச்சாதனன் திரௌபதியை ஆடையவிழ்த்து மானபங்கம் செய்யும்போது "கண்ணனே சரண்" பாஞ்சாலி என, எங்கோ துவாரகையிலிருந்து கொண்டு பாஞ்சாலிக்கு இடை கட்டிய ஆடைகள் வளர இடைப்பட்ட ஆடைகள் தந்து மானங்காத்த இடையன் இவன்தானே?

**நிறைவாக :**

இதுபோல் இடைநின்று நட்பு, அன்பு, பக்தி ஆகிய வற்றிற்கு ஆட்பட்டு உதவும் இடையன் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம். காலமும் இடமும் கருத் தில் கொண்டு நிறைவு செய்ய முற்படுகிறோம். மனித உடலில் நடுநாயகமாக இயங்கும் சக்தியாக இதயம் அமைந் துள்ளது. இதயத் தாமரையில் கண்ணனை இருத்திட வேண்டும். நமது எண்ணங்கள், சொல், செயல் ஆகிய வற்றிலும் கண்ணனை எண்ணினால் எண்ணிய எண்ணங் கள் கைகூடும். உடலில் இடையில் இயங்கும் இதயத் தமர்ந்து நல்லனயாவும் நடைபெற நடு நாயகனாக அமைவது உறுதி.

உண்ணும் போது கிருஷ்ணார்ப்பணம், பேசும் போது, செயல் செய்யும் போது, உறங்க முற்படும் போது கண்ணனே துணை என நமக்கும் நமது செயல்களுக்கும் இடையே இருத்தினால் இடையன் தரும் இன்பங்கள் ஏரா ளம். கடையனும் கடைத்தேற கண்ணன் தானே முன் னின்று காப்பான். கண்ணன் திருவடிகளே சரணம்.

## கண்ணனின் அற்புதங்கள்



**பிரமனுக்கு அறிவுரை :**

தாமோதரா! உன் பெருமையை அறியாத பிரமன், பசு, கன்று காலிகள் ஆயர் சிறுவர்களான அனேகம் பேரை மறைத்து ஒரு குகையில் வைத்தான். கண்ணனாகிய நீ அந்தப் பசுக்கள் கன்று காலிகள், சிறுவர்களைப் படைத்து வேற்றுமை தெரியாமல் இருக்கச் செய்தாய். மறுநாள் அந்த பிரமன் வந்து பார்த்த போது எல்லாம் அப்படியே இருக்கக் கண்டு பயந்து உன்னிடம் அடியேன் செய்த பிழையைப் பொறுத்து, என்னைக் காக்க வேண்டும் என்று வேண்டவும், அவ்வாறே அப்பிரமனின் பிழையைப் பொறுத்துக் காத்தான்.



**தாழிக்கும், ததிபாண்டனுக்கும் :**

வெண்ணெய் களவாடிய உன்னை பெண்கள் துரத்தியபோது, கண்ணில்லாத ததிபாண்டன் என்பவன் வீட்டில் நுழைந்து அவனுக்கு கண் கொடுத்து அங்கிருந்த தாழியில் புகுந்து ஒளிந்துக் கொண்டாய். பின்னர், தாழியை திறக்குமாறு அவனிடம் நீ வேண்ட, கண் வேண்டாம். எனக்கு பரமபதம் தா. இல்லையெனில் உன்னை விடேன் என்று கூறியபோது அத்தாழிக்கும், அவனுக்கும் பரமபதம் அளித்த இறைவனே கண்ணன்.

**பாரிஜாத மரம் :**

கண்ணன் ருக்மணிக்கு ஒரு பாரிஜாத மலரைக் கொடுத்தான். சத்தியபாமா கண்ணனுடன் பேசாமல் ஊடி நின்றதை கண்டு, கருடன் மீது ஏறி, தேவலோகம் சென்று பாரிஜாத மலரைப் பறிக்கத் தொடங்கிய போது, கண்ணனைத் தடுத்து தேவர்களுடன் இந்திரனும் போரிட்டனர். அவர்கள் எல்லோரும் மயங்கி விழும் படியாகச் சங்கினை ஊதி, அம்மரத்தையே பிடுங்கி வந்து சத்தியபாமாவுக்கு கொடுத்தவன் கண்ணன்.

# 108 திவ்விய தேச வைபவம்



# திருக்குளந்தை

## (நவதிருப்பதி–6)

– திரு. உருப்பட்டூர் செளந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

ஒரு காலத்தில் இந்த ஊர் காடாக இருந்ததனால் "குளக்காடு" "தடாகவனம்" என்கிற பெயரில் இருந்தது. இங்கு வேதசாரன் என்கிற வேதம் வல்ல பிராம்மணன் வாழ்ந்து வந்தான். இவன் தனக்குக் குழந்தைப் பேறு வேண்டி, இத்தலத்து எம்பெருமானை நித்தமும் தனது மனைவி குமுத வல்லியுடன் வணங்கி வந்தான்.

பகவான், பிராம்மணனுக்கு இரங்கி, மகப்பேறு அருள்கிறார். பெண்குழந்தை, கமலாவதி என்கிற பெயர். இவள் மணப்பருவம் எய்திய சமயம் சிறு வயது முதலே வளரும் பக்தி,காதலாகப் பெருகி திருமணம் என்றால் இந்த எம்பெருமானுடன் தான் நடக்க வேண்டும் என்கிறாள்.

கானகம் சென்று தவமும் செய்கிறாள். (இது பாலிகாவனம் எனப்படுகிறது.) அவள் மன உறுதியைக் கண்ட திருக்குளந்தை எம்பெருமான், அவள் முன்பு தோன்றி, கமலாவதியை மணந்து, கெளஸ்துப மணியைப் போல் தனது திருமார்பில் இடம் அளிக்கிறான். வேதசாரன் என்கிற இந்த பிராம்மணன் ஆண்டாளை, பகவானுக்கு விவாகம் செய்து கொடுத்த பெரியாழ்வாரைப்போல, திருக்குளந்தை எம்பெருமானுக்கு மாமனார் ஆகிறார்.

வேதசாரனும், குமுதவல்லியும் இவ்வூரிலேயே தங்கி, பெருமானுக்கு கைங்கர்யம் செய்து வரும்போது, ஒரு நாள் நீராடச் சென்ற குமுதவல்லியை அச்மசாரன் என்கிற அசுரன் கவர்ந்து இமயமலைக் குகையில் சிறை வைக்கிறான். வேதசாரன் என்கிற இப்பிராமணன், பகவானை ஒரு தைப் புஷ்யப் பௌர்ணமியில் கலச தீர்த்தத்தால் திருமஞ்சனம் செய்து வேண்ட, பகவான் ஸ்ரீநிவாசன் அடுத்த கணம் பெரிய திருவடி மீது ஏறி, இமய மலை சென்று குமுதவல்லியை மீட்டு, வேதசாரனிடம் சேர்ப்பித்தார். பின்னாலேயே தொடர்ந்து வந்து போர் செய்ய முயன்ற அச்மசாரன் என்கிற அசுரனின் இரு கால்களையும் பற்றித் தரையில் அடித்து தன் திருவடிகளை அவன் தலையில் வைத்து உத்ரதாண்டவம் ஆடினார். தேவர்கள் புகழ்ந்து துதிக்க பகவான் "மாயக்கூத்தன்" என்கிற திருநாமம் பெற்றார். பெரிய திருவடி கருடன் ஸ்ரீவில்லிபுத்தூரில் அருகில் இருப்பது போலவே இங்கும் அருகில் இருக்கிறார்.

**சிறப்புகள் :**

ஓர் அடியவனின் மகளின் காதற்பெருக்குக்குத் தன்னையே ஈந்து, அவனை மார்பில் பூண்டவர். அந்த அடியவனின் மனைவியை மீட்டு கொடுத்து வெற்றிக் கூத்து ஆடியவர்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | – | மூலவர், ஸ்ரீநிவாஸன் (கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம்) |
| உற்சவர் | – | மாயக்கூத்தன் |
| தாயார் | – | அலர்மேல் மங்கை, குளந்தைவல்லி, பாலவல்லி. |
| விமானம் | – | ஆனந்த நிலைய விமானம். |
| தீர்த்தம் | – | பெருங்குளம். |
| தல விருக்ஷம் | – | .... |
| ப்ரத்யக்ஷம் | – | தேவகுரு ப்ரஹஸ்பதி |
| ஆகமம் | – | வைகானஸம். |
| மங்களாசாஸனம் | – | நம்மாழ்வார். |
| விசேஷம் | – | "செவ்வாய் கிரகத்துக்குப் பரிகார ஸ்தலம்" |

### த்யான சுலோகம்

*ஆநந்தாலய நாமதேயஸஹிதம், யஸ்மிந் விமாநம் மஹத்*
*தீர்த்தம்யத்ர ப்ருஹத் தடாக மிதிவை மாயா நடோ மாதவ:|*
*ப்ரத்யக்ஷோ ஹிரிதிங் முகஸ் ஸுரபதேர் தேவ்யாஸமம் பாலயா,*
*தத்வை திவ்ய ப்ருஹத் தடாக நகரம் சித்தே ஸதா பாவயே ||*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

### பாசுரம்

*"கூடச் சென்றேன், இனி என் கொடுக்கேன்?*
*கோல் வளை நெஞ்சத் தொடக்கம் எல்லாம்*
*பாடற்று ஒழிய இழந்து, வைகல்*
*பல் வளையார் முன் பரிசு அழிந்தேன்;*
*மாடக் கொடி மதிள் தென் குளந்தை*
*வண் குடபால் நின்ற மாயக்கூத்தன்*
*ஆடல் பறவை உயர்த்த வெல்போர்*
*ஆழி வலவனை ஆதரித்தே"*

– நம்மாழ்வார்

*"தனக்கு உடலம் வேறானதன்மை உணரான்*
*மனக்கவலை தீர்ந்து உய்ய மாட்டான் - நினைக்கில்*
*திருக்குளந்தையார் உரைத்த சீர்க்கீதைபாடும்*
*தருக்கு உளம் தையாமல் இருந்தால்"*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

### நாமாக்கள்

461. *ஓம் ஸுஹ்ருத் நம:*
(தேவர்களிடம் அன்புள்ளவனே ; அம்ருதத்தைக் கொடுத்தவர்)
*ஓம் ப்ருஹ்ம ச்ரியை நம:*
(படைப்பது போன்ற ப்ரம்ம லக்ஷணங்கள் பொருந்தியவளே)

462. *ஓம் மநோஹர: நம:*
(அசுரரை மயக்கிய மோகன ஸ்வரூபனே)
*ஓம் ப்ராஹ்மண ப்ரியாயை நம:*
(ப்ரஹ்மோபாஸநம் செய்பவரிடம் அன்புள்ளவளே)

463. *ஓம் ஜிதக்ரோத: நம:*
(மயங்கிய அசுரர்களை ஜயித்தவனே)
*ஓம் ராஜச்ரியை நம:*
(எல்லா உலகையும் ஆளும் சீர்மை உடையவளே)

464. *ஓம் வீரபாஹு: நம:*
(ஆயிரம் வீரத்தோள்களை உடையவனே)
*ஓம் ராஜ கலிதாயை நம:*
(அரசர்களால் த்யானிக்கப்படுபவளே)

## சாஸ்த்திர நீதிகள்–82

குசேலினம் தந்தமலாப ஹாரிணம் பஹ்வா சிநம் நிஷ்டூர வாக்ய பாஷிணம் |
சூர்ய உதயே சா அஸ்த்த மயே ச சாயிநம் விமும்சதி ஸ்ரீரபி சக்ர பாணிணம் ||

1. அழுக்காக உடை உடுத்திக் கொள்ளக்கூடாது.
2. பல் விளக்காமல் சாப்பிடக்கூடாது.
3. யாரையும் கடுமையான சொற்களால் பேசி விடலாகாது.
4. காலையும், மாலையும் தூங்குதல் ஆகாது.

இப்படிப்பட்ட குணங்களை உடையவன் மஹாவிஷ்ணுவிற்கு சமமான குணம் உள்ளவன். ஆனாலும், அவனிடம் மஹாலக்ஷ்மி வாசம் செய்ய மாட்டாள்!

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.





## ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம்

*ஸுரமந்திர தரு மூல நிவாஸ:*
*சய்யா பூஸ்- தரு - ஜநிதம் வாஸ:।*
*ஸர்வ பரிக்ரஹ போகத்யாக: கஸ்ய*
*ஸுகம் ந கரோதி விராக: ॥*

**ஒரு கோயில் அல்லது மரத்தடியில் படுத்துக் கொண்டு, ஒரு மான் தோலை எடுத்து உடுத்திக் கொண்டு (உடையை பற்றி கவலையின்றி), மண் தரையில் படுத்துக் கொண்டு, சகல சுகங்களையும் வேண்டாம் என்று உறுதியாக நினைத்து விட்டு விடுபடுபவர்களுக்கு, எவ்வாறு (கவலையே இன்றி) சுகம் இல்லாமல் போகும்?**

**(சுக போகமான ஆசைகளை அறவே விட்டொழித்தவர்களுக்கு முற்றிலும் சுகமான நிலைதான் கிட்டும் என்பது மறைந்துள்ள கருத்தாகும்.)**

**– திரு. சீதாராமன், சென்னை.**

465. *ஓம் விதாரண: நம:*
(ஆயுதங்களால் ராகு முதலானவரைப் பிளந்தவனே)
*ஓம் பலச்ரியை நம:*
(உபாஸித்து பலன் பெற்றவர்கள், குன்றாது சோபையுடன் இருக்கச் செய்பவளே)

466. *ஓம் ஸ்வாபந: நம:*
(மற்றவரைப் பரவசப்படுத்தியவனே)
*ஓம் ஸ்வர்கதாயிந்யை நம:*
(துக்கமே இல்லாத சுகத்தை அருள்பவளே)

467. *ஓம் ஸ்வவஸ: நம:*
(தனக்கு இஷ்டமானவருடன் இருப்பவனே)
*ஓம் தேவச்ரியை நம:*
(தத்தம் பதவி நிலைக்க தேவர்களாலும் துதிக்கப்படுபவளே)

468. *ஓம் வ்யாபீ நம:*
(அம்ருதம் கடையும்போது தேவர், அசுரர், மலை, வாசுகி என்று எங்கும் வியாபித்து இருந்தவனே)
*ஓம் அத்புதகதாயை நம:*
(பரம தரித்திரர்களும் பரம ஐச்வர்யத்தைப் பெற அத்புதம் நிகழ்த்துபவளே)

469. *ஓம் நைகாத்மா நம:*
(அப்போது, பல அவதாரங்களை எடுத்தவனே)
*ஓம் வேதச்ரியை நம:*
(வேதம் போற்றும் பெருமை உடையவளே)

470. *ஓம் நைககர்மக்குத் நம:*
(கடைந்து, தாங்கி, அசுரரைப் பிளந்து அம்ருதத்தை அளித்தவனே)
*ஓம் ச்ருதி மார்கிண்யை நம:*
(வேதத்தாலேயே அறியப்படுபவளே)

ஸ்ரீமதே பாலிகாவல்லீ பத்மாவதீநாயிகா ஸமேத ஸ்ரீஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:

குறிப்பு : தாமிரவருணி வடகரையில் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து சுமார் 11 கி.மீ. தூரம் பெருங்குளம் ஏரிக்கரையில் இத்திவ்யதேசம் அமைந்துள்ளது. இதனை தென்குளம், பெருங்குளம் என்றும் கூறுவர்.

திவ்ய தேச வைபவம் வளரும்...

## ஸ்ரீமத்பாகவதம் விடைகள்

1. துர்கா தேவி.
2. பெண் சிசு துர்கா தேவியாக காட்சியளித்தாள்.
3. தாடகியை.
4. குப்ஜே.
5. ஆதிசேஷன்.
6. ஏகாதசி.
7. அவல்.
8. அர்ஜுனன்.
9. உத்தவன்.
10. மஹாலக்ஷ்மியின் அவதாரம்.

தொகுப்பு :
திருமதி. என். ஹேமா,
திருப்பதி, 77020 15076

# திருத்தணிகையில் ஆடித்தெப்போத்ஸவம்

–திரு. வீ.சீதாராமன்,
சென்னை,9894526302.

முருகனின் அறுபடை வீடுகளில் "தனித்துவம்" கொண்ட பெருமைகளுடன் விளங்கிடும் திருத்தலம், வள்ளிதேவசேனா சமேத முருகப் பெருமானை நாயகனாகக் கொண்ட திருத்தலம் திருத்தணியாகும். ஆறுமுகப் பெருமானின் அறுபடை வீடுகளுள், ஐந்தாவதாக சிறப்புக் கொள்ளும் படைவீடு திருத்தணிகை.

முருகப் பெருமான், தேவர்களது துயர் தீர்க்கும் வண்ணம் சிக்கலில் வேல் வாங்கி, செந்தூரில் சூரபத்மனை சம்ஹாரம் செய்தார்.வள்ளியை மணம் புரிய வேடர் இனத்தலைவர்களோடு சீற்றத்துடன் விளையாடினார். பின்னர், சினம் தணிந்து அமர்ந்த இடமே "தணிகை" ஆனது. தேவர்களது அச்சம் தீர்த்தத்தலம், தேவேந்திரனின் துயர் மற்றும் தேவலோகத்தின் சூன்யம் நீக்கப்பட்ட தலம். அதுவே திருத்தணிகை என்றும் காலப்போக்கில் திருத்தணி என்றும் மருவியது.

செந்தூரில் சூரபத்மன் என்ற கொடிய அரக்கனை சம்ஹாரம் செய்த பின், சினம் தணிந்து அமர்ந்த இடமே தணிகை மலை என்கிறோம். சினம் தணிந்த முருகனுக்கு சிறப்பான அடையாளம்...! கையில் இருக்க வேண்டிய வேல் இல்லை. சம்ஹாரம் செய்த வேலினை நனைக்கப்பட்ட புனித நீரே சரவணப்பொய்கை எனப்படுகிறது.

இந்தப் பொய்கை எவ்வாறு உருவானது. சிவ பெருமானிடமிருந்து ஞான சக்தியாகிய வேலாயுதத்தினை பெற வேண்டி, முருகப் பெருமான் மலையின் அடிவாரத்தில் ஒரு தீர்த்தத்தினை உருவாக்கி, அதன் கரையினில் சிவபெருமானை ஸ்தாபித்து வழிபட்டார் என்றும், அதுவே குமார தீர்த்தம், கங்கா தீர்த்தம், சரவணப் பொய்கை என்றும் பிரசித்தி பெற்றது என்பதும்



புராணங்களில் காணப்படும் தகவல்கள். இதில் நீராடினாலும், இப்புனித நீரினை எடுத்து இறைவனின் நாமத்தை உச்சரித்து தலையில் புரோக்ஷணம் செய்து கொண்டாலும், மனிதப்பிறவியில் உண்டாகும் சகல விதமான தோஷங்களும் விலகும் என்பது தொன்று தொட்டு நிலவி வரும் திடமான நம்பிக்கை.

இந்த சரவணப் பொய்கை தேவேந்திரனால் பெரிதும் ஆராதிக்கப்பட்டது. தேவேந்திரன் மகள் தெய்வானையை முருகனுக்கு திருமணம் செய்து கொடுத்து தேவேந்திரன் பல செல்வங்களை முருகன் காலடியில் கொட்டுகிறான். அதில் "ஐராவதம்" என்கிற யானையும் ஒன்று. அந்த யானை இந்திர லோகத்தை விட்டு சென்றபின் இந்திரலோகம் ஒளி குன்றியது.

அதிர்ந்து போனான் தேவேந்திரன். அமைதி இழந்தான். தேவலோகம் விட்டு தணிகை மலை அடைந்தான். தணிகை நாதனை சரணடைந்தான். முருகப் பெருமான் ஐராவதம் என்ற யானையை திருப்பி அளிக்க திருவுள்ளம் கொண்டார். இதனை தேவேந்திரன் உள்ளம் ஏற்கவில்லை. ஒரு வேண்டுகோள் மட்டும் விடுத்தான். ஐராவதம் என்ற யானை இந்திரலோகத்தை நோக்கியவாறே இருக்க வேண்டும் என்றும், தேவருலகம் மீண்டும் இழந்த சிறப்பினை அடைய வேண்டும் என்றும் வேண்டினான். அவ்வாறே தேவேந்திரனுக்கு முருகன் அனுக்கிரஹம் செய்தார். இன்றும் அவ்வாறே முருகப் பெருமானின் ஒரு வாகனமாகத் திகழும் ஐராவதம் என்ற யானை முன் பக்கம் திரும்பி தேவேந்திரனை பார்த்தவாறே உள்ளது. இதனை பக்தர்கள் நேரில் கண்டு மகிழலாம். இவ்வாறாக



தேவேந்திரனின் பிரார்த்தனையின் சமர்ப்பணமாக துவங்கப்பட்டதே தணிகையின் மூன்று நாள் தெப் போத்ஸவம்.

ஆண்டுதோறும் தட்சிணாயனம் துவங்கிய முதல் இரண்டு நாட்களிலேயே விழா துவங்குகிறது. ஆடிமாதம் வருகின்ற கிருத்திகைக்கு முன்வரும் அசுவதி, பரணி இரண்டு நாட்களும் அசுவதி அன்று தேவர்களின் பஞ்சம்/ துயர் தீர்ப்பதற்காகவும், பரணி அன்று இருபத்தி ஏழு நக்ஷத்திர தேவதைகளும் சீரான இயக்கம் கொண்டு, புவியில் தோன்றிய உயிர்கள் அனைத்தையும் ரக்ஷிப்பதற் காகவும், கிருத்திகை அன்று முருகப் பெருமானின் தரி சனம் பெற்று பக்தர்கள் உலகம் தீவினை அகன்று நல் வினை கொண்டு நற்கதி அடைய வேண்டியும் இவ் வாறாக மூன்று நாட்கள் நடைபெறுகின்ற கொண்டாட் டங்களின் மங்களமான சங்கமமே “மூன்று நாட்கள் நடை பெறும் தணிகை தெப்போத்ஸவம்” ஆகும்.

முதல் நாள் காலை பிரம்ம முகூர்த்தத்தில் தொடங்கி, மூன்று நாள் நடைபெறுகின்ற முருகனின் பெருவிழாவில், கோயில் அடிவாரத்தில் உள்ள சரவணப்பொய்கையில் முதல் நாள் மாலை ஆறு மணிக்கு தெப்பத்திருவிழா தொடங்கும். அற்புதமான அலங்காரங்களுடன் தெப்பத்தில் வலம் வரும் வள்ளி, தேவசேனா மணாளனைக் காண கண் கோடி வேண்டும்.

மாலை அலங்கரிக்கப்பட்ட உற்சவர், மலைப்படிகள் வழியாக இறங்கி, சரவணப்பொய்கையினை அடைவார். பின் உற்சவர் மலைக்கோயிலுக்கு திரும்பியபின், மூலவ ருக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். மூன்று நாட்களும், மாலை நான்கு மணி முதல் பரவசம் கொள் ளும். கலைஞர்களின் மங்கள இசை முழங்க பக்தி மணம் கமழும் கலை நிகழ்ச்சிகள், பக்தர்கள் அனைவரின் மனத்தினையும் கொள்ளை கொண்டு மயங்க வைக்கும். பால் காவடி, பன்னீர் காவடி, புஷ்பக் காவடி, மயில் காவடி கொண்டு, அலகு குத்திக்கொண்டு தங்கள் நேர்த்திக்கடனை முடிக்கும் பக்தர்கள் சூழும் பரவசக் காட்சிகளை எழுத்தில் வடிக்க இயலாது.

மலைகளில் சிறந்தது திருத்தணி என்று போற்றுகிறது கந்த புராணம். தணிகை மலைக்கு செல்ல வேண்டும் என்று நினைத்தாலோ, தணிகை மலை இருக்கும் திசை நோக்கி வள்ளி மணாளனை நினைத்து வணங்கினாலோ, அந்த க்ஷணத்திலேயே அனைத்து பாபங்களும் விலகும். நோய் நொடிகள் அறவே தீரும் என்கிறது தணிகை புராணம்.

தணிகை முருகனை, மும்மூர்த்திகளுடன், நந்தி தேவர், அகத்திய மாமுனிவர், வாசுகி எனப்படும் நாகம் முதலானோர் வழிபட்டதாக புராணச் செய்திகள் கிடைக்கின்றன.

தணிகையின் அருகே “இந்திர நீலச்சுனை” என்று காணப்படுகிறது. இது தேவேந்திரனால் உண்டாக்கப் பட்டது என்றும், அதில் ஒரு நீலோற்பலக்கொடியை வளர்த்து, அதன் மலர்களை கொண்டு மூன்று வேளை யும் முருகப் பெருமானை பூஜித்து, தன்னால் இழைக்கப் பட்ட சங்க–பத்ம நிதிகள், கற்பகத்தரு, காமதேனு ஆகியவற்றை திரும்பப் பெற்றதாகவும் செவி வழி செய்திகள் கிடைக்கின்றன. இன்றளவும் தணிகை நாதனின் அபிஷேகத்திற்கு இந்த தீர்த்தம் பயன்படு கிறதாகக் கூறுகிறார்கள். இந்த புனித பயன்பாட்டினால், பக்தர்கள் இதில் நீராடுவதற்கு அனுமதி இல்லை.

இது தவிர, தணிகை மலையின் தென்கிழக்குத் திசை யில் சப்த கன்னிகைகள் அமைத்து வழிப்பட்ட ஏழு சுனை களும், ஆலயங்களும் அமையப் பெற்றுள்ளது. மேலும், இங்குள்ள ஸ்ரீவிஷ்ணு தீர்த்தத்தில் பங்குனி உத்திரமும், ஞாயிற்றுக் கிழமையும் கூடும் நன் னாளில் நீராடி தணிகை முருகனை வழிபட சகல வித பாபங்களும் விலகி நற்கதி பெறலாம்.



### அன்னமய்யாவிற்கு வைஷ்ணவ யதி பஞ்ச சம்ஸ்காரம் செய்வித்தல் :

பக்தர்களுக்கு எளியவனான அந்த பகவான், பக்த சிகாமணியான அன்னமய்யா பாடல்களின் அழகில் மயங்கினார். ஒரு நாள் திருமலையில் வாழ்ந்து வந்த கனவிஷ்ணு என்ற வைஷ்ணவ யதியின் கனவில் தோன்றி, "தாள்ளபாக்க அன்னமய்யா என் பக்தன். அவன் சிறு தம்பூராவை மீட்டிய வண்ணம் என் மீது பாடல் களைப் பாடி என்னை பரவசிக்கச் செய்கிறான். உன் அருகில் வருவான். நீ காலம் கடத்தாமல் எனக்கு பதில் நீயே அவனுக்கு சங்கு சக்ர முத்திரைகளைக் கைகளில் பதித்து அவனை என்னவனாகச் செய்வாய் என்று சொல்லி மறைந்தார். உறக்கத்திலிருந்து உடனே



# அன்னமய்யா வாழ்க்கை வரலாறு

விழித்தெழுந்த கனவிஷ்ணு அந்தச் சிறுவனால் தனக்கு திருமலையப்பன் தரிசனம் கிடைத்ததை எண்ணி மெய்சிலிர்த்தார். இறைவனது கட்டளையை உடனே நிறைவேற்ற எண்ணி மறுநாள் காலை தன் நித்ய கர்மாக்களை விரைவில் முடித்துக் கொண்டார். கையில் சங்கு, சக்ர முத்திரைகளை ஏந்திய வண்ணம் வாசலுக்கு வந்தார். அன்னமய்யாவை எதிர்பார்த்துக் காத்திருந் தார். அதே சமயம் ஸ்ரீஹரி சங்கீர்த்தனைப் பாடியவாறு அன்னமய்யா கனவிஷ்ணுவின் இல்லத்திற்கருகில் வந்தார். வேங்கடவன் தன் கனவில் கூறிய அடையாளங் கள் அனைத்தும் அவனுக்குப் பொருந்தி இருப்பதைப் பார்த்து வியந்தார். அந்தச் சிறுவனை அருகில் அழைத்து பெயரைக் கேட்டார். அன்னமய்யா தன் பெயரைச் சொல்லி அந்த முனிக்கு சாஷ்டாங்க நமஸ் காரம் செய்தார். முனி அந்தச் சிறுவனை அன்புடன் அழைத்து "என் கையால் உனக்கு சங்கு சக்ர முத்திரை இட விரும்புகிறேன்" என்றார். அன்னமய்யாவின் சம்ம தத்துடன் கனவில் வேங்கடவன் சொல்லிய வண்ணம் வேதங்களில் சொல்லியபடி அவருக்கு கனவிஷ்ணு சங்கு சக்ர தாரியின் முத்திரைகளையிட்டு, பஞ்ச சம்ஸ்காரம் செய்வித்து அவரை விஷ்ணுவைச் சேர்ந்தவனாக ஆக்கினார்.

### தாள்ளபாக்கம் திரும்புதல் :

தாள்ளபாக்கத்தில் தன் மகனை நாராயணசூரி லக்கமாம்பா தம்பதியினர் ஊரெல்லாம் தேடி, பக்கத்து கிராமங்களிலும் தேடிக் களைத்து, தமக்கு புத்திர பாக்யம் அளித்த அந்த வேங்கடவனே அந்த பிள்ளையை திருப்பிக் கொடுக்க இயலும் என்று கருதி திருமலைக்கு வந்தனர். அங்கு சங்கீர்த்தனங்களால் வேங்கடவனை அர்ச்சித்துக் கொண்டிருந்த தம் மகனைப் பார்த்தனர். தாய் கண்ணீர் மல்க மகனை வீட்டிற்கு திரும்பி வருமாறு அழைத்தாள். மகன் மறுத்தான். தாயின் வேதனையைக் காண இயலாத அர்ச்சகர், "உங்கள் ஊரிலும் இந்த கேசவன் குடி கொண்டுள்ளான் அல்லவா?" என்று பலவாறு வற்புறுத் தியும் அன்னமய்யா ஒப்புக் கொள்ளவில்லை.

தெலுங்கு மூலம்: டாக்டர். மன்னூரு சிவப்ரவீண்
தமிழாக்கம்:திருமதி ராதாராமநாதன், 93936 09240

அன்றிரவு கனவில் வேங்கடவன் தோன்றி, “அப்பனே! உன் வம்சத்தினர் வேத, உபநிஷத்துகளை பிறருக்குச் சொல்லக்கூடிய திறமை வாய்ந்தவர்கள். தேஹம், தேஹி இரண்டும் வேறே என்று அறிந்து கொள். அனைத்து உயிரினங்களும் சமமானவையே என்ற பார்வையை நீ வளர்த்துக்கொள். உன் பாரமனைத் தையும் நான் ஏற்று உனக்கு சுபமே அளிப்பேன். தாய் சொல்லை தட்டாது உடன் சென்று வா!” என்று போதித் தார். காலையில் தாய் தந்தையர்க்குத் தன் கனவைக் கூறி பெற்றோருடன் தாள்ளபாக்கம் திரும்பினார்.

### அன்னமய்யா திருமணம் :

தாய் தந்தையருடன் ஊர் திரும்பிய அன்னமய்யா ஹரி சங்கீர்த்தனங்கள் இயற்றுவதிலும் பாடுவதிலுமே பொழுதைக் கழித்தார். லக்கமாம்பா, நாராயணசூரி தம் பதியர் தன் மகனுக்கு திருமணம் செய்வதற்கான முயற்சியில் இறங்கினர். பெண்ணை பெற்றவர்களை நாடி தம் மகனுக்கு பெண் கொடுக்குமாறு வேண்டினர்.

அவர்கள் “எப்போதும் கோவிந்தா! கோவிந்தா! கோவிந்தா! என்று பாடிக் கொண்டிருக்கும் கோவிந்த நாமதாசனுக்கு பெண் கொடுக்க மாட்டோம்” என்றனர். அனைவரது சுமையையும் தாங்கும் அந்த வேங்கடவன் மீதே தமது சுமையையும் இறக்கி வைத்து விட்டு சரணடைந்தனர்.

எவர் பெண்ணை கொடுக்க மாட்டேன் என்றாரோ அவர் கனவில் ஸ்வாமி தோன்றி, பெண்ணை அன்ன மய்யாவிற்கு திருமணம் செய்து வைக்குமாறு ஆணை யிட்டார். மறுநாள் அவர்கள் அன்னமய்யாவின் பெற்றோ ரிடம் வந்து தாங்கள் பேசியவற்றை மனதில் கொள்ள வேண்டாம் என்று மன்னிப்புக் கோரி, தங்கள் பெண்கள் அக்கலம்பா, திருமலம்பா இருவரையுமே மணமுடித்துக் கொடுப்பதற்கு சம்மதித்தனர். பெரியவர்கள் முன்னி லையில் திருமணம் கோலாகலமாக நடந்தது.

### அகோபில யாத்திரை :

திருமணத்திற்குப் பிறகு அன்னமய்யா வேதாந்த பாடங்களைக் கற்க எண்ணி அகோபில மடத்திற்குச் சென்றார். அங்கு வைஷ்ணவாச்சாரியரான சடகோப முனிகளிடம் வேதாந்த வித்யையை வெகு விரைவாகக் கற்றுக் கொண்டார். தினமும் காலையில் ஸ்ரீநிவாசனை பூஜித்தல், சேவித்தல், புகழ்ந்து பாடுதல், தியானித்தல் முதலிய காரியங்களிலேயே ஈடுபட்டு வந்தார்.

தொடரும்...



## கண்(ண)னாய் காப்பாய்!

காதலி ராதையை கவர்ந்தவனாம்
கான மயிலாட குழலூதியவனாம்
கோர பூதனையை ஒழித்தவனாம்
கொடிய கம்சனை அழித்தவனாம்

கபடிலா பாஞ்சாலியை மீட்டவனாம்
கலி தீர்க்கும் கீதையையீன்றவனாம்
கதிதரு பாசுரத்திலுறைபவனாம்
கரோனா கவ்வாது காப்பவனாம்

கலியுக கல்கியாய் உதிப்பானாம்
கலியுக கவலைகள் தீர்ப்பானாம்
காலமும் நெஞ்சில் இருப்பானாம்
கண்(ண)னாய் எமை காப்பானாம்!

காரிருள் பொழுது உதித்தவனாம்
கோகுல சேயாய் வளர்ந்தவனாம்
கண்டோர் தமை கவர்ந்தவனாம்
கோகுலம் கொஞ்சிய கள்வனாம்!


குடத்து வெண்ணையுண்டவனாம்
குட்டி வாயில் உலகேந்தியவனாம்
காளிங்க நர்த்தனம் ஆடியவனாம்
கரைபுரள் யமுனை காத்தவனாம்!

கோபியர் ஊடலில் உய்த்தவனாம்
கோதை பக்தியில் குளித்தவனாம்
கோவர்த்தன மலை பிடித்தவனாம்
காடேகி ஆவினம் மேய்த்தவனாம்!

குருகுலத்து வாசம் கண்டவனாம்
குசேலனது நேசம் துய்த்தவனாம்
கைப்பிடி அவலில் களித்தவனாம்
காப்பியம் போற்றும் நாயகனாம்!

**திரு. டி. சுவாமிநாதன், கோவை.**

அன்றாட
வாழ்வுக்கு
ஆழ்வார்களின்
அருளிச்
செயல்–7



# மணமேடையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963

சென்ற இதழில் கன்னிகாதானம் செய்யும் பொழுது கோத்திரத்தைச் சொல்லி கன்னிகாதானம் செய்து கொடுப்பதைப் பார்த்தோம்.

மணமகனை மேடையில் வரவேற்கும் பொழுது அவருக்கு இருக்கை(ஆசனம்), பாத்யம் (திருவடி விளக்குவதற்காக தீர்த்தம்) போன்ற வற்றைச் சமர்ப்பித்து, மகாவிஷ்ணுவை வரவேற் பது போலவே வரவேற்கிறோம். மஹாவிஷ்ணு – ஸ்வரூபஸ்ய – வரஸ்ய இதம் ஆசனம் – ஸகல ஆராதனை: ஸ்வர்ச்சிதம் – மகாவிஷ்ணு ஸ்வரூப வர ஸ்வா கதம் ஸ்வாகதம் இதம் தே பாத்யம் என்று மந்திரம்.

இப்படி மூன்று முறை சொல்லுகின்றோம். இதற்கு என்ன பொருள்?

மகாவிஷ்ணு உருவத்தில் உள்ள இந்த மண மகனுக்கு, இந்த இருக்கையைச் சமர்ப்பிக்கிறேன். மகாவிஷ்ணுவின் உருவத்தில் இருக்கக்கூடிய மணமகனே! உனக்கு நல்வரவு! இந்த திருவடி விளக்க தீர்த்தத்தை உனக்குச் சமர்ப்பிக்கிறேன். இதனை அங்கீகரித்து பாத பூஜையை ஏற்றுக் கொள்ள வேண்டும். இங்கு மணமகனை மகா விஷ்ணுவாகவே கருதுகின்றோம் என்பதை மனதில் கொண்டால், மணமேடை நிகழ்வுகளின் புனிதத்தை உணர முடியும்.

அதற்குப் பிறகு, விஷ்ணு சூக்தத்தின் மந்திரமாகிய *“தத் விஷ்ணோ: பரமம் பதம் சதா பச்யந்தி”* என்கிற மந்திரத்தைச் சொல்லி, அவருடைய பாதங்களை அலம்பி, ஆசமனம் செய்யச் சொல்கிறோம்.

அதற்குப் பிறகு, கன்னிகையின் தந்தை என்ன கூறு கிறார்தெரியுமா? ஆர்ஷேய ப்ரவரான் வித–கோத் ரோத்பவாம் (கோத்ரப் ப்ரவரத்தைச் சொல்ல வேண்டும்) கொள்ளுத் தாத்தா பெயரைச் சொல்ல வேண்டும், (நப்த்ரீம்) – தாத்தா பெயரைச் சொல்ல வேண்டும், (பௌத்ரீம்) – தகப்பனார் பெய ரைச் சொல்ல வேண்டும், (புத்ரீம்) பெண்ணின் நட்சத்திரம் ராசியைச் சொல்ல வேண்டும் – நாம்னீம் மதீனாம் கன்யாம்

ஆர்ஷேய ப்ரவரான் வித–கோத்ரோத்பவாம் (மணமகன் கோத்ரப் ப்ரவரத்தைச் சொல்ல வேண்டும்) – கொள்ளுத் தாத்தா பெயரைச் சொல்ல வேண்டும், (நப்த்ரே) – தாத்தா பெயரைச் சொல்ல வேண்டும், (பௌத்ராய) – தகப்பனார் பெயரைச் சொல்ல வேண்டும், (புத்ராய) மணமகன் பெயர் ராசி நட்சத்திரம் சொல்லி மகாவிஷ்ணு ஸ்வரூபாய வராய துப் யம் என்று சொல்லி, தேங்காய் தாம்பூலம் வைத்து, கன்னிகா தானம் நீர் வார்த்து கொடுக்க வேண்டும்.

பெண்ணுக்குச் சொல்லுகின்ற பொழுது அவளுடைய கோத்திரம் போன்றவற்றைச் சொல்லி, சாட்சாத் மகாலட்சுமி சொரூபிணியான இந்த மணமகளுக்கு என்று முடிப்பார்கள்.

மணமகன் மகாவிஷ்ணு என்றால் பெண் மகாலக்ஷ்மி தானே... மணமேடைக்கு வந்து விட்டால் மணமகன் விஷ்ணு வின் ரூபம் ஆகவே கருதப்படுகிறார். மணமகள் திருமகளின் உருவமாகவே கருதப்படுகிறாள்.

திருமணம் முடிகின்ற வரை அவர்கள் இருவரின் உருவத்திலும் மஹாவிஷ்ணுவும் மஹாலக்ஷ்மியும் மந்திர

பூர்வமாக ஆவாகனம் ஆகி இருக்கிறார்கள் என்பது தான் பொருள். மகா விஷ்ணுவும் மகாலட்சுமியும் மந்திரப் பூர்வமாக எழுந்தருளி இருக்கக்கூடிய இடத்தில் சகல தேவதைகளும் வந்து கலந்து கொள்கின்றார்கள். எனவே திருமண மங்கல நிகழ்வுகள் நடக்கின்ற மேடை, ஏதோ குதூகலமாக, நம் விருப்பத்திற்கு ஆர்ப்பாட்டமாக கொண்டாடுகின்ற மேடை அல்ல. அது ஒரு புனித மேடை. அந்த உணர்வோடு நாம் நடந்து கொள்ள வேண்டும். நிகழ்வுகளுக்கு இடையில் மணமக்களோடு கை கொடுப்பது, காலணியோடு மேடையில் ஏறுவது, போன்றவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டும்.



நாம் மணமக்களை ஆசிர்வதிக்க வேண்டும் என்றால், அதற்கான நேரத்தில் மட்டும் மேடையேறி ஆசிர்வதிக்க வேண்டும். அதற்கு முன், நாம் அவசரமாகச் செல்ல வேண்டும் என்று சொன்னால், மணமக்களின் உறவினர்களிடம் வருகையைப் பதிவு செய்து விட்டு – நாம் கொடுக்க வேண்டிய அன்பளிப்புகளை சேர்த்து விட்டுச் செல்லலாமே. மந்திரத்தை நிறுத்திவிட்டு – இடையில் மேடையேறி –மணமேடையில் மந்திரத்தை நிறுத்தச் சொல்லி, புகைப்படம் வீடியோ – முதலிய வற்றை எடுத்துக் கொள்வது தவறு. தேவதைகளை அவமதிப்பது போல என்பதை அறிய வேண்டும். இதன் முக்கியத்துவம் பலருக்குத் தெரியாததால் வரும் தவறு கள் களையப்பட வேண்டும். சரி, தேவதைகள் எல்லாம் அந்த மணமேடையில் எழுந்தருளி இருக்கிறார்கள் என்று சொல்லி விட்டோம். கோத்திரத்தைச் சொல்வது பற்றியும் நாம் தெரிந்து கொண்டோம்.

இங்கு ஒரு முக்கியமான விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய பெரியோர்கள் நமக்கு முக்கியமான ஒரு விஷயத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அதை இப்பொழுது மிக மிகக் குறைவானவர்களே பின்பற்றுகிறார்கள். அதாவது அபிவாதனம் சொல்வது என்று ஒரு முறை. இதை எளிமையாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் நம்மை நாமே அறிமுகப் படுத்திக்கொள்வது. கன்யாதான கோத்ர பிரவரம் வேறு. அபிவாதனம் வேறு. அபிவாதனம் செய்கின்ற சமயத்தில் நம்முடைய தாத்தா, கொள்ளுத் தாத்தா பெயர்களெல்லாம் வருவதில்லை.

வேதகாலத்து ரிஷிகள் – அதுவும் குறிப்பிட்ட கோத்திரத்தின் மூல புருஷர்கள் எனப்படும் ரிஷிகள் பெயர்கள் மட்டுமே சொல்லப்படுகின்றது. அவரவர்கள் குலமுதல்வர்கள் என்னும்படியான ரிஷிகளின் பெயர்களைச் சொல்லி, அவர்களது வழியில் இந்த கோத்திரம் இந்த சூத்திரத்தை சார்ந்தவன் என்று அறிமுகப்படுத்திக் கொள்கின்றோம். நம்மை பற்றிய ஒரு வித வைதீக அறிமுகம் இது.

இங்கே இன்னொரு கேள்வியும் எழலாம். நாம் தினசரி சந்தியாவந்தனம் போன்ற வணக்கங்கள் செய்கின்ற பொழுதும், கோயில்களில் அர்ச்சனை போன்றவற்றைச் செய்கின்ற போதும், வீட்டில் ஹோமங்கள் முதலிய விசேஷங்கள் செய்கின்ற போதிலும், இந்த கோத்திரம், சூத்திரம் இவற்றையெல்லாம் திரும்பவும் சொல்ல வேண்டுமா என்று கேட்கலாம். நிச்சயம் சொல்ல வேண்டும். இந்த கோத்திரம் சூத்திரம் சொல்வதன் மூலமாக, நாம் நமது கர்மாவின் பலன் நமது கணக்கில் சேரும் படியாகச் செய்கின்றோம். நமது நம்பிக்கை மந்திரத்தின் மீது மட்டுமல்லாது, முழு சடங்கின் மீதும் இருக்க வேண்டும். அபிவாதனத்தின்போது ரிஷிகள் பெயரைச் சொல்வதன் மூலமாக நமது குலமுதல்வர்களை, அவ்வப்போது நினை வில் கொண்டு வந்து, அவர்கள் தந்த அளப்பரிய நன்மை களை நினைத்து, நாமும் நமது செயல்களை நல்வழிப் படுத்தி கொள்கிறோம்.

ரிஷி என்று சொன்னாலே பார்ப்பவர்கள் என்று பொருள் உண்டு. மூன்று காலத்தையும் பார்க்கக் கூடிய சக்தி படைத்தவர்கள், தவ வலிமை பெற்றவர்கள். நாம் வேண்டினால் நமக்கு வேண்டியதைத் தரக் கூடியவர்கள். இந்த சுய அறிமுகம் (அபிவாதனம்) குறித்த ஆழ்வார்கள் வாக்கினையும் பார்த்து, மேற்கொண்டு சடங்குகளின் முக்கியத்துவத்தை ஆராய்வோம்.

அருளிச்செயல் தொடரும்...

ஹரே ராமா! ஹரே கிருஷ்ணா!!

தொடர் கதை

# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

# பிரகலாதனின் உபதேசம்




தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி-9676695443


*சென்ற இதழ் தொடர்ச்சி...*

பிரகலாதன் அனைத்து நற்குணங்களும் பெற்று விளங்கினான். தந்தையிடம் அழைத்துச் செல்லப்பட்ட பிரகலாதன் மிகவும் பணிவோடு அவருக்குப் பாதாபி வந்தனம் செய்தான். அதைக்கண்டு இரண்யகசிபுவின் மனம் கூட நெகிழ்ந்து மகிழ்ந்தது. உடனே தன் பிள்ளையைக் கட்டியணைத்து உச்சிமோர்ந்து, முத்தம் இட்டு, தன் மடியில் இருத்தி மகிழ்ந்தான். அந்த மகிழ்ச்சி களையாத முகத்தோடு தன் பிள்ளையைப் பார்த்து இவ்வாறு கேட்டான்.

“மகனே! பிரகலாதா! நீ இவ்வளவு காலம் உன் ஆசிரியரிடம் பலவிதமான கல்விக் கேள்விகளைக் கற்றிருப்பாய்! அவற்றில் மிகவும் சிறந்த கல்வி என்று எதை நீ கருதுகிறாய் எனக்கு எடுத்துக் கூறு” என்றான்.

தந்தை மிகவும் விருப்பமோடு கேட்டதும், உடனே பிரகலாதன் எந்தவொரு தயக்கமுமின்றி, அச்சமின்றி இவ்வாறு கூறினான். “தந்தையே! கல்வியில் மிகவும் சிறந்தது விஷ்ணு பக்தியே. விஷ்ணு பக்தி செய்வதற்குக் கடைபிடிக்க வேண்டுவன: விஷ்ணு பகவானின் நாமங்களை எப்பொழுதும் உச்சரிப்பது; திவ்விய குணங்களையும் லீலைகளையும் கேட்பது. தவறாமல் தியானிப்பது; திருவடிகளில் வீழ்ந்து சேவிப்பது; அவருடைய விக்ரகத்தை நாள் தவறாமல் பூஜிப்பது; நெஞ்சில் நினைந்து பணிந்து வணங்குவது; எண்ணத்தாலும் நடைமுறையாலும் பணியாளனைப் போன்று நடந்து கொள்வது; உண்மையான அன்பு வைப்பது; ஆத்ம சமர்ப்பணம் செய்வது என்னும் ஒன்பது வகையாக பக்தி பண்ணுவது. இந்த ஒன்பது வகையான நெறிகளை, எவனொருவன் முறையாகக் கடைப்பிடித்து கிருஷ்ண பக்தியில் திளைக்கின்றானோ அவனே சர்வோத்தமன்” என்று கூறினான். பிரகலாதனின் இந்த வார்த்தைகள் இரண்யகசிபுவிற்கு மிகவும் சினத்தை உண்டாக்கியது.

அவன் முகம் சிவந்தது. அவன் கோபம் அங்கிருந்த குருபுத்திரர்கள் மேல் திரும்பியது. குருபுத்திரர்கள் அச்சத்தால் நடுநடுங்கினர். உடனே இருகைகளும் ஜோடித்து வணங்கியவாறே” “அரசே! பிரகலாதன் கூறிய இக்கருத்துகள் எதையும் நாங்கள் கற்பிக்கவே இல்லை; மற்றவர்கள் யாரும் கூட கற்பித்ததாகத் தெரியவில்லை. வீணாக எங்களை பழிப்பது தகாது எனக் கூறினர். குரு புத்திரர்கள் கூறியதைக் கேட்ட இரண்ய கசிபுவின் கோபம் இப்பொழுது பிரகலாதனின் பக்கம் திரும்பியது. எனவே அவன் பிரகலாதனைப் பார்த்து குருக்கள் கற்றுத் தராத இந்த பாடம் நீ எப்படிக் கற்றுக் கொண்டாய்? என்று உரத்தக் குரலில் கேட்டான்.

அதற்குப் பாலபாகவதனாகிய பிரகலாதன் இவ்வாறு கூறினான்.“தந்தையே! இல்லற சுகத்தில் ஈடுபட்டு உழன்று கொண்டி

ருக்கும் மக்களுக்கு ஐம்புலனடக்கம் இல்லாத காரணத்தினால், சாரமற்ற காரியங்களில் தன் சக்தியை மீண்டும் மீண்டும் செலவழித்து வீணாகிப் போகின்றனர். பிறர் உபதேசிக்கும் நல்லறிவும் அவர்கள் காதில் விழுவதில்லை. மேலும், அவர்களாகவும் தங்களை நன்னெறியில் மனதைச் செலுத்தி கிருஷ்ண பக்தியில் ஈடுபட இயலாதவர்களாகவும் இருக்கின்றனர்.

உலகச் சுகங்களில் சிக்குண்டு கிடப்பவர்கள் அவர்களுக்குத் தகுந்தார்போல தலைவர்களையும், குருமார்களையும் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். இச்செயல் குருடனுக்கு மற்றொரு குருடன் வழிக்காட்டுவதுபோல் உள்ளது. ஒருவன் விழுந்த பாவக்குழியிலேயே எல்லோரும் மீண்டும் மீண்டும் வீழ்ந்து அல்லல்படுகின்றார்கள்.

தந்தையே! இல்லற சுகத்தில் உழலும் மனிதர்களுக்கு பகவத் பாகவதர்களுடைய பாத சேவையே நன்மார்க்கத்தைக் காட்டும். அவர்களுடைய அடிப்பொடியே மக்களை எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுவிக்கக் கூடியதுமாகும்.

பிரகலாதன் இவ்வாறு பதில் கூறியவுடன் இரண்யகசிபு மிகவும் கோபம் கொண்டு தன் மடியில் இருந்த மகனைக் கீழே உதறித் தள்ளினான். கீழே விழுந்த பிரகலாதன் எதற்கும் அச்சப்படாதவனாய் இருந்தான். ஆனால் இரண்யகசிபு மாத்திரம் ஆத்திரத்தின் உச்சிக்கே சென்றான்.

அப்பொழுது இப்படியாகக் கூறினான். “அசுரர்களே! இந்த பிரகலாதனை என் கண் முன்னே இல்லாதபடி கொண்டு செல்லுங்கள். இவன் மீது இரக்கம் காட்டாமல் இவனைக் கொன்று விடுங்கள். பிரகலாதன் என் பகைவனான விஷ்ணுவுக்கு தாசனானான். எனவே எந்த வகையிலாவது இவனைக் கொன்றொழியுங்கள்” என்றான்.

முதலில் யானைகளைக் கொண்டு வந்து மிதிக்க வைத்தான். பின்பு கொடுமையான நஞ்சு உள்ள பாம்புகளைக் கொண்டு கடிக்க வைத்தான். மந்திர பிரயோகங்களைச் செய்து பார்த்தான். உயர்ந்த மலையின் உச்சிக்குக் கொண்டு சென்று அங்கிருந்து தள்ளி விட்டான்.

பெரிய பெரிய குன்றுகளை உருட்டி கொல்ல முயன்றான். உணவு, தண்ணீர் கொடுக்காமல் பட்டினிப் போட்டு சாகடிக்கப் பார்த்தான். எரியும் தீயில் தள்ளினான். தன்னால் என்னென்ன செய்ய முடியுமோ அத்தனையும் செய்து பார்த்தான். இருப்பினும் பிரகலாதனுக்குச் சிறிதளவு தீங்கினையும் செய்ய முடியாமல் திகைத்து நின்றான். என்ன செய்வதென்று புரியவில்லை.

இவன் மரணத்தை வென்றவனாகத் தோன்றுகிறது. இவன் மூலமாகத்தான் எனக்கு மரணம் உண்டாகப் போகிறதோ! என்று தனக்குத்தானே எண்ணிக் கொண்டான். நடந்த சம்பவங்களை எல்லாம் நினைத்து நினைத்து வெட்கத்தாலும் வேதனையாலும் இரண்யகசிபுவின் முகம் வாடிப் போனது.

தங்கள் பிரபுவுக்கு ஏற்பட்ட இந்த நிலையை எண்ணி அங்கிருந்த சண்டணுக்கும் அமர்க்கணுக்கும் அவன் மேல் பரிதாபம் உண்டானது. அவர்கள் இரண்ய கசிபு தனிமையில் இருக்கும் போது அவனிடம் சென்று அவனுக்கு உற்சாகம் மூட்ட முயற்சித்தனர்.

“பிரபுவே! தங்களைக் கண்டாலே தேவர்கள் யாவரும் நடுநடுங்குகின்றனர் என்பதை நாங்கள் அறிவோம். நீங்கள் தனியொருவராக நின்று மூவுலகங்களையும் வெற்றிப் பெற்றவர். அப்படியிருந்தும் தாங்கள் ஏன் கவலைக் கொள்கிறீர்கள்?

இந்தச் சிறுவனான பிரகலா தனை நினைத்து ஏன் பயப்படுகிறீர்கள். நம் குருவான சுக்கிராச்சாரியார் இருக்கிறார் அல்லவா? கவலையை விடுங்கள். அவர் வரும்வரை இச்சிறுவனை கயிற்றால் கட்டி அடைத்து வைப்போம். மேலும், சில காலத்திற்குப்பிறகு தங்கள் குமாரனுக்கு நல்ல புத்தி உண் டாகி அவன் செய்கையும் மாற்றிக் கொள்வான். எங்களுடைய கணிப்புப்படி சில காலத்திற்குப் பிறகு இவன் குருமார்களுக்குச் சேவையும் செய்வான். எனவே இவனைப் பற்றி கவலைப்படாமல் பிரகலாதனை மீண்டும் எங்களோடு அனுப்பி வையுங்கள்என்றனர்.

குருபுத்திரர்கள் வார்த்தைகளைக் கேட்டதும் இரண்யகசிபு மனம் ஓரளவு சமாதானம் அடைந்தது. பிரகலாதன் ஹரிபக்தியை விட்டொழித்து மீண்டும் தன் வழிக்கு வருவான் என்ற ஆசையும் அவனிடத்தில் துளிர் விட்டது. இரண்யகசிபு, குருபுத்திரர்களிடம் இனி இவனுக்கு இல்லறத்தில் இருக்கும் அரசர்களுடைய தர்மத்தை மட்டும் உபதேசியுங்கள் என்று கூறினான். பிறகு, குருபுத்திரர்கள் பிரகலாதனை தங்களோடு ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்றனர்.

**பாகவத கதை சாகரம் தொடரும்...**

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

*மதுரகவியாழ்வார் வாழித்திருநாமம். தொடர்ச்சி..*

(பத்தியொடு பதினொன்றும் பாடினான்) – "பக்தி" என்ற சொல் தமிழில் "பத்தி" ஆயிற்று. கடவுள் முதலானோரிடம் உள்ள பற்று. மதுரகவிக்கு பத்தியாவது நம்மாழ்வாரையன்றி வேறொரு பகவத் விஷயத்தை அறியாதவராய், தமிழ் வேதமாகிய **''தேவுமற்றறியேன்''** என்கிறபடியே திருவாய்மொழியைப் பாடுவது ஒன்றையே இன்சுவையாகக் கொண்டவராய் மற்றும் அவ்வாழ்வாருடைய திருக்கல்யாண குணங்களிலே ஈடு பட்டு அவரையே தலைவராகவும் கொண்டதாகும். அதனால் பதினோறு பாசுரங்கள் கொண்ட கண்ணிநுண் சிறுத்தாம்பு என்னும் திவ்யப்பிரபந்தத்தைப் பாடினார். பத்தியொடு பாடின அந்தப் பிரபந்தத்தின் கருத்தாவது – ஆழ்வாருடைய பெயரைச் சொன்னால் தனக்கு எல்லை யற்ற இனிமை, அவருடைய திருவாய்மொழியும் கண்ணிநுண்சிறுத்தாம்பும் வாழ்க்கையாம்படியைச் சொல்லுதல், ஆழ்வார் உகந்த விஷயத்தை விரும்புதல், தன்னை தனக்கு இலக்காக்கிக் கொண்டமையைப் பேசுதல், ஆழ்வார் உதவின நன்மையைச் சொல்லுதல், பிற விஷயங்கள் மறுவலிடாதபடி ஆழ்வார் அருள் தன் பக்கல் உள்ளமையைக் கூறுதல், ஆழ்வார் பெருமையை எல்லாரும் அறியும்படி சொல்லு தல், ஆழ்வாருடைய அருள் அறி வுள் பொருள், அறிவில் பொருள், ஈச்வரன் ஆகிய மூன்று தத்துவங்களையும் விழுங்கும் படியானது என்னுதல், எல்லா வேத கருத்துக்களையும் பாடி தனக்கு உப கரித்த மையைச் சொல்லுதல், ஆழ்வார் ஆசார்யராய் செய்த உதவிக்கு இப்பூமியும் ஒப்பில்லை என்றும், இறுதியில் இந்த பிரபந்தத்தையே தஞ்சமாக நினைத்திருக்குமவர் களுக்கு வசிக்கும் பூமி பரமபதம் என்கிறார். ஆழ்வார் திறத்து தலைவனாம் தன்மை, சரணமாம் தன்மை, அடை வதாம் தன்மை முதலானவற்றை தம் பிரபந்தமான கண்ணிநுண் சிறுத்தாம்பில் அருளியது காணலாம்.



(பராங்குசனே பரன் என்று பற்றினான்) – (பராங்குசன்) நம்மாழ்வாரின் திருநாமம். மிகக் களித்துக் கொழுத்துச் செருக்கித் திரிந்து எதிர்த்து வாதப்போருக்கு வரும் பிற மதத்தவராகிய மதயானைகளைத் தமது பிரபந்தங்களில் கூறிய தத்துவார்த்தங்களைக் கொண்டு செருக்கை அடக்கிக் கீழ்ப்படுத்தித் தம் வசத்தில் வைத்து நடத்தும் திறமுடையவராய் அவற்றுக்கு மாவெட்டி என்னும் கருவி போல் இருப்ப தால் நம்மாழ்வாருக்கு "பராங்கு சன்" என்ற ஒரு திருநாமமாயிற்று என்பர். "பர அங்குச" என்று பிரிக்க. தீர்க்க சந்தி பெற்ற வட மொழித் தொடர். **'''அஆ முன் அ ஆ வரின் இரண்டும் கெட ஒரு ஆகாரம் தோன்றும்''** என்பது முது மொழி. பர–அயலார். அங்குசம் – மாவெட்டி, தோட்டி. **''வகுளத் தொங்கல் பராங்குசன்''** என்று அழகர் அந்தாதி கூறும். பராங் குசன் என்று தடையற்ற சுதந் திரனான ஈச்வரனை தம்முடைய

பாசுரங்களாலே வசீகரிக்க வல்லவர் என்பர். (பராங்கு சன்) – *''மத ஆவலிப்பதர்க்கு அங்குசம் இட்டு''* என்று நாயனார் ஆசார்ய இருதயத்தில் (93) அருளியதற்கு ஏற்ப மாமுனிகள், பராங்குசராகையாலே – கல்வி, செல் வம், குடிப்பிறப்பு ஆகியவற்றால் உண்டான மும்மதச் செருக் கால் திரியுமவர்கள் தலை வணங்கும்படி உபதேசமாகிற அங்குசத்தை இட்டவர் என்று உரையி டுவர். பரன் – எல்லாரைக் காட்டிலும் உயர்ந்தவன் – இறைவன். நம்மாழ்வாருக்குப் பரன் எம்பெருமான். மதுரகவிகளுக்குத் தெய்வம் ஆழ்வார். *''தேவு மற்ற றியேன் குருகூர் நம்பி''* என்றது காண்க. *''சிந்தையுள்ளே பெய்தற்கிசையும் பெரியவர்''* என்பதற்குச் சேர நம்மாழ்வாரைத் தம் திருவுள்ளத்திலே வைக்கைக்குத் தகுதியாயிருந்துள்ள ப்ரபாவத்தை உடையவர் மதுரகவி கள் என்பர் மாமுனி கள். *''மேவினேன் அவன் பொன்னடி என்று பிரிவு வாசனை இல்லாது ஆழ்வார் திருவடிகளுடன் நிரந்தர கலவி பண்ணி நாவினால் நவிற்றி இன்பமெய்தி வீறு பெற்றிருக்கும் புகழ்படைத்தவர் ஸ்ரீமதுரகவி ஆழ்வார் ஒருவர் உண் டன்றோ''* என்று ஸ்ரீவசனபூஷண வ்யாக் யானத்தில் (சூ.409) ஆய் ஜநந்யாசார்யர் அருளுவது காணலாம். *''துன்பற்ற மதுரகவி தோன்றக்காட்டும் தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே''* என்று வேதாந்த தேசிகர் மதுரகவிகளுடைய ஆசார்ய நிஷ் டையே அநாதியான நல்வழி என்றதும் காண்க.

(மத்திமமாம் பதப்பொருளை வாழ்வித்தான்) – மத்திமம் – நடு, ஆம் – ஆகும். திருமந்த்ரத்துக்கு நடுவா யிருக்கும் பதம் – நம: என்ற பதம். இது ஸ்வரூபத்துக்கும் உபாயத்துக்கும் உறுதிப் பொருளுக்கும் உள்ள விரோ தியைப் போக்குவதாய், ஸ்வரூப, உபாய, புருஷார்த்தங் களைத் தெரிவிப்பதாய் பாகவதர்களுக்கு இட்ட வழக் காம்தன்மை உடையதாயிருக்கும். மேலும் எம்பெருமா னாகிற முதல் பகுதி விஷயமான பிரபந்தங்களைக் காட்டிலும் ஆசார்யனாகிற கடைசி பகுதி விஷயமான கண்ணிநுண் சிறுத்தாம்பு என்னும் பிரபந்தம் மிகவும் சிறப்புடையதாகுமன்றோ. இதுபற்றியே மாமுனிகளும் *''வாய்த்த திருமந்திரத்தின் மத்திமமாம் பதம்போல் சீர்த்த மதுரகவி செய்கலை''* என்கிறார். (பதப்பொருளை வாழ்வித்தான்) பதப்பொருளை வாழ்வித்ததாவது – ஸ்ரீமந் நாதமுனிகள் நம்மாழ்வார் திருவடிகளிலே கண்ணிநுண் சிறுத்தாம்பை பன்னீராயிரம் உரு அநுஸந்திக்க, அதன் காரணமாக நம்மாழ்வார் மனம் குளிர்ந்தவராய் அத் தாலே அருளிச் செயல்களெல்லாம் அப்போது வெளிப் பட்டது. இந்த "நம:" பதம் தான் நம்மாழ்வார் பாகவதர்கள் விஷய மாக திருவாய்மொழியில் அருளிய *''பயிலும் சுடரொளி''* (3–7) *''நெடுமாற்கடிமை''* (8–10) ஆகியவற்றில் அர்த் தத்தைத் தெரிவிக்கையாலே இதன் அர்த்த கௌர வத்தை ஆராய்ந்து, நன்றாக ஹாரத்தைக் கட்டி, அது ஒளி பெறும் படி உயர்ந்ததாய் இருப்பதொரு நாயககல்லை அதன் நடுவே பதித்தாற்போலே திவ்யப்ரபந்தங்கள் நிறம் பெறும்படி அவற்றின் நடுவே கண்ணிநுன் சிறத்தாம்பைச் சேர்வித்தார்கள்.

சேர்த்த சேர்வையின் திறமையாலன்றோ முத்து மாலை தொடக்கமான ஆபரணம் முதலானவை நிறம் பெறுவது. அதுபோல ஆயிற்று இது. மேலும் அருளிச் செயல்களுக்கு மிக்கிருக்கும்படி இதுதான் நடுவிலுள்ள வைஷ்ணவ பதமான நமஸ்ஸைப் போல நடுநாயகமாய் எல்லாவற்றையும் பிரகாசித்துக் கொண்டாயிற்று இருப்பது. மதுரகவி அவதரித்த சித்திரையில் சித்திரை மற்ற மாத நக்ஷத்ரங்களுக்கு நடுவிலேயாய் அல்லாதவற் றுக்கும் மிக்கிருக்குமாபோலே, இவர் பிரபந்தம் அருளிச் செயலுக்கு இடையிலேயாய் அவற்றுக்கும் மிகுதியை உண்டு பண்ணுவதாயிருக்கும்.

இத்தை நடுப்பதமாக வைத்து யோஜிக்கும் முறை யாலேதான் இத்தைத் தவிர்த்து கீழ் மேல் உண்டான பிரபந்தங்கள் பிரணவத் தினுடையவும் நாராயணாய பதத்தினுடையவும் யோஜித்த படியாகும். அதாவது திருப்பல்லாண்டு தொடங்கி அமலனாதிபிரான் வரையி லான ஒன்பது பிரபந் தங்கள் பிரணவார்த்தம். கண்ணி நுண் சிறுத்தாம்பு நமப் பதப் பொருள். பெரிய திருமொழி முதல் பெரிய திரு மடல் ஈறாக *''நாராயணாய''* என்பதன் பொருள். இது தன் னையே *''செய்கலையை ஆர்த்த புகழ் ஆரியர்கள் தாங்கள் அருளிச் செயல் நடுவே சேர்வித்தார்''* என்று மாமுனிகள் அருளியது காண்க.

(மதுரகவி திருவடிகள்) மதுரகவி – இனிமையாகப் பாடல் பாடுபவர். மற்ற ஆழ்வார்கள் போலே எம்பெரு மானுக்கு அடிமைப்படாமல் அப்பெருமானுக்கு அடியவ ரான நம்மாழ்வாருக்கு அடிமையாயிருப்பவர். *''முயல் கின்றேன் உன்தன் மொய்கழற்கன்பையே''* என்று மதுர கவிகள் ஆழ்வார் திருவடிக்கு மங்களாசாசனம் செய்து முடித்தார். இப்படிப்பட்ட மதுரகவி திருவடிகளை நாமும் உய்வு பெற வாழி வாழி என வாழ்த்துவோமாக.

வாழித்திருநாமம் வளரும்...



# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## உயிர்மெய் எழுத்துக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| चै | छै | जै | झै | ञै |
| சை | சை$_2$ | ஜை | ஜை$_2$ | ஞை |
| चो | छो | जो | झो | ञो |
| சோ | சோ$_2$ | ஜோ | ஜோ$_2$ | ஞோ |
| चौ | छौ | जौ | झौ | ञौ |
| சௌ | சௌ$_2$ | ஜௌ | ஜௌ$_2$ | ஞௌ |
| चं | छं | जं | झं | ञं |
| சம் | சம்$_2$ | ஜம் | ஜம்$_2$ | ஞம் |
| चः | छः | जः | झः | ञः |
| ச: | ச:$_2$ | ஜ: | ஜ:$_2$ | ஞ: |
| ट | ठ | ड | ढ | ण |
| ட | ட$_2$ | ட$_3$ | ட$_4$ | ண |
| टा | ठा | डा | ढा | णा |
| டா | டா$_2$ | டா$_3$ | டா$_4$ | ணா |
| टि | ठि | डि | ढि | णि |
| டி | டி$_2$ | டி$_3$ | டி$_4$ | ணி |
| टी | ठी | डी | ढी | णी |
| டீ | டீ$_2$ | டீ$_3$ | டீ$_4$ | ணீ |
| टु | ठु | डु | ढु | णु |
| டு | டு$_2$ | டு$_3$ | டு$_4$ | ணு |
| टू | ठू | डू | ढू | णू |
| டூ | டூ$_2$ | டூ$_3$ | டூ$_4$ | ணூ |

| | | | | |
|---|---|---|---|---|
| टृ | ठृ | डृ | ढृ | णृ |
| ட்ரு | ட்ரு$_2$ | ட்ரு$_3$ | ட்ரு$_4$ | ண்ரு |
| टे | ठे | डे | ढे | णे |
| டே | டே$_2$ | டே$_3$ | டே$_4$ | ணே |
| टै | ठै | डै | ढै | णै |
| டை | டை$_2$ | டை$_3$ | டை$_4$ | ணை |
| टो | ठो | डो | ढो | णो |
| டோ | டோ$_2$ | டோ$_3$ | டோ$_4$ | ணோ |
| टौ | ठौ | डौ | ढौ | णौ |
| டௌ | டௌ$_2$ | டௌ$_3$ | டௌ$_4$ | ணௌ |
| टं | ठं | डं | ढं | णं |
| டம் | டம்$_2$ | டம்$_3$ | டம்$_4$ | ணம் |
| टः | ठः | डः | ढः | णः |
| ட: | ட:$_2$ | ட:$_3$ | ட:$_4$ | ண: |
| त | थ | द | ध | न |
| த | த$_2$ | த$_3$ | த$_4$ | ந |
| ता | था | दा | धा | ना |
| தா | தா$_2$ | தா$_3$ | தா$_4$ | நா |
| ति | थि | दि | धि | नि |
| தி | தி$_2$ | தி$_3$ | தி$_4$ | நி |
| ती | थी | दी | धी | नी |
| தீ | தீ$_2$ | தீ$_3$ | தீ$_4$ | நீ |

| | | | | |
|---|---|---|---|---|
| तु | थु | दु | धु | नु |
| து | து$_2$ | து$_3$ | து$_4$ | நு |
| तू | थू | दू | धू | नू |
| தூ | தூ$_2$ | தூ$_3$ | தூ$_4$ | நூ |
| तृ | थृ | दृ | धृ | नृ |
| த்ரு | த்ரு$_2$ | த்ரு$_3$ | த்ரு$_4$ | ந்ரு |
| ते | थे | दे | धे | ने |
| தே | தே$_2$ | தே$_3$ | தே$_4$ | நே |
| तै | थै | दै | धै | नै |
| தை | தை$_2$ | தை$_3$ | தை$_4$ | நை |
| तो | थो | दो | धो | नो |
| தோ | தோ$_2$ | தோ$_3$ | தோ$_4$ | நோ |
| तौ | थौ | दौ | धौ | नौ |
| தௌ | தௌ$_2$ | தௌ$_3$ | தௌ$_4$ | நௌ |
| तं | थं | दं | धं | नं |
| தம் | தம்$_2$ | தம்$_3$ | தம்$_4$ | நம் |
| तः | थः | दः | धः | नः |
| த: | த:$_2$ | த:$_3$ | த:$_4$ | ந: |
| प | फ | ब | भ | म |
| ப | ப$_2$ | ப$_3$ | ப$_4$ | ம |
| पा | फा | बा | भा | मा |
| பா | பா$_2$ | பா$_3$ | பா$_4$ | ம |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| पि | फि | बि | भि | मि | या | रा | ला | वा | शा | ष | म | ह | ळ | क्ष |
| பி | பி$_{2}$ | பி$_{3}$ | பி$_{4}$ | மி | யா | ரா | லா | வா | சா’ | ஷ | ஸ | ஹ | ள | க்ஷ |
| पी | फी | बी | भी | मी | यि | रि | लि | वि | शि | षा | मा | हा | ळा | क्षा |
| பீ | பீ$_{2}$ | பீ$_{3}$ | பீ$_{4}$ | மீ | யி | ரி | லி | வி | சி’ | ஷா | ஸா | ஹா | ளா | க்ஷா |
| पु | फु | बु | भु | मु | यी | री | ली | वी | शी | षि | मि | हि | ळि | क्षि |
| பு | பு$_{2}$ | பு$_{3}$ | பு$_{4}$ | மு | யீ | ரீ | லீ | வீ | சீ’ | ஷி | ஸி | ஹி | ளி | க்ஷி |
| पू | फू | बू | भू | मू | यु | रु | लु | वु | शु | षी | मी | ही | ळी | क्षी |
| பூ | பூ$_{2}$ | பூ$_{3}$ | பூ$_{4}$ | மூ | யு | ரு | லு | வு | சு’ | ஷீ | ஸீ | ஹீ | ளீ | க்ஷீ |
| पृ | फृ | बृ | भृ | मृ | यू | रू | लू | वू | शू | षु | मु | हु | ळु | क्षु |
| ப்ரு | ப்ரு$_{2}$ | ப்ரு$_{3}$ | ப்ரு$_{4}$ | ம்ரு | யூ | ரூ | லூ | வூ | சூ’ | ஷு | ஸு | ஹு | ளு | க்ஷு |
| पे | फे | बे | भे | मे | यृ | रृ | लृ | वृ | शृ | षू | मू | हू | ळू | क्षू |
| பே | பே$_{2}$ | பே$_{3}$ | பே$_{4}$ | மே | ய்ரு | … | … | வ்ரு | ச்ரு’ | ஷூ | ஸூ | ஹூ | ளூ | க்ஷூ |
| पै | फै | बै | भै | मै | ये | रे | ले | वे | शे | षृ | मृ | हृ | ळृ | क्षृ |
| பை | பை$_{2}$ | பை$_{3}$ | பை$_{4}$ | மை | யே | ரே | லே | வே | சே’ | ஷ்ரு | ஸ்ரு | ஹ்ரு | … | க்ஷ்ரு |
| पो | फो | बो | भो | मै | यै | रै | लै | वै | शै | षे | मे | हे | ळे | क्षे |
| போ | போ$_{2}$ | போ$_{3}$ | போ$_{4}$ | மோ | யை | ரை | லை | வை | சை’ | ஷே | ஸே | ஹே | ளே | க்ஷே |
| पौ | फौ | बौ | भौ | मौ | यो | रो | लो | वो | शो | षै | मै | है | ळै | क्षै |
| பௌ | பௌ$_{2}$ | பௌ$_{3}$ | பௌ$_{4}$ | மௌ | யோ | ரோ | லோ | வோ | சோ’ | ஷை | ஸை | ஹை | ளை | க்ஷை |
| पं | फं | बं | भं | मं | यौ | रौ | लौ | वौ | शौ | षो | मो | हो | ळो | क्षो |
| பம் | பம்$_{2}$ | பம்$_{3}$ | பம்$_{4}$ | மம் | யௌ | ரௌ | லௌ | வௌ | சௌ’ | ஷோ | ஸோ | ஹோ | ளோ | க்ஷோ |
| पः | फः | बः | भः | मः | यं | रं | लं | वं | शं | षौ | मौ | हौ | ळौ | क्षौ |
| ப: | ப:$_{2}$ | ப:$_{3}$ | ப:$_{4}$ | ம: | யம் | ரம் | லம் | வம் | சம்’ | ஷௌ | ஸௌ | ஹௌ | ளொ | க்ஷொ |
| य | र | ल | व | श | यः | रः | लः | वः | शः | षं | मं | हं | ळं | क्षं |
| ய | ர | ல | வ | ச’ | ய: | ர: | ல: | வ: | ச’: | ஷம் | ஸம் | ஹம் | ளம் | க்ஷம் |
| | | | | | | | | | | षः | मः | हः | ळः | क्षः |
| | | | | | | | | | | ஷ: | ஸ: | ஹ: | ள: | க்ஷ: |

**– திரு. உ.வே. பி.டி. சேஷாத்திரி,**
**சென்னை,**
**99404 28830.**

மேலும் வளரும்...



பகவத் கீதை-இளைய சமுதாயம்

# செய்பவரை பொறுத்தே செயல்கள்

எந்த ஒரு செயலும் வெற்றியடைந்தாலோ அல்லது தோல்வியில் முடிந்தாலோ முதலில் கேட்கப் படும் கேள்வி அச்செயலை செய்பவரை குறித்தே யாகும். எந்தவொரு சிக்கலான பணியாக இருந்தாலும் சிலர் கைப்பட்டவுடன் முழுமையடைந்து விடுகிறது. அதுவே, மிக எளிதான பணியாக இருந்தாலும் சிலர் விரல் பட்டவுடன் எல்லாம் அழிகின்றது. எனவேதான் ஒரு செயலை மேற்கொள்ளும்போது அச்செயல் செய்ப வனே முதன்மை பங்கு வகிக்கிறான்.

இதனை அறிந்தவர்களே செயலை செய்பவன் விஷயத்தில் கவனமாக இருப்பர். யாருக்கு எப்பணியை அளித்தல் வேண்டும் என்பதை அறிந்தாலே நடை முறையில் எந்த இன்னல்களும் இருக்காது. ஆனால் உறவினர் என்றோ, தம் சார்புடையவர் என்றோ, வேறு சில காரணங்களுக்காகவோ தீயவர்களுக்கு பணியை ஒப்படைத்தால் அப்பணி நிச்சயமாக தோல்வியே அடை யும்.மேலும், இப்பணியின் விஷயத்தில் தனிப்பட்ட விவா தத்திற்கு வந்தால் நம் பணியை வேறொருவர் செய்யும் வாய்ப்பும் இல்லை.

நம் பணிகளை நாமே மேற்கொள்ளல் வேண்டும். ஆனால், சிலருக்கு எச்செயலை செய்தாலும் தோல்வியோ அல்லது சிறிதளவு வெற்றியோ மட்டும் கிடைக்கும். இது போன்ற சமயங்களில் அவர்கள் என்ன செய்ய வேண்டும்? பகவத்கீதையில் குறிப்பிட்டுள்ள வாறு கடைபிடிப்பது ஒன்றே இதற்கு வழியாகும்.

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஒ. சுரேஷ், 6304428489

மானிடர் எந்நிலையில் இருந்து தம் பிரச்சனைகளை உண்டாக்கிக் கொண்டனரோ, அந்நிலையிலேயே பிரச்ச னைகளுக்கானத் தீர்வைஅடைய முடியும். ஒரு வேளை பணிகள் அனைத்தும் தோல்வியாகவே முடிந்தால், தான் செய்யும் பணியின் முறையினை மாற்றிக் கொள்ளல் வேண்டும். போட்டித் தேர்வுகளில் எப்பொழுதும்



தோல்வியையே பெறும் இளைஞன், தான் தேர்வுக்குத் தயாராகும் முறையினை மாற்றிக் கொள்ளல் வேண்டும். செய்யும் செயல்களில் வெற்றியை பெற வேண்டுமெனில் அச்செயலை செய்பவன் எப்படி இருத்தல் வேண்டும் என பகவத்கீதை கூறுகின்றது.

செயலை செய்பவரிடம் முதலில் உற்சாகம் இருத்தல் வேண்டும். அகங்காரத்திற்கும் கர்வத்திற்கும் அவன் வழி விடுதல் கூடாது. அவன் தான் படும் துன்பங்களை சிந்திக்காமல், மேலும் எவ்வளவு துன்பம் உண்டாயினும் உற்சாகத்துடன் முன்னோக்கிச் செல்வான். அவனுக்கு வெற்றியும் தோல்வியும் தடைகளாக இருப்பதில்லை. இன்பதுன்பத்தை சமமாக எண்ணுவான். அதாவது இது போன்றவன் மன உறுதியுடனும், உற்சாகத்துடனும் வெற்றி தோல்விகளுக்கு ஆட்படாமல் தன் செயலில் மட்டுமே கவனத்தை செலுத்துவான். அதுபோன்றவனையே சாத்விக மானவன் என்பர்.

சாதாரணமாக இருக்கக் கூடிய செயலை செய்பவனுடைய நடவடிக்கைகள் வேறு மாதிரியாக இருக்கும். இவர்கள் தாம் செய்யும் செயல்களின் பலன் மீது பல ஆசைகளை வைத்திருப்பார்கள். தாம் செயலை செய்யவில்லையெனில் துன்பத்திற்கு ஆட்பட்டு, வேறொருவராவது அதனை செய்தாலும் அவர்களின் மீது பொறாமை ஏற்பட்டு, தனக்கு மட்டுமே வெற்றி வருதல் வேண்டுமென பேராசையில் திரிபவனை ரஜோகுணமுடையவனாக அழைப்பர். உலகில் இது போன்றவர்களே அதிகளவில் உள்ளனர். இவர்கள் மற்றவர்கள் மீது பொறாமையும், மற்றவர்களின் வெற்றியையும் ஏற்க மாட்டார்கள். இவர்கள் தம் வெற்றிக்காக எந்த தவறையும் செய்ய துணிந்திருப்பார். இது போன்றவர்கள் தம் நடவடிக்கைகளை மாற்றிக் கொண்டு சாத்வீகமானவர்களாக மாற முயற்சித்தல் வேண்டும். முக்கியமாக இளைஞர்கள் தம் செயல்களில் சாத்வீகமானவர்களாகி வெற்றியை சாதித்தல் வேண்டும். ரஜோகுணத்தை தொலைத்தும், தமோ குணத்தை விலக்குதலும் வேண்டும்.

அடுத்ததாக, தமோ குணத்தின் லக்ஷணங்கள் என்ன? கடுமையாக நடந்து கொள்வது, மற்றவர்களை அவமதித்தல், சோம்பேறியாக இருத்தல், எப்பொழுதும் கவலையுடன் இருத்தல், காலத்தை வீணாக்குதல், பணியில் ஈடுபாடின்றி இருத்தல் போன்றவை தமோ குணத்தின் லக்ஷணங்களாகும். இவர்கள் மூத்தோர் வார்த்தைகளையும், சாத்திரங்களையும் கருத்தில் கொள்ள மாட்டார்கள். தமக்கு தோன்றியதை மட்டுமே செய்வாரேயன்றி அனுபவசாலிகளின் வார்த்தைகளுக்கு செவிசாய்க்க மாட்டார்கள்.

ஏமாற்றுவது என்பது இவர்களுக்கு சர்வ சாதாரணமாகும். இது போன்ற ஆபத்தானவைகளால் இளைஞர்களுக்கு எவ்வித பயனும் இல்லை. பாதுகாப்பானதும் இல்லை. தமோ குணமுடையவர்கள் சிறிதேனும் ரஜோகுணத்திற்காவது மாற முயற்சித்தல் வேண்டும். ரஜோகுணமுடையவர்கள் சத்வ குணத்திற்கு மாற முயற்சித்தல் வேண்டும். இளைஞர்கள் எப்பொழுதும் பகவத்கீதையில் கூறப்பட்டுள்ள சத்வ குணமுடையவர்களாகவே இருந்து வெற்றிப்பாதையில் பயணித்தல் வேண்டும்.

பகவத்கீதை தொடரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 48க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | க் | கு | று | ங் | கு | டி | 2 ஸ்ரீ | | | 3 தி |
| | 4 அ | னா | 5 வ | ர் | த் | த | ம் | தொ | | | ரு |
| | கோ | | ரா | | ஜி | 6 ஹ | த | ட் | தா | யி | ப் |
| ம் | பி | | ஹ | | வ | ரி | த் | டை | ய | கே | பு |
| ம் | ல | | அ | 7 சு | ஸ் | ணி | ர் | யா | ல் | 8 கை | லி |
| ள | ந | | வ | வே | 9 வி | மா | தீ | ச் | மா | ம் | யூ |
| க் | ர | | தா | த | ளா | ர் | ர | சா | த | ள | ர் |
| ள | சி | 18 வ | ர | வ | ங் | க | க | ரி | க் | கு | |
| ள் | ம் | டை | ம் | 10 ரா | கா | வ | க் | யா | மு | ங் | தை |
| வெ | ம | மா | | க | டு | ஷ் | 11 ச | ர் | 12 ஆ | ரு | 13 கோ |
| ரு | ர் | லை | மா | ர் | யா | 14 வி | தே | ந் | ரு | 15 பெ | |
| 16 தி | | | டு | கோ | க் | வ | து | த் | வி | ரு | 17 தி |



தொடர்

ஆயுர்வேதம்

# வன்னி மரம்



தெலுங்கு மூலம் :
டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390
தமிழாக்கம் :
முனைவர் பா. தனஞ்செழியன், 9003500499

பாரதத் திருநாட்டின் சனாதன தர்ம முறையிலும், பண்பாட்டுக் கலாச்சாரங்களில் முக்கியத்துவமானதாகவும், தெய்வத்தன்மை நிறைந்த விருட்சம் வன்னிமரமாகும். இதனை ஷமி என்றும் சொல்வர். *"ஸமயதி ரோகம் இதிஸமி"* நோய்களைப் போக்குவதினாலேயே இதனை ஷமி எனக் கூறுகின்றார்கள். சுபங்களை நடக்க வைப்பதினால் இதனை சிவ என்றும், மங்களமான தன்மையதனால் மாங்கல்யா என்றும், அக்நி தத்துவம் சேர்ந்திருப்பதினாலே அக்நி கர்பா என்றும் வடமொழியில் இதன் பெயர் அழைக்கப்படுகின்றது. ஆங்கிலத்தில் ஸ்பான்ஜ் டிரீயாக அழைக்கப்படும் இவ்விருட்சம் மைமோசேசி என்னும் தாவர குடும்பத்தை சேர்ந்தது. இதன் அறிவியல் பெயர் ப்ரோஸோபிஸ் சிநாரிய எனப்படும்.

தேவர்கள் பாற்கடலைக் கடையும்போது பாற்கடலில் இருந்து மஹாலட்சுமி, காமதேனு, கல்ப விருக்ஷம் என இவற்றோடு வன்னி முதலான தெய்வீக விருட்சங்களும் தோன்றின எனச் சொல்வர். இறைவன் உலகப் படைப்பின்போது அக்நியையும் தோற்றுவித்தார். அக்நி உடனே தனது குணத்தினால் படைத்தவனையே சுட்டெரிக்க முனைந்ததால் இறைவன் வன்னி விருட்சத்தின் கிளையில் தஞ்சமடைந்து அந்த அக்நியை தணிக்கச் செய்து அக்நியை அணைத்தார். இங்ஙனம் அக்நியை தணிக்கப் பயன்பட்டது வன்னி விருட்சம்.

சிவபெருமானுக்கு ஏற்ற பிகவாஷ்டகங்களில் வன்னி விருட்சமும் ஒன்று. எனவே சிவபெருமானுக்கு விருப்பமான கார்த்திகை மாதத்தில் தெய்வத் தன்மை மிக்க இந்த விருட்சத்திற்கு பூஜை செய்வது நமது வழிபாட்டில் ஒன்றாக அமைகிறது. ஸ்ரீராமனும் வன்னி விருட்சத்தை வழிபட்ட பிறகே இராவணன் மீது யுத்தம் செய்வதற்கு முயன்றார் என்று வரலாற்று ஆய்வாளர்கள் சொல்வர். பாண்டவர்கள் அக்நியாதவாசம் செய்வதற்கு முன்பாக அர்ச்சுனன் காண்டீப அஸ்திரங்களை வன்னி விருட்சத்தின் மேல் ஒளித்து வைத்தது யாவரும் அறிந்த வரலாற்று உண்மை.

அர்ஜுனனைத் தவிர அந்த திவ்விய அஸ்திரங்கள் விஷப்பாம்புகளைப் போன்று காண்பித்து வன்னி விருட்சம் காப்பாற்றியது எனச் சொல்வர். இப்படி பாண்டவர்களின் வெற்றிக்கு பயன்பட்டதனாலே விஜயதசமி என அழைக்கப்பட்ட இது தான் விஜயதசமி பண்டிகையாக மாறியது என்பர். விஜய தசமி பண்டிகை நேரங்களில்,

*"ஷமி செமயதே பாபம் ஷமி சத்ரு விநாசிநி!*

*அர்ஜுநஸ்ய தனுர்தாரி ஸ்ரீராம பிரியதர்சிநி!!"*

என்று சுலோகத்தைச் சொல்லிக் கொண்டே அந்த விருட்சத்தைப் பிரதட்சணம் செய்தல், அந்த விருட்சத்தின் இலைகளை மற்றவருக்குக் கொடுத்து அவர்களிடம் ஆசிர்வாதம் பெறுதல், மனதார உறவுகளை நேசித்தல், இங்ஙனம் மேலே சொன்ன சுலோகத்தை ஒரு தாளில் எழுதி அதனை அந்த விருட்சத்தில் கட்டியும் முறையாக வழிபடுவர்.

## ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்

**ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு அளிக்கும் சம்பாவனையை தங்கள் வங்கிக் கணக்கில் செலுத்த தி.தி.தே. முடிவு எடுத்துள்ளது. ஸப்தகிரி எழுத்தாளர்கள் தங்களுடைய கட்டுரையுடன் வங்கி புத்தகத்தின் முதல் பக்கம் மற்றும் வங்கியின் விவரங்களை** (Your Bank A/c No., Bank Name with IFSC Code No.) **இணைத்து அனுப்புதல் வேண்டும். தவறினால் உங்கள் கட்டுரை அச்சிட இயலாது.**

– பிரதான ஆசிரியர்

இதன் விசேஷ தன்மையினாலே விஜய தசமி நாளன்று வன்னி விருட்சத்தை வழிபடுவது வழக்கமாக வருகின்றது. கிராம மக்கள் கிராமத்தின் ஈசான்ய திக்கில் கம்பீரமாக இருக்கும் வன்னி விருட்சத்தை பூஜித்து வருவது ஒரு பாரம்பரியமாகவே இருந்து வருவதை இன்றும் காணலாம்.

இங்ஙனம் புனிதத் தன்மைக் கொண்ட தெய்வீகத் தன்மையான இந்த விருட்சம் பல்வேறு நோய்களுக்கு மருந்தாக இருந்து வருவது தனித்தன்மையாகும்.

### தேள் கொட்டினால் :

வன்னி விருட்ச சக்கையை தேவையான நீர் கலந்து அரைத்து, அதை தேள் கொட்டிய இடத்தில் பூசி வந்தால் வலி, எரிச்சல், விஷ முறிவு ஏற்பட்டு உடனடியாக வலி குறையும்.

### தேவையற்ற இடத்தில் இருக்கும் முடிகள் நீங்குவதற்கு :

காய்ந்த வன்னி இலைகள் எரித்து சாம்பலாக்கி சல்லடைப் போட்டு வைத்துக் கொள்ள வேண்டும். தேவைக்கேற்ப தண்ணீரில் இந்தப் பொடியைக் கலந்து ஒரு நாள் முழுவதும் வைத்தால் அடியில் வெண்மை யான பொருள் காணப்படும்.

தண்ணீரை வடித்து அந்த பொருளை சேகரித்து நன்றாக ஆறாவைத்து நாள் ஒன்றுக்கு இரண்டு முறை தகுந்தளவு அந்த மருந்தோடு நீர் கலந்து பசையாக்கி பூசி வந்தால் தேவையற்ற முடிகள் நீங்கும்.

### கொழுப்பு பிரச்சனைகளுக்கு :

நாள் ஒன்றுக்கு 200 மி.லி .நீரில் 5 கிராம் பச்சை பட்டை அல்லது காய்ந்த பட்டைபொடி, அரை தேக்கரண்டி சீரகம், 10 மிளகு கலந்து, நீர் 100 மி.லி. வரும் வரை காய்ச்ச வேண்டும். பின்பு குளிர்ந்த உடன் வடிகட்டி பருகி வந்தால் உடலில் உள்ள கெட்ட கொழுப்புகள் கரைந்து உடலிற்குத் தேவையான நல்ல கொழுப்புகள் அதிகரிக்கும். அதுமட்டுமின்றி காய்ச்சல் உடல்வலிகளும் குறையும்.

### இரத்தம் வழிதல் நிற்பதற்கு :

வன்னி இலைகளோடு சிறிது நீர் சேர்த்து மென்மையாக அரைத்து பசையாக்கி காயம் ஏற்பட்டு இரத்தம் நிற்காமல் வழியும் இடங்களில் பூசி வந்தால் உடனடியாக இரத்தம் நின்று விடும்.

### புண், ரணம், காயம் ஆறுவதற்கு :

200 மி.லி. தேங்காய் எண்ணெயில் 50 கிராம் வன்னி இலைகளை போட்டு நுரை வரும் வரை இளம் சூட்டில் காய்ச்ச வேண்டும். பின்பு ஆற வைத்து வடிகட்டி அந்த எண்ணெயை இக்காயங்களுக்குப் பூசி வந்தால் விரை வாகக் குணமாகும்.

### குறிப்பு :

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்வு அல்ல.

**ஆயுர்வேதம் வளரும்...**





# 2020
# ஆகஸ்ட் மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர், 9949922677

| | | | |
|---|---|---|---|
| செவ்வாய் | (யுரேனஸ்) | | ராகு சுக்ரன் புதன் |
| நெப்ட்யூன் | ஆகஸ்ட் - 2020<br>02 – புதன் – கடகம்<br>06 – சனி(வ) – தனுசு<br>16 – செவ்வாய் – மேஷம்<br>16 – சூரியன் – சிம்மம் | | சூரியன் |
| (சனி) | | | |
| சந்திரன் சனி கேது குரு ப்ளூட்டோ | | | |

**மேஷம்**
பாக்கியஸ்தானம் என்னும் ஒன்பதில் குரு–சந்திரன் உலவிட இம்மாதம் தொடங்குகிறது. எடுத்த காரியத்தில் வெற்றி பெற்று விடுவீர்கள். புதியவர்களது தொடர்பு கிட்டும். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்புகள் நல்ல அனுகூலத்தைத் தரும். வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வழி பிறக்கும்.

**ரிஷபம்**
அறிவாற்றல் பிரகாசிக்கும். உடல் நலம் சீராகும். செயலில் வேகம், சிறு சிறு பயணங்கள் அதிகரிக்கும். புதிய பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள். பண வரவு அதிகரிக்கும். குடும்பத்தில் நற்காரியங்கள் நடைபெறும். கலைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். பேச்சாற்றல் வெளிப்படும்.

**மிதுனம்**
உயர் பதவி, பட்டங்கள் கிடைக்கும். உடன் பிறந்தவர்களால் உங்களுக்கும் உங்களால் அவர்களுக்கும் அனுகூலம் உண்டாகும். தகவல் தொடர்புத் துறையைச் சேர்ந்தவர்கள் வளர்ச்சி காண்பார்கள். அரசியல்வாதிகள் மதிப்பு உயரும். இயந்திரப்பணிகள் லாபம் தரும். எதிரிகள் அடங்கிப்போவார்கள்.

**கடகம்**
ராசி நாதன் ஆறாமிடத்தில் உலவிட இம்மாதம் ஆரம்பமாகிறது. உடல் நலனில் சிறிது அக்கறைக் கொள்ள வேண்டி வரலாம். முக்கியமான காரியங்கள் சில இப்போது எந்த தடைகளும் இல்லாமல் எளிதில் நிறைவேறும். வேலை இல்லாதவர்களுக்குத் தகுந்ததொரு வாய்ப்பு கூடி வரும்.

**சிம்மம்**
மாத முதலிரண்டு வாரங்களில் ராசிநாதன் சூரியன் பன்னிரண்டாவது ராசியில் உலவிடுகிறார். மாதப் பிற்பாதி முழுவதும் ராசியிலேயே உலவிடுவார். ராசியை குரு நோக்குகிறார். தன வரவு திருப்தி தரும். அதே சமயம் பன்னிரண்டில் புதன் உலவுவதால் செலவுகளும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**கன்னி**
இதுவரை இருந்து வந்த பிரச்சனைகள் அகலும். பாகப்பிரிவினை சுமூகமாக முடியும். எப்பொழுதோ வாங்கிப் போட்ட இடம் இப்பொழுது நல்ல விலைக்கு விற்று மகிழ்ச்சியை வரவழைத்துக் கொடுக்கும். குரு உங்கள் தொழில் வீட்டை நோக்குகிறார். தொழில், வியாபாரம் சிறக்கும்.

**துலாம்**
செலவிற்கு ஏற்றவாறு வரவு வந்துகொண்டே இருக்கும். முதலிரண்டு வாரங்களில் திட்டமிட்ட காரியங்கள் சில திசை மாறிப் போக வாய்ப்புண்டு. கூட்டு முயற்சிகளில் மாற்றங்கள் செய்வீர்கள். வீடு கட்டும் முயற்சியில் ஏற்பட்ட தடைகள் விலகும்.

**விருச்சிகம்**
மாதப் பிற்பாதியில் செவ்வாய் மேஷ ராசியில் பிரவேசிக்கிறார். எடுத்த காரியங்கள் யாவும் வெற்றி பெறும். தொழில் வளர்ச்சிக்கு நண்பர்களும், உறவினர்களும் ஒத்துழைப்பு செய்வர். பாக்கியாதிபதி சந்திரனும், தனாதிபதி குருவும் ஒன்றாக உலவிட மாதம் தொடங்குவதால் பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**தனுசு**
ராசி நாதன் குரு, சந்திரனுடன் இணைந்து சஞ்சரிக்க இம்மாதம் தொடங்குகிறது. பொருளாதாரப் பிரச்சனைகள் அகலும். ராசியில் கேதுவும் சஞ்சரிப்பதால் உடல் நலனில் கவனம் தேவை. தொழில் வீட்டிற்குரிய புதன் 8ல் சஞ்சரிப்பதால் புதிய தொழில் தொடங்குவதை தள்ளிப்போட வேண்டி வரும்.

**மகரம்**
ராசியில் சனி உலவிடுவதால் செலவு அதிகரிப்பதற்கு ஏற்ற வகையில் பணவரவு அதிகரிக்கும். உறவினர்களும், நண்பர்களும் தக்க சமயத்தில் உதவி புரிவார்கள். குரு ஆறாமிடத்தை நோக்குவதால் நீதிமன்ற வழக்குகளில் வெற்றிக்கிட்டும். கொடுக்கல் வாங்களில் கவனம் தேவை.

**கும்பம்**
ஐந்தில் சஞ்சரிக்கும் ராகு பிள்ளைகளின் கல்வி விஷயத்தில் பிரச்சனைகளைத் தருவார். மாதத் தொடக்கத்தில் குரு–சந்திர யோகம் உள்ளதால் கடைசி நேரத்தில் காரியங்கள் யாவும் கூடி வரும். வெளிநாட்டிற்குச் செல்ல விரும்புகின்றவர்களின் எண்ணம் ஈடேறும்.

**மீனம்**
தொழிலில் லாபம் அதிகரிக்கும். மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும். உடன் இருப்பவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். தொழில் வீட்டில் குரு, சந்திரன் ஆகியோருடன் கேதுவும் சஞ்சரிப்பதால் தொழிலில் பல திருப்பங்கள் உண்டாகும். விலையுயர்ந்த பொருட்களைக் கையாள்வதில் கவனம் தேவை.



*Edited and Published on behalf of T.T.Devasthanams by **Prof. K.Rajagopalan**, Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. P. Ramaraju,** M.A., Special Officer (Press & Publications), T.T.D. Press, Tirupati - 517 507.*



# திருமலையப்ப ஸ்வாமி நவராத்திரி பிரம்மோத்ஸவம் 2020 அக்டோபர் 16 முதல் 24 வரை

**16-10-2020**
வெள்ளிக்கிழமை
பகல் : வைரகவச ஆபரணங்களுடன் தங்கத்திருச்சி உற்சவம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**17-10-2020**
சனிக்கிழமை
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ச வாகனம்

**18-10-2020**
ஞாயிற்றுக்கிழமை
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**19-10-2020**
திங்கட்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**20-10-2020**
செவ்வாய்க்கிழமை
பகல் : மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**21-10-2020**
புதன் கிழமை
பகல் : அனுமத் வாகனம்
இரவு : யானை வாகனம்

**22-10-2020**
வியாழக்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**23-10-2020**
வெள்ளிக்கிழமை
பகல் : தங்கத்திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**24-10-2020**
சனிக்கிழமை
பகல் : சக்கரஸ்நானம்
இரவு : திருச்சி உத்ஸவம்

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams
printing on 30-08-2020. Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020



# ஸ்ரீவிகனசாசார்யஸ்வாமி ஜெயந்தி

## 03-08-2020